# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28
விலை - 30 ரூபா

சுடர் 35 கதிர் 03 கார்த்திகை 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை 29 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## வெள்ளைவானில் கடத்தப்பட்டார் சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி!

சுவிஸ்லாந்துக்குத் தப்பிச் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரி நிசாந்த சில்வாவுக்கும், அவரது குடும்பத்துக்கும் நுழைவிசைவு வழங்கியதை அடுத்து கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் நுழைவிசைவு வழங்கும் பிரிவில் கடமையாற்றும் முக்கிய அதிகாரி வெள்ளை வானில் கடத்தப்பட்டார் என்று நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(விரிவான செய்தி பக்.19)

# போர்க் குற்றவாளியே கோத்தபாய ராஜபக்ச

## அவர் பன்னாட்டு நீதிமன்றில் ஏற்றப்படவேண்டும் என்று நேற்று முழங்கினார் வைகோ



புதுடெல்லி, நவம்பர், 29

இலங்கை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த ஒரு போர்க் குற்றவாளி – இவ்வாறு தெரிவித்தார் மதிமுக பொதுச் செயலர் வைகோ. 23

## வடக்கு, கிழக்கில் இந்த ஆண்டில் 5 லட்சம் பனம் விதைகள் நடுகை

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இந்த ஆண்டின் போகத்தின் போது சுமார் நான்கு லட்ச்த்தி 83 ஆயிரத்து 960 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது. பனம் விதைகள் நடுகை செய்யும் பணிகள் யாவும் முழுமையாக நிறைவு பெற்றும் உள்ளன. 23

## கோத்தா பதவியேற்றவுடன் நாட்டின் சுதந்திரம் பறிப்பு!

*போட்டுத் தாக்குகின்றார் தலதா*

கொழும்பு, நவ. 29

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பதவியேற்று 10 நாள்கள்தான். ஆனால், இன்று என்ன நடக்கின்றது? நாட்டின் சுதந்திரம் பறிபோய்விட்டது' இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரள தெரிவித்தார். ஐக்கிய தேசியக் 08

## புதுடில்லியை அடைந்தார் அரச தலைவர் கோத்தா!

புதுடெல்லி, நவ. 29

இரண்டு நாள் அரசமுறை பயணம் மேற்கொண்டு இந்தியா சென்ற அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச நேற்றுப் பிற்பகல் புதுடில்லியை சென்றடைந்தார்.

இந்திராகாந்தி பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் அரச தலைவர் உள்ளிட்ட இலங்கை தூதுக் குழுவினரை இந்திய அரச போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி 23



## வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோத்தபாயவுக்கு நினைவூட்டுங்கள்

*இந்திய அரசிடம் கோருகிறார் தமிழக இயக்குநர்*

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை அரசு இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளையை இந்திய அரசு, இந்தியாவுக்கு வந்துள்ள இலங்கை அரச தலைவருக்கு நினைவூட்ட 07

## முன்னணி, ஈ.பி.டி.பியினரால் மாநகரின் பாதீடு தோற்கடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாண மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், தமிழ்த் தேசிய மக்கள் முன் 23

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம்

## கட்சிக்குள் ஆலோசித்து யாரென்று இறுதி முடிவு

*அகிலவிராஜ் தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 29

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் 07

## தமிழரின் சடலம் புத்தளத்தில் மீட்பு

*கடத்தப்பட்டரா எனச் சந்தேகம்*

கொழும்பு, நவ. 29

கனடாவில் வசித்துவந்த தம்பிராஜா அம்பலவா 06

## திருத்தங்கள் தெரிவிக்காமல் தோற்கடிக்கப்பட்டது பாதீடு!

*முதல்வர் ஆனல்ட் ஆதங்கம்*

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்குரிய பாதீடு, உறுப்பினர்களால் எவ்விதத் திருத்தங்களும் தெரிவிக்கப்படாமல் தோற்கடிக்கப்பட்டது - என்று தெரிவித்தார் 23

மூன்று மாதம் ஒன்பது வீதம்

DFCC நிலையான வைப்பு


3 மாத நிலையான வைப்பிற்கு
DFCC வங்கி மிகச் சிறந்த
9% (AER 9.31%)* வட்டியை வழங்குகின்றது

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# கடவுள் சிலைகள் கருங்கல்லில் உருவாக்குவது ஏன்?



**கோவில்களில் உள்ள சிலைகள் பெரும்பாலும் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டு இருக்கும். அதற்கான காரணம் என்னவென்று தெரியுமா?**

பொதுவாக உலோகத்தின் ஆற்றலை விடக் கருங்கல்லின் ஆற்றல் பல மடங்கு அதிகம். எனவே கருங்கல் எந்த சக்தியையும் தன் வசம் இழுத்துக் கொள்ளும் தன்மை உடையது. அத்தகைய கருங்கல்லானது நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐந்து வகை பஞ்ச பூதத்தின் தன்மைகளையும் கொண்டுள்ளது.

- **நீர்** : கருங்கல்லில் நீர் உள்ளது. அதனால் தான் கல் தனது இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமல் இருக்கிறது.
- **நிலம்** : பஞ்ச பூதங்களின் தத்துவங்களில் ஒன்றான நிலம் கல்லில் உள்ளது. எனவே தான், கல்லில் செடி, கொடிகள் வளர்கின்றது.
- **நெருப்பு** : கல்லில் நெருப்பின் தன்மையும் உள்ளது. அதாவது, கற்களை உரசும் போது அதிலிருந்து தீப்பொறி பறக்கும்.
- **காற்று** : கல்லில் காற்றும் உள்ளது. அதனால் தான் கல்லில் தேரைகள் உயிர் வாழ்கிறது.
- **ஆகாயம்** : ஆகாயத்தைப் போல், வெளியில் உள்ள சப்தத்தை தன்னகத்தே ஒடுக்கி வைத்துப் பின் வெளியிடும் சக்தி கல்லுக்கு உள்ளதால்தான் கருங்கல்லில் கட்டப்பட்ட கோவில்களில் நாம் கூறுவது நமக்கு எதிரொலிக்கிறது.

இத்தகைய சிறப்பு சக்திகள் வேறு எந்த வகையான உலோகத்திலும் வெளிப்படுவதில்லை. கருங்கல்லினால் வடிவமைக்கப்பட்ட கோவிலில் அபிசேகம், அர்ச்சனை, ஆராதனைகள் முறைப்படி செய்யும் போது, அந்த கோவிலின் பஞ்ச பூதங்களின் தன்மை அதிகரிக்கிறது.

அத்தகையக் கோவிலில் நாம் வணங்கும்போது, எம் உடலில் நல்ல அதிர்வுகள் உண்டாகுவதுடன், எம் வாழ்வில் நல்ல பலன்களும் கிடைக்கிறது. எனவேதான், கோவில்களில் உள்ள சிலைகள் கருங்கல்லில் வடிவமைக்கப்படுகிறது..




கோசார ரீதியில் சனிபகவான் சந்திரன் நின்ற ராசிக்கு 2இல் சஞ்சரிக்கும் காலம் பாதச்சனி ஆகும். இதனால் குடும்ப சூழ்நிலையிலும் தன வருவாயிலும் சில சிக்கல்கள் நேரலாம்.

இதற்கு சனிக்கிழமையில் எள் முடிச்சிட்டு தீபம் ஏற்றி, சனிபகவானை வழிபட்டு எள் அன்னம், நைவேத்தியம் செய்து ஆராதித்து, அதனை ஏழைகளுக்கு வழங்கி, அப்படிப் பெறுகின்ற ஏழைகளுக்கு சில்லறைகளையும் தான தர்மங்களையும் செய்யலாம்.

வீட்டிலும் தினசரி சமைத்த உணவை உண்ணுவதற்கு முன்பு காக்கைக்கு வைத்து அது உண்ட பின்பு உண்பது நலம். ஒரு தேங்காயை பசுவாக ஆவாகனித்து ஆத்ம சுத்தியுடன் ஏழைகளுக்கு தானமாக வழங்கினால் போதும். வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் நவக்கிரஹ ஹோமம், சுதர்ஸன ஹோமம் போன்றவற்றை நடத்தினால் நல்லது.

**பாதச் சனி**

கல்வியிலும், பதவிகளிலும் எந்தவித முன்னேற்றம் இன்றி மந்த நிலையாகவே இருக்கும். வீடு கட்டுபவர்களுக்கு சரியான வேலையாட்கள் அமையாமல் வீட்டு வேலை பாதியில் நிற்கும் நிலை ஏற்படலாம். கால்நடைகள் மற்றும் வாகனங்களால் லாபம் இல்லாமல் போகலாம். தேவையில்லாத செயல்களால் பொருள் இழப்பு ஏற்பட்டு பண நெருக்கடி போன்ற சூழல் அமையலாம்.

வாக்கு ஸ்தானத்தில் சனிதேவர் இருப்பதால் தன் பேச்சாலேயே பிரச்சனைகளை தேடிக் கொள்வார்கள். பயன் இல்லாத பலஅலைச்சல்களை ஏற்படுத்துவார். பாதச் சனி நடைபெறும் காலங்களில் காலில் அடி, சுளுக்கு, புண், வாதம் போன்ற நோய்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு.



## வாஸ்து படி வீட்டுக்கு எத்தனை வாசல்கள் இருக்க வேண்டும்?

ஒரு வீட்டிற்கு முன்புற வாயில், பின்புற வாயில் என 2 வாசல்கள் இருக்கலாம். காற்று வந்து செல்வதற்கு 2 வாசல்களும் உதவுவதால், இதுபோன்ற அமைப்புடைய வீடுகள் வழமையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறன.

ஒரு சிலர் 3 வாசல் வைத்து வீடு அமைப்பார்கள்.

இதில் ஒவ்வொரு வாசலும் எந்தத் திசையில் உள்ளது என்பதை அறிய வேண்டும். முடிந்த வரை கிழக்கு, மேற்கு, வடக்கு திசையில் வாசல்கள் அமைப்பது நலம். தெற்கு பகுதியில் வாசல் இல்லாமல் இருப்பது நல்லது. அப்படி இருந்தால் வாஸ்து பார்த்து அதனை அடைக்கலாம்.

தென்கிழக்கு, தென்மேற்கில் வாசல்களும் அமைக்கக் கூடாது.

# கருட விரத வழிபாடும் திதிகளும்...



காக்கும் கடவுள் என்று போற்றப்படுபவர் மகாவிஷ்ணு. இவருடைய வாகனமாக இருப்பவர் கருடன். இவர் 'பெரிய திருவடி' என்றும் புகழப்படுகிறார். வானத்தில் வட்டமிடும் கருடனை கண்டு தரிசிப்பவர்களுக்கு, அவர்களைப் பிடித்த தோஷங்கள் அனைத்தும் அகலுவதாக ஐதீகம். அதனால்தான் பலரும், வானத்தில் கருடனைப் பார்த்ததும் 'கிருஷ்ணா.. கிருஷ்ணா..' என்று கன்னத்தில் போட்டுக் கொள்வதைப் பார்த்திருப்போம்.

ஏழரைச் சனி, அஷ்டமச் சனி போன்ற பாதிப்புகளில் இருந்தும் தற்காத்துக் கொள்ள கருட பகவானின் விரத வழிபாடு நமக்கு கைகொடுக்கிறது. நவக்கிரகங்களினால் ஏற்படும் அனைத்து விதமான தோஷங்களையும் விலக்குபவராகவும் கருடன் திகழ்கிறார்.

இவரை எந்தத் திதிகளில் வழிபட்டால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதை இங்கே பார்க்கலாம்.

**வளர்பிறை பிரதமை**: கண் திருஷ்டி, செய்வினை தோஷங்கள் அகலும்.

**தேய்பிறை பிரதமை**: வறுமை நீங்கி, குபேர சம்பத்து ஏற்படும்.

**வளர்பிறை திருதியை**: சந்திரனால் ஏற்பட்ட தோஷங்கள் நீங்கும்.

**வளர்பிறை சஷ்டி**: செவ்வாய் தோஷம் அகலும்.

**வளர்பிறை சப்தமி**: சூரிய பகவானால் உண்டான தோஷங்கள் நீங்கும்.

**வளர்பிறை சதுர்த்தி**: விநாயகப் பெருமானின் அருள் முழுமையாக கிடைக்கும்.

**வளர்பிறை நவமி**: கல்வி ஞானம், தேர்வுகளில் வெற்றி கிடைக்கும்.

**தேய்பிறை நவமி**: மரண பயம் நீங்கும்.

**தேய்பிறை தசமி**: குரு தோஷம் விலகும், புத்திர பாக்கியம் கிடைக்கும்.

**வளர்பிறை துவாதசி**: புதன் தோஷம் விலகும். அறிவாற்றல் பெருகும்.


**தேய்பிறை துவாதசி**: மகாவிஷ்ணுவின் நெஞ்சில் குடியிருக்கும் மகாலட்சுமியின் அருள் கிடைக்கும்.

**அமாவாசை**: ஆண் குழந்தை பிறக்கும் வரம் கிடைக்கும்.


**பௌர்ணமி**: மகாலட்சுமியின் அம்சமான பெண் வாரிசு பிறக்கும் யோகம் வாய்க்கும்.

வானத்தில் வட்டமிடும் கருடனை நாம் அனைத்து நேரங்களிலும் காண இயலாது. எனவே வைணவத் தலங்களில் அருளும் கருடாழ்வாரை வணங்கி, அவருக்கு துளசி மாலை அணிவித்து வழிபாடு செய்யலாம்.

## பொருத்தமானவற்றுக்கு இணைப்போம்



## வழிகாட்டுவோம்




## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி செல்சஸ் அந்தோனிப்பிள்ளை தி.கு.



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி செல்சஸ் அந்தோனிப்பிள்ளை நேற்று (28.11.2019) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (29.11.2019) வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இளவாலை கன்னியர் மடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### ஜெயரத்தினம் அற்புதராணி



அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயரத்தினம் அற்புதராணி நேற்று (28.11.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஜெயரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், பண்டத்தரிப்பு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அற்புதராஜா( தினமுரசு - ஆசிரியர்) அவர்களின் அன்பு சகோதரியும் யசோகுமாரியின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம், யோகமலர், அன்புமலர், மற்றும் அரசரத்தினம், தவமலர், குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பிரதாபன், ரேணுகா (இரண்டாம் வருடம், தொழில்நுட்ப பீடம், யாழ் பல்கலைக்கழகம்), துவாரகா ஆகி யோரின் அன்புத் தாயாரும், பிரியதர்சன், பிரியகாந், பிரியராஜ், சிந்துஜா, பானுஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2019) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை

தகவல்
குடும்பத்தினர்
076 8791699


# பீர்பாலின் புத்திசாலித்தனம்

பீர்பால், அறிவாற்றலும் புத்திக்கூர்மையும் உள்ளவர். எவ்வளவு பெரிய சிக்கலையும், தமதுஅறிவுத்திறமையாலேசமாளித்துவிடுவார் எனக் கேள்விப்பட்ட காபூல் அரசருக்கு, பீர்பாலின்அறிவாற்றலை ஆராய்ந்து அறிய ஆவல் ஏற்பட்டது.

அதனால் ஒரு கடிதத்தில், "மேன்மை தாங்கிய அக்பர்சக்ரவர்த்திஅவர்களுக்கு, ஆண்டவன்தங்களுக்கு நலன்கள் பலவும், வெற்றிகள் பலவும் தருவாராக. தாங்கள் எனக்கு ஒரு குடம்அதிசயம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன் என எழுதி கையெழுத்துப் போட்டு", தூதன்மூலமா அக்பருக்கு அனுப்பினார் காபூல் அரசர்.

கடிதத்தைப்படித்தஅக்பர்திகைத்து, ஒரு குடம் அதிசயம் அனுப்புவதா? ஒன்றுமேபுரியவில்லையே என குழம்பி, அரண்மனையை சுற்றி வளம் வந்தார். அக்பர் முகம் குழப்பத்தில் இருப்பதை பீர்பால் கண்டார். பீர்பால் அக்பரிடம் சென்று இதுபற்றி வினவினார்.

அக்பர் கடிதத்தை பீர்பாலிடம் கொடுத்தார். அந்தகடிதத்தைபடித்தார் பீர்பால்.

பீர்பால்நீண்டசிந்தனைக்குபிறகு, அக்பரிடம் மூன்று மாதத்தில் அதிசயம்அனுப்புவதாகபதில்எழுதுமாறு சொன்னார்.

அப்புறம் அக்பர், பீர்பாலிடம், ஒரு குடம் அதிசயம் எப்படி அனுபுவீர்? என்று விசாரித்தார்.

அதற்கு பீர்பால், மூன்று மாதம் கழித்து அந்த அதிசயத்தைப் பாருங்களேன்.

பீர்பால் யோசித்துக்கொண்டே அவர் வீட்டுக்குப் புறப்பட்டார். பிறகு பீர்பால் ஒரு மண் குடத்தை எடுத்தார். ஒரு பூசணிக்கொடியில் காச்சிருந்த பூசணிப்பிஞ்சு ஒன்றை கொடியோடு மண் குடத்திற்குள் வைத்தார். வைக்கோலால் குடத்தை மூடினார்.

நாளாக நாளாக பூசணிப் பிஞ்சு குடத்துக்குள்ளேயே நன்றாக வளர்ந்து பெருத்தது. குடம்நிறையுமளவிற்கு பூசணிக்காய் பெருத்ததும், பூசணிக்காயைத் தவிர மற்ற வைக்கோல், கொடி, காயின் காம்பு எல்லாவற்றையும் கத்தரித்து விட்டார் பீர்பால்.

இப்போதுஅந்தக்குடத்தைஅக்பரிடம்காட்டினார் பீர்பால். அக்பருக்கு ஆச்சரியம். குடத்தின் வாயோஉள்ளே இருக்கும் பூசணிக்காயைவிட மிகவும் சிறியது. இதனுள் இவ்வளவு பெரியபூசணிக்காயை எப்படி நுழைத்தாய்?

பீர்பால் அதை விளக்கிவிட்டு, அந்தப் பூசணிக்காய்குடத்தைஅப்படியேகாபூல்அரசனுக்கு, அதிசயம் என்று அனுப்ப சொன்னார்.

அக்பர்தூதன்மூலமாகஒருகடிதத்தையும்அந்த குடத்தையும் அனுப்பினார்.

கடிதத்தைகாபூல்அரசன்பிரித்துபடித்தார். அதில் "நீங்கள் கேட்டது போலவே ஒரு குடம் அதிசயத்தைஅனுப்பியுள்ளேன்." எனஎழுதிருந்தார்.. குடத்தின் மேல் இருந்த உரையை பிரித்தார் காபூல் அரசன்! அவரால் அதை நம்ப முடியவில்லை. காரணம் குடத்தின் வாயோ சிறியது.



அதற்குள் எப்படி பெரிய பூசணிக்காய் வைத்தார் என்று அவருக்கு புரியவில்லை. அன்று இரவு முழுவதும் இதையேநினைத்துக்கொண்டு இருந்தார். அடுத்த நாள் காபூல் அரசன் விஜய நகரம் புறப்பட்டார்.

காபூல் அரசன் இரண்டு நாள்களுக்கு பின்னர் விஜய நகரத்தை அடைந்தார். அவர் அக்பரிடம் சென்றுவிசாரித்தார். அதற்கு அக்பர் இதைநான் சொல்வதை விட பீர்பால் சொன்னால் நன்றாக இருக்கும்என்றுசொன்னார். வேலையாட்களிடம் பீர்பால் பற்றி வினவினார் அக்பர். அதற்கு அவர்கள்பீர்பால்பயிற்சிகூடத்தில்இருப்பதாககூறினர். சிறிது நேரத்துக்குப் பிறகு அக்பர் மற்றும் காபூல் அரசன் இருவரும் பயிற்சி கூடத்துக்குச் சென்றனர். அங்கே பீர்பாலை சந்தித்தனர். பீர்பாலும் அதை எவ்வாறு செய்தான் என்று விளக்கினார். அதைக் கேட்ட காபூல் அரசன் பீர்பாலின் புத்திக்கூர்மையை எண்ணி வியந்தார்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 27 - 10 - 1947

இறப்பு 28 - 11 - 2019

## திருமதி சந்தானலட்சுமி சிங்கராசா

பலாலி வீதி, கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தானலட்சுமி சிங்கராசா நேற்று (28.11.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காஞ்சென்றவர்களான மாணிக்கம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிங்கராசாவின் (அப்பன்) அன்பு மனைவியும், விஜயானந் (ஆனைக்கோட்டை), புறொக்ஸ் ஆனந் (றொக்சன், உரும்பிராய், பர்வதவர்தினி, கட்டடப்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்),பர்வதவர்தினி, சர்வானந் (ஆனந் , கந்தர்மடம்), றனீஸ் ஆனந் (அனீஸ் நவாலி), நிறோஜனா (ஊரெழு), சதீஸ் ஆனந், (பொத்தன் கந்தர்மடம்), டில்குவா ஆகியோரின் பாசமிகு தாயாரும் வாசுகி, பிருந்தா, திவ்யா (மாகாணக் கல்வித் திணைக்களம்), கோசி, சிந்து, நிஷாந்தி, சுரேஸ்குமார் (உரிமையாளர், சுரேஸ் ஸ்ரோர்ஸ்- சுன்னாகம்) நிஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிறின்சிலா, வியான்சி, விேனோவீன்ஸ், தசானந், மகிசாந், பகுமிந்திரன், அட்ஷரா, தஸ்வின், ஆகியோரின் பேர்த்தியும் ரித்திக், பிரித்திக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29.11.2019) வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 977 3327, 076 634 2322, 077 7065843**

# பாம்பின் விசம் ஏன் கீரியைத் தாக்குவதில்லை

கீரியின் தோல் தடிமனானது. அத்துடன் முடியும் இருக்கும். பெரும்பாலும் பாம்பின் கடி படாத படிதான் தாக்குதலை மேற்கொள்ளும். ஒருவேளை பாம்புக் கடித்துவிட்டால், கீரியின் உடலிலுள்ள நிகோடினிக் அசிட்டைல்கோலின் என்ற எதிர்ப்பாற்றல் விசத்தை முறியடித்துவிடும். அதனால் பாம்புடன் கடுமையாகச் சண்டை போட்டாலும் கீரிக்குப் பாதிப்பு இல்லை.

கழுகுக்குப் பாம்பின் விசத்தை முறிக்கக்கூடிய எதிர்ப்பாற்றல் கிடையாது. ஆனாலும் வேகமாகச் செயல்படுவதால் பாம்பின் கடியிலிருந்து தப்பிவிடுகிறது. இமைக்கும் நேரத்தில் பாம்பைத் தூக்கிக்கொண்டு உயரத்துக்குச் சென்றுவிடும். பிறகு திடீரென்று பாம்பைப் பாறை மீது வீசும். இறுதியில் பாம்பைக் கொன்றுவிடும்.

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



காரைநகர் ஆலடியைச் சேர்ந்த

## அமரர் கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

(இளைப்பாறிய OA , வவுனியா கச்சேரி)

அன்னை மடியில் 03.10.1932

ஆண்டவன் மடியில் 25.11.2014



ஆண்டு ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் ஐயா!
பொறுப்புள்ள தந்தையாய் எம்மை வளர்த்தெடுத்து
எங்களுக்கும் உலகத்துக்கும் உத்தமனாய் வாழ்ந்து
எம்மை பரிதவிக்க விட்டு சென்று விட்டீர்களே ஐயா!
நாங்கள் உங்கள் நிழலில் இருந்து வாழ்ந்ததை மறவோம் ஐயா!
பாசம் ஒன்றை தவிர வேறென்ன நாம் தந்தோம் ஐயா!
எம் ஆயுள் அகராதியில் இழப்பெனும்
சொல்லுக்கு இலக்கணமாய் என்றென்றும் நீங்கள் இருப்பீர்கள் ஐயா!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**

காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.


**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

ஆலடி,
காரைநகர்

என்றென்றும் உங்கள் நினைவலைகளுடன்
குடும்பத்தினர்.

(cs29415) (13/17)

# மரண அறிவித்தல்



## கரோலிஸ் செபஸ்தியாம்பிள்ளை

விளானை பிறப்பிடமாகவும் யாழப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கரோலிஸ் செபஸ்தியாம்பிள்ளை நேற்று **(28.11.2019)** வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரோலிஸ் மரியை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான லூயிஸ் ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லில்லி மாகிரெட் (றுக்மணி) அவர்களின் அன்புக் கணவரும் கலிஸ்ரா, சுலீனா, காலஞ்சென்ற அனஸ்லின் மற்றும் நியூட்டன், வத்சலா, சுரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமன், சிந்தாத்துரை, இந்திரா,ஜஸ்ரின், வதனி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான மனவல், ஜோசேப்பு மற்றும் மாகிறேற், அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திரேசா, ஜஸ்மின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று **(29.11.2019)** வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் **3.00** மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.46, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**077 328 2304**

(CS20583(16/17)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## A.N. லியனார்டோ அடம்ஸ் அலோசியஸ்

(மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை உயிரியல் பிரிவு மாணவன்)

பிறப்பு 27.06.2000

இறப்பு 29.11.2017



எம் குடும்பக் கொடிதனிலே பூத்த முதல் பூவே
அன்புள்ளத்தோடு அறிவு மிகப் பெற்றவனே
ஆணிப்பொண் நிறைத்தடைத்த அழகான பெட்டகம் நீ
பேணி உனை வளர்த்து பெருகையுற நாமிருந்தோம்
தாயாய் என் பெயரும் விளங்குமென பூரித்து
பார்த்திருந்தேன் பாசமெனும் போர்வையதால் மூடி
உன் வளர்ச்சி கண்டே உள்ளம் மகிழ்கையிலே
ஒரு நொடியில் சாவு வந்து உன்னை அழைத்ததுவோ
காரணத்தைக் கேட்டேன் இறைவன் அவன் கணக்
–கிதற்கு
காணாமல் விடை எதுவும்
–கண் வழியும் நீர் ஆறாய்
இரண்டாண்டு ஓடி
–மறைந்ததுவோ
உம் இறைவன்
–பாதத்தில் இளைப்பாற
பிரார்த்தித்து நிற்கின்றோம்.



**தகவல்:-**

விலாசம்: உதயசூரியன் வீதி, உடுவில்.


தாய் ஜெ. தனுஜா
சகோதரன் கஷினோ

CS24178(16/17)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் வீரசிங்கம் அரியரட்ணம்**

மண்ணில் 11.09.1957
விண்ணில் 27.11.2016



அன்பின் பிறப்பிடமாய்
அழகின் ஓவியமாய்
ஆசையின் இருப்பிடமாய்
இரக்கத்தின் இமயமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் நீரிருந்தீர்
சகோதர பாசங்கொண்டவாய்
நீயிருந்தாய் எம் அரியமே
உன் அன்பான வார்த்தையைக் கேட்டு
ஆயிரம் நாட்கள் ஆனதடா
எமையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கு சென்றாய் எம் அரியமே
தாங்கமுடியவில்லையடா உந்தன் இழப்பை
இனி எப்போது இவ்வுலகில் வந்துதிப்பாய்
எம் அரியமே உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
உன் பிரிவைத்தாங்க முடியாமல்
தவிக்கும் சகோதரர்கள்

மன்னார் வீதி,
நெளுக்குளம், வவுனியா.

வீரசிங்கம் குடும்பத்தினர்

(CS 29381) (13.17)

# பலாலி சுங்க பணியாளர்களுக்கான விடுதிவிலை மனுக்கோரல்

## இலங்கைச் சுங்கம் - நிதி அமைச்சு

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பலாலி விமான நிலையத்தில் பணியில் ஈடுபட்டிருக்கும் சுங்க அதிகாரிகளின் தங்குமிடத் தேவைக்காக கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்**

01) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பலாலி விமான நிலையத்தின் பணியில் ஈடுபட்டிருக்கும் சுங்க பணியாளர்களின் தங்குமிட தேவைக்காக கட்டிடம் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தேவையுள்ளது. அந்தக்கட்டிடம் பின்வரும் தேவைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

* குறித்த இடமானது யாழ்ப்பாண நகரம் மற்றும் பலாலி விமான நிலையத்துக் கிடையில் 20 கி.மீ தூரத்தில் இருத்தல் வேண்டும்.
* குறைந்த பட்சம் 08 அறைகள் குளியலறைகளுடன் சேர்ந்து இருத்தல் வேண்டும் என்பதோடு. தரை டைல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். வரவேற்பு மண்டபம். சமையலறை மற்றும் உணவு அறையுடன் இருத்தல் வேண்டும்.
* மின்சாரம் மற்றும் நீர் வசதிகளுடன் இருத்தல்.
* குறைந்தபட்சம் 03 வாகனங்கள் ஒரே நேரத்தில் நிறுத்துவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும் என்பதோடு வீட்டுக்கு இலகுவாக நுழைய முடியுமாக இருத்தல் வேண்டும்.
* அனைத்து அறைகளுக்கும் வாயு சீராக்கல் வசதி இருத்தல்.
* பாதுகாப்பு வேலி அல்லது வேலிச் சுவர் மற்றும் வாயில் கதவுடன் இருத்தல்.
* ஒவ்வொரு அறைகளிலும் இரு அலுவலர்கள் தங்குவதற்கான வகையில் இரு கட்டில்கள் அடங்கலாக தளபாடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் மண்டபம் மற்றும் உணவறை என்பவற்றிலும் உரிய தளபாடங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
* சூரிய மின்சக்தி மூலம் மின்சார வசதியினை கொண்டிருப்பதானது மேலதிக தகைமையாக கருதப்படும்.
* உங்கள் மூலம் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற கட்டிடத்தின் தளவரைபடம் மற்றும் குறித்த நிலத்தின் உறுதிப்பத்திரத்தின் நகல் பிரதி ஒன்றை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். உரிய நிலத்தின் உரிமையாளர் இல்லாத விடத்து வேறு நபரானால் விலை மனுக்கள் சமர்ப்பிக்கின்ற வேளை அற்றோனி தத்துவம் (powerof Attorney) ஒன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
* எதிர்பார்க்கப்படும் ஒப்பந்தத்துடனான காலம் 01 வருடமாகும்.

02. கட்டிட வளவில் இருப்பது. அதிலிருக்கும் வசதிகள். கட்டிடத்தின் மாதாந்த வாடகை மற்றும் ஏனைய நிபந்தனைகளும் உள்ளடங்கலாக உங்களது விலை மனுக்களை (வரி செலுத்துதல் தொடர்புபட்டிருந்தால் வரி சான்றிதழ்) கடித உறை ஒன்றில் இட்டு முத்திரையிடப்பட்டு கொழும்பு 11. பிரதான வீதி இல 40 இல் அமைந்துள்ள சுங்க தலைமையக கட்டிடத்தின் 06வது மாடியில் அமையப்பெற்றுள்ள சேவை வழங்கல் பிரிவிற்கு 2019.12.18 அன்று பி.ப 2.00 க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்கல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெறுகைப் பெட்டியில் போட வேண்டும்.

03. முத்திரை பொறிக்கப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“பலாலி சுங்க அதிகாரிகளுக்காக வாடகை வீடு“** என்று குறிப்பிடல் வேண்டும்.

04. பெறுகைப்பத்திரங்கள் பொறுப்பேற்கப்படுவது **2019.12.18** ஆந் திகதி **பி.ப. 2.00க்கு** முடிவுறும். அன்றைய தினம் **பிற்பகல் 2.00** மணிக்கு பெறுகைப்பத்திரங்கள் திறக்கப்படுவதோடு. அந்தசந்தர்ப்பத்திற்காக பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.


05. சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் வசமானது.

06. மேலதிக விபரங்களுக்கு சுங்கப்பணிப்பாளர் (சேவை வழங்கல்) தொலைபேசி இல : **011 - 222 1680** மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகைக் குழு தலைவர்,**
**இலங்கை சுங்கத் திணைக்களம்,**
**சுங்க தலைமையகம்,**
**இல.40, பிரதான வீதி,**
**கொழும்பு - 11.**

(C.34115) (13.17)

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 12 - 01 - 1942

மறைவு 25 - 11 - 2019

## தம்பையா லங்காநேசன்

(முன்னாள் வவுனியா அரசாங்க அதிபர், மேலதிக செயலாளர். புனர்வாழ்வு புனரமைப்பு புனருத்தாரண அமைச்சு. கப்பல்துறை துறைமுகங்கள் அமைச்சு. Necord திட்டப்பணிப்பாளர்)

யாழ். கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும். மயிலிட்டி. வவுனியா. கொழும்பு. கனடாவில் வசித்தவருமான தம்பையா லங்காநேசன் அவர்கள் 25.11.2019 அன்று (AUSTIN, TEXAS) அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - விஜயலக்ஷ்மி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும். காலஞ்சென்ற கனகராஜா - தையல்நாயகி அம்மாள் தம்பதியரின் மருமகனும் மற்றும் காலஞ்சென்றவர்களான விஜயரெத்தினம். விஜயநாயகம் ஆகியோரின் மருமகனும். பத்மராணியின் அன்புக் கணவரும். ஜயந்தன் (AUSTIN, U.S.A), விஜயதர்ஷினி (OTTAWA, CANADA) ஆகியோரின் பாசமிகு தந்தையும். ஜெயச்சந்திரன். ராதிகா ஆகியோரின் மாமனும். லங்கநாயகி. லங்கரெத்தினம் மற்றும் காலஞ்சென்றவர்களான ராசமணி. சச்சிதானந்தம் ஆகியோரின் அருமைச் சகோதரரும். பாலச்சந்திரன். சாந்தினிதேவி. கனகமனோகரன். கருணாகரன். புஷ்பராணி. தயாபரன். ரமணாகரன். காலிங்கராசா மற்றும் காலஞ்சென்றவர்களான பாக்கியசோதி. ஞானபாஸ்கரன். பிரபாகரன் ஆகியோரின் மைத்துனரும். கணேசன். ஜெகதீஸ்வரி (துங்கன்). கௌரிபாய். தயானி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும். கிருஷ்ணஜோதி. பிரசன்னா. பிரதாபன். கனகாம்பிகை (அம்மன்). மிதிலா. நில்மினி. ஜெயசீலன். ஆகியோரின் மாமனாரும். கிரிசாந்த் இன் பெரியப்பாவும். ஸஹானா. ஹரிணி. இனியாள். ஸ்ரீநிதி. மேகாஷினி. ஜென்சியா. கவிஷாளினி கலையரசி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் COOK - WALDEN/CAPITAL PARKS (14501 N.IH 35 Pf Lugerville AUSTIN Tx 78660 - U.S.A) மலர்ச்சாலையில் 01.12.2019 அன்று காலை 8.00 மணியிலிருந்து 11.30 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் 12.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

| | | | |
|---|---|---|---|
| ஜயந்தன் | (மகன்) | - அமெரிக்கா | - 1 - 512 - 731 - 5761 |
| விஜயதர்ஷினி | (மகள்) | - கனடா | - 1 - 647 - 867 - 6800 |
| லங்கநாயகி | (சகோதரி) | - இலங்கை | - 0094 - 077 260 4221 |
| கனகமனோகரன் | (மைத்துனர்) | - கனடா | - 1 - 416 - 531 - 1650 |
| கணேசன் | (சகலன்) | - இலங்கை | - 0094 077 801 4283 |

(CS. 29573) (13)



தோற்றம் 17 - 02 - 1942

மறைவு 27 - 11 - 2019

## அரியகுட்டி கந்தையா அன்ரனி

**(கன்டோ அங்கிள்)**

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர் - இலங்கை புகையிரத திணைக்களம்)**

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும். றக்கா வீதி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி கந்தையா அன்ரனி 27.11.2019 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - அழகம்மா தம்பதிகளின் அன்பு மகனும். அருள்மேரியின் (சின்னமலர்) அன்புக் கணவரும். பிறட்லி (வலயக் கல்விப் பணிப்பாளர். மன்னார் வலயம்). றொக்சன் ஜெகன் (உதவிமுகாமையாளர் - வியாபார அபிவிருத்தி யூனியன் அசூரன்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். சுனிதா ஜரின். மேரிவசந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும். வின்ஸ்நிலா. ஜெய்சன். வெஸ்ரினா. வற்சன். தரன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல.27/14 றக்காவீதி. யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29.11.2019) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக வசந்தபுரம் எக்காளத்தொனி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.27/14, றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS/29570)(11,17)

**077 911 6282**

ELTC INTERNATIONAL
மீசாலை - *Meesalai*
*English Medium*
*Pre School Admission for 2020*

**முன்பள்ளி அனுமதி 2020**
முதலில் அனுமதி பெற்றுக்கொள்ளும் 25 மாணவர்களுக்கு ~~2500~~ அறவிடப்படமாட்டாது. சீருடை இலவசம். அத்துடன் 2020 ஆண்டுக்கான மாதாந்தக் கட்டணம் **1500/-** மட்டுமே ~~2500~~ இந்த அரிய வாய்ப்பை உங்கள் பிள்ளைக்கு வழங்குவதற்கு அழையுங்கள்.

**ELTC INTERNATIONAL**
மீசாலை சந்தி, மீசாலை.
077 074 3131
077 067 3131 (Viber) Director
(AKN 379)(11.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 . 02 . 1963 — உதிர்வு 09 . 12 . 2018



நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கணேசலிங்கம் வேகாவனம்



ஒருகொடியில் பூத்த மலர்களாய் ஒன்றெனப் பிறந்தோம்
உன்னதமான பண்பினை – உன் உள்ளத்தில் கண்டோம்
அன்னையைப் போலவே அன்பினை வளர்த்தாய்
குன்றெனவுயர் குணங்களைக் கொண்டு
அனைவர்க்கும் தெய்வ அவதாரம் தந்தாய்
அழுது புலம்பியும் ஆறாதையா உன் சோகம்
பாசத்தைப் பொழிந்து பரிவு காட்டிப்
பரிதவிக்கும் நிலையை ஏன் எமக்குத் தந்தாய்
ஓராண்டு வந்தும் ஓயவில்லை உம் சோகம்
மாறாதையா நாம் மறையும் வரை உன் தாகம்
எம் விதி முடியும் வரையில் உறங்கி விழிக்கின்றோம்
தினமும் உன் திருவுருவம் வந்து பேசாதா? என்று
வருவாய் ஐயா! மீண்டும் எம் உடன் பிறப்பாய்
வணங்கி நிற்போம் உன் பாதக்கமலம்.

பிரிவால் துயருறும் **உடன் பிறப்புக்கள்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 11 . 1943 — இறப்பு 27 . 11 . 2019



### ஆறுமுகம் சிவபாக்கியம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாக்கியம் 27.11.2019 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவசோதி அம்மா (வவுனியா), குணரஞ்சன் (வவுனியா), குணநேசன், குணநாதன் (லண்டன்) காலஞ்சென்ற குணநீதன், குணதீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செபதாஸ் - ராகினி, ஜெயந்தி, தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கந்தசாமி, சின்னம்மா, சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வேலாயுதரின் (கோப்பாய்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தச்சன்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி. தகவல் : குடும்பத்தினர்.

077 611 0042 - மகன்
077 419 8325 - சகோதரன்

*தமிழரின்...*

னர் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் இலங்கை வந்திருந்த நிலையில் புத்தளத்தில் தொடருந்துத் தண்டவாளங்களுக்கு இடையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரவுகின்ற போதிலும் 'கடத்தப்பட்டார்' என்ற குற்றச்சாட்டை புத்தளம் பொலிஸார் மறுத்துள்ளனர். அவ்வாறான முறைப்பாடு எதுவும் தம்மிடத்தில் இல்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ம-22)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 30.11.2019 (சனிக்கிழமை) அன்று பி.ப.4.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி வாழ்நாள் பேராசிரியர் கதிர்காமநாதன் கந்தசாமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2018ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களை அன்று பி.ப.3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு தவறாது வருகைதருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# Invitation for Bids (IFB)
## Jaffna Municipal Council
## Procurement of Street Light

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council -Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Engineer, Jaffna Municipal Council. TP:-021 2222019, 021 2228874 Fax: 021 2222334 Email- mcjaffnamailt@yahoo. com Office hours from 0900 hrs to 1530 hrs.
4. Qualification requirements include: possessing the minimum 3 years experience in selling and having island wide maintenance in the particular brand and field. A margin of preference for eligible locally produced goods offered shall not apply. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Document is English language could be purchased by interested bidders from the address given below from **29th November 2019 until 19th December 2019 from 09.00 hrs to 15.00 hrs** on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs 2,000.00 + All Taxes the payment method will be cash or bank draft drawn in favour of Commissioner, Jaffna Municipal Council.
6. Bids must be delivered to the address given below on or before 20th December 2019 at15.00 hrs bid number must be written on the top of the envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. A pre bid meeting will be held at Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on 12th December 2019 at 10.30hrs, interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is **Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna.**
9. The bid validity shall be until: **06.03.2020 (77 days after the deadline for bid submission)**

28.11.2019

| Ser. No | Bid No | Name of Item | Period of Contract | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Amount | Required period |
| 1 | JMC/WD/Street Light /2019-143 | 30 Watts Street Light-400 nos( Energy serving bulb)<br>50Watts single high power COB LED Street Light –550 nos<br>100Watts Double high power COB LED Street Light –130 nos<br>150Watts triple high power COB LED Street Light – 90 nos<br>100Watts Sodium Vapour Street Light –50 nos<br>150Watts Sodium Vapour Street Light –55 nos | 2week | 80,000.00 | 03.04.2020 |

**Commissioner,**
**Regional procurement committee,**
**Jaffna Municipal Council,**
**Point Pedro Road,**
**Jaffna.**

(C. 11819) (13)

# விடுகதைகள்

1. காக்கைப் போலக் கருப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?
2. தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?
3. ஒரு கிணற்றில் ஒரே தவளை அது என்ன ?
4. வால் உள்ள பையன், காற்றில் பறக்கிறான் அது என்ன ?
5. ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும், கடித்தால் சுவைக்கும் அது என்ன ?
6. பட்டுப்பை நிறைய பவுண் காசு அது என்ன ?
7. ஒருவனுக்கு உணவளித்தால் ஊரையே கூட்டுவான். அவன் யார்?
8. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார் ?
9. சலசலவென சத்தம் போடுவான் சமயத்தில் தாகம் தீர்ப்பான் அவன் யார் ?
10. வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன ?

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 805
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.28
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 68,414,160/-
வெற்றி இலக்கங்கள்
29 50 74 77 A

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28.11.2019
வெற்றி வாரம் 2691
வர்ணம் கபிலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 14 16 39 58
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 915, 364/=
29.11.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1625
சீட்டிழுப்பு திகதி 28.11.2019
வெற்றி இலக்கங்கள் 01 10 15 58 Y
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.41, 714, 288 /=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# விடைகள்

| | |
|---|---|
| 1.நாவல் பழம் | 6. மிளகாய் |
| 2. தேங்காய் | 7.காகம் |
| 3. நாக்கு | 8. பூமி |
| 4. பட்டம் | 9.அருவி |
| 5. கரும்பு | 10.தீக்குச்சி |



# சிவகார்த்திகேயன் படத்தில் இணையும் பிக்பாஸ் பிரபலம்

நடிகர் சிவகார்த்திகேயன் நடிப்பில் அண்மையில் வெளியான நம்ம வீட்டு பிள்ளை திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனை தொடர்ந்து பி.எஸ்.மித்ரன் இயக்கத்தில் அவர் நடித்துள்ள 'ஹீரோ' படமும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வெளியாகவுள்ளது.

தற்போது 'கோலமாவு கோகிலா' படத்தை இயக்கிய நெல்சன் இயக்கும் புதிய படத்தில் சிவகார்த்திகேயன் நடிக்க உள்ளார். இந்தப் படத்துக்கான நடிகர், நடிகைகள் தேர்வு நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், இந்தப் படத்தில் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரபலமான கவின் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இயக்குநர் நெல்சன், சிவகார்த்திகேயனுடன் கவின் இருக்கும் ஒளிப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## வாக்குறுதிகளை...

வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த இயக்குநர் மு.களஞ்சியம் முல்லைத்தீவில் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் நிறைவடைந்து 10 வருடங்களின் பின்னர் இலங்கை மண் எப்படி இருக்கின்றது என்று பார்ப்பதற்காக இங்கு வந்தேன். போரின் பின்னர் அதன் வலியால் துன்புற்றுக்கொண்டிருக்கும் மக்களை நேரடியாகச் சந்திக்கவேண்டும், போர்நடைபெற்ற பகுதி என்ன சூழலில் இருக்கின்றது என்று நேரடியாகக் காண வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்துள்ளேன். இங்கு மக்களைச் சந்தித்துப் பேசும்போது அவர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடிந்தது.

கொழும்பிலிருந்து பலாலி வானூர்தி நிலையம் வந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களைச் சந்திக்க பல்கலைக் கழகத்துக்குச் சென்றிருந்தேன். பல்கலைக் கழகம் மூடப்பட்டிருந்தது. மாணவர்கள் வீதியில் நின்றி ருந்தார்கள். மாணவர்கள் மாவீரர்கள் நிகழ்வைக் கொண்டாடக்கூடாது என்பதற்காகப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருந்தது.

சிறப்பு அனுமதி பெற்று பல்கலைக் கழகத்துக்குச் சென்று அங்கு இருக்கக்கூடிய பல்துறைகளையும் தெரிந்துகொண்டேன். பின்னர் இங்கு வந்து போர் நடந்த பகுதிகளை அவதானித்தேன். அரசதலைவரான பின்னர் கோத்தபாய ராஜபக்ச முதன்முறையாக இந்தியாவுக்குச் செல்கின்றார்.

போர்க் காலகட்டத்தில் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று இந்திய அரசு இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டது. அன்றைய அரசதலைவர் மகிந்த ராஜபக்ச அந்தக் காலத்தில் பல வாக்குறுதிகளை இந்தியாவுக்கு வழங்கியிருந்தார்.

அதில் ஒன்று, 13ஆம் சட்டப்பிரிவுக்கு மேலதிகமான அதிகாரத்தை தமிழர்களுக்கு வழங்குவோம் என்று சொன்னார். சிவசங்கர்மேனன், ஆர்.கே.நாராயணன் போன்றவர்கள் அந்த வாக்குறுதிகளைப் பெற்று இந்தியத் தலைமை அமைச்சருக்குச் சொல்லியிருந்தார்கள். ஆனால் குறித்த வாக்குறுதிகளில் எதையாவது மகிந்த ராஜபக்ச கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றினாரா என்று கேட்டால் இல்லை. எனவே இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின் புதிய அரச தலைவர் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளையை இந்திய அரசு நினைவூட்ட வேண்டும்.

இங்கு போருக்குப் பின்னர் மனவலியில் வாழ்ந்து கொண்டிருக்ககூடிய ஈழத் தமிழர்களுக்கு மருந்திடுகின்ற ஆறுதலான செய்தியாக இது இருக்கும் என்று நினைக்கின்றேன். போர்க் காலத்தில் இராணுவப் பொறுப்பிலிருந்த ஒருவர் அரசதலைவராக வந்திருப்பதால் அந்த அச்சம் எல்லோரின் மனதிலும் படர்ந்திருக்கின்றது. நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இலங்கை அரசு கைவிட வேண்டும்- என்றார். (ம-த-ரி3)

## கட்சிக்குள்...

கட்சிக்குள் கலந்துரையாடி சுமுகமான முறையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எவ்வித உள்ளக முரண்பாடுகளும் இல்லை. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் யாரென்பது குறித்து கட்சிக்குள் பேச்சு நடத்தி இறுதி முடிவு எடுக்கப்படும்' -என்றார். (ம-22)

Macktiles LANKA
65% வரை விலைக்கழிவு
ஏற்றுமதியிலிருந்து அகற்றப்பட்ட
உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான
மெக்டைல்ஸ்
கையிருப்பை நிறைவு செய்வதற்கான..
மாபெரும் சேல்...
வாருங்கள், உங்கள் இல்லத்துக்கு, அலுவலகத்துக்கு, வியாபார நிலையங்களுக்கு பொருத்தமான சகல வடிவங்களிலுமான கவர்ச்சிகரமான டைல் வகைகள் ஒரே கூரையின் கீழ்....
2'x2' ரூ.475/=
மொரட்டுவ - அசாம் 071 6 095 886
கடுவெல - ஷெஹான் 070 3 551 552
ராஜகிரிய - பர்ஹான் 071 0 676 161
கொள்ளுப்பிட்டி - சஹீர் 070 4 312 547
தலவத்துகொட - காமினி 071 0 745 638
திஹாரிய - பர்ஹான் 071 0 676 161
தம்புள்ளை - பண்டார 071 4 524 346
நீர்கொழும்பு - ஷெஹான் 071 0 551 552
பதுளை - நஜீப் 071 9 800 322
யாழ்ப்பாணம் - நதீர் 071 0 943 524
சம்மாந்துறை - நபான் 071 0 300 434
காலி - நஜீப் 071 9 800 322
மாத்தறை - சஜாத் 071 3 173 212
காலை 09.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை திறந்திருக்கும்.
Macktiles LANKA




**முதியோர் நோயாளர் காப்பகம்**

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் "Medihelp" (அம்மா இல்லம்) சகல நோயாளர்கள், முதியோர் பராமரிப்பு. Home Nursing சேவையும் உண்டு.

077 712 6859, 077 712 6857




## கோத்தா...

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தின் மூலம் மகிந்த ராஜபக்ச தனக்காக ஏற்படுத்திக் கொண்ட அதிகாரங்களை நாம் 2015ஆம் ஆண்டு 19ஆவது திருத்தத்தின் மூலம் குறைத்தோம். நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்து அந்த அதிகாரங்களை நாம் நீதிமன்றத்துக்கு வழங்கினோம்.

சுயாதீன ஆணைக்குழுக்களை நாம் நிறுவியுள்ளோம். இலங்கை வரலாற்றில் தூய்மையான தேர்தல் 2019ஆம் ஆண்டே நடந்தது. நாம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். 2015ஆம் ஆண்டு நாம் ஓடி ஒழிந்து தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தோம். இந்த அரச தலைவருக்கு மக்கள் வாக்களித்தார்கள்; இருந்தாலும் அவருக்கு எதிராக வாக்களித்த மக்களும் இந்த நாட்டில் உள்ளார்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் தற்போது சுதந்திரம் பறிபோய்விட்டது. இது உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்' - என்றார்.

(ம-22)

**வெள்ளவத்தையில் அறைகள்**

- ஒருவருக்கு - 1300 • இருவருக்கு - 1950
- மூவருக்கு - 2500 இணைந்த குளியலறை

HOTEL VILLA WALLAWATTE
077 796 7878



# பேசாலை மக்களின் பாதுகாவலி வெற்றி நாயகி

■ வாஸ் கூஞ்ஞ

இருநூறு வருடங்களுக்கு மேலாகப் பேசாலை கத்தோலிக்க மக்களின் பாதுகாவலியாக வீற்றிருக்கும் புனித வெற்றிநாயகியின் நாமம் கொண்ட வருடாந்த ஆலய விழாவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை பங்கில் புனித வெற்றி நாயகி ஆலயத்தில் கொடியேற்றம் இடம்பெறுகின்றது.




**ஆலய வரலாறு**

சுமார் ஆயிரத்து 500 மேற்பட்ட கத்தோலிக்க குடும்பங்கள் இந்த ஆலயக் கட்டுக்கோப்புக்குள் இருந்து வருகின்றனர். காலத்துக்குக்காலம் இலங்கை நாட்டை தாக்கிய அசுரங்களில் இருந்து இங்கு பேசாலைப் பதியில் வீற்றிருக்கும் புனித வெற்றியன்னை மக்களை காத்த பேரருள் இங்குதான் இருந்தது என சரித்திரம் கூறுகின்றது. அதாவது கடற்பெருக்கு, சூறாவளி, கொள்ளைநோய், படை, பஞ்சம், பிணி எது இங்கு வந்தபோதும் அன்னையின் வெற்றிக்கரம் இங்குள்ள மக்களை காத்தது என்று இங்குள்ள வரலாறு கூறு கின்றது.

**திருத்த வேலைகள்**

முன்னர் கொச்சின், யாழ்ப்பாணம் ஆகிய மறை மாவட்டங்களிலும் பின்னர் மன்னார் மறை மாவட்டத்தின் மேற்றாசனத்தின் கீழும் இந்த ஆலயம் தேவைக்கேற்ப திருத்த வேலைகள் இடம்பெற்றிருக்கின்றன.
அதாவது 1890, 1913, 1959, 1970 ஆகிய பகுதிகளில் இந்த ஆலயம் திருத்தப்பட்ட போதும் இங்குள்ள கத்தோலிக்க மக்களின் சனத்தொகைக்கு ஆலய இடவசதி போதாமையால் 2001 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளாரின் (அ.ம.தி) முயற்சியால் ஆலயம் 17000 சதுர அடியாக சீரமைக்கப்பட்டு இலங்கையிலேயே இது ஒரு பிரமாண்டமான ஆலயமாக இவ் வெற்றியன்னையின் ஆலயம் தற்பொமுது காட்சியளிக்கின்றது.

**பெருவிழா**

மன்னார் மறைமாவட்டத்தின் புனித ஸ்தலமாக விளங்கும் மடு அன்னை ஆலயம் வருவோர் பேசாலை புனித வெற்றியன்னையின் ஆலயம் தரிசித்துச் செல்லும் போது ஆசீர்வாதமும், ஆனந்தமும் கொண்டு திரும்புவதாகத் தெரிவித்து வருவதும் குறிப்பி டத்தக்கது. புகழ்பெற்ற ஆலயத்தின் பெருவிழாவை முன்னிட்டு 29.11.2019 வெள்ளிக்கிழமை கொடியேற்றம் இடம்பெற்று 08.12.2019 ஞாயிற்றுக் கிழமை பெருவிழாவாக மக்களால் கொண்டாடப்பட இருக்கின்றது.
இந் நாள் அதாவது மார்கழி 08 புனித கன்னிமரியின் அமல உற்பவ பெருவிழா. கத்தோலிக்கத் திருச்சபை இந் நாளை பெருவிழாவாகக் கொண்டாடும் நாள். இறைமகன் இயேசுவை பெற்றெடுப்பதற்காக ஜென்ம பாவத்தில் கறைபடியாது கடவுளது வரங்களை நிரம்பப் பெற்றிருந்தவள்தாள் கன்னிமரியாள். கன்னிமரியாள் அமல உற்பவி என்று 08.12.1854 இல் 9 ஆம் பத்திநாதர் பாப்பரசர் பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து இவ் விழாவை வருடந்தோறும் திருச்சபை நினைவுகூர்ந்து வருகின்றது.
'உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை ஏற்படுத்துவேன்' (ஆதி. 3:15) 'அருள் நிறைந்தவள்' (லூக்.1:24) இவற்றிலிருந்து கன்னிமரியாள் அமல உற்பவி என்று தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் ஆதியிலிருந்தே மக்கள் விசுவசித்து வந்துள்ளனர். இந்த நிலையில்தான் இவ் விழாவை மன்னார் மறைமாவட்த்திலுள்ள பேசாலை மக்களும் கொடியேற்றத்துடன் ஒன்பது நவநாள்கள் ஆய்த்த வழிபாட்டுடன் பத்தாம் நாள்அதாவது மார்கழி 08 நாள் பெருவிழாவாக கொண்டாடுகின்றனர்.

**மரியாளுக்கே அதிக ஆலயங்கள்**



கத்தோலிக்கத் திருச்சபையின் வாழ்விலும், வளர்ச்சியிலும், வழிபாடுகளிலும் மரியாள் சிறப்புப்பக்தி மக்களின் ஆழ்ந்த விசுவாசத்திலும் உள்ளுணர்வுகளிலும் உறுதியாக கட்டப்பட்டவள். இலங்கைத் தீவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆலயங்கள் புனிதர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள போதும் அவைகளில் குறிப்பாக மரியாளுக்கே அதிகமான ஆலயங்கள் அர்பணிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு இலங்கைத் தீவில் ஐந்து மறை மாவட்டங்களுடைய பேராலயம் மரியாளுக்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் தான் மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் செறிந்து வாழும் பேசாலையிலும் வெற்றியன்னை இவ் மக்களின் பாதுகாவலியாக கோயில் கொண்டு இருக்கின்றாள்.
இவ்வருடம் பங்குத்தந்தையும் கத்தோலிக்கத் திருச்சபையின் சட்டவல்லுனரு மா்ன் அருட்பணி எஸ்.கே.தேவராஜ் அடிகளார் தலைமையில் நடைபெறும் விழாவில் இவ்வாழ் மக்கள் வெற்றியன்னையின்பாதம்வேண்டி, அன்னையே வெற்றி அன்னையே ஊரவர் சமூகம் கூடி உம் பாதம் வீழந்து கிடக்கின்றோம் என்றும், எங்கள் நாட்டில் சமாதானம் நிலவி நல்லிணக்கத்தை பெற்றுக்கொள்ள ஒவ்வொருவரும் அன்பிய வாழ்வில் வாழ இறைவனிடம் வேண்டும் அம்மா என்று வேண்டி நிற்கின்றனர். ■

டெங்கு நோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?



வீட்டின் கூரைப் பீலிகள்

இவற்றில் அடைப்பு ஏற்பட்டு நீர் தேங்கி நிற்கக் கூடிய நிலை ஏற்படும். எனவே இவற்றை சுத்தம் செய்து நீரானது தேங்கி நிற்காமலிருப்பதை உறுதிப்படுதிக் கொள்ளல் வேண்டும். அல்லது நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்களில் சிறு துவாரங்களை இடுதல் வேண்டும்.

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கோத்தபாயவும் இந்தியாவும்

புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பதவியேற்ற பின்னர் அவரது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக நேற்று இந்தியா புறப்பட்டார். கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தின் பயணிகள் நுழைவாயில் ஊடாக அவர் சாதாரண மக்களோடு மக்களாகப் பயணித்து புதுடில்லியைச் சென்றடைந்தார்.

இன்று நண்பகல் அவர் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவார். ஏனைய முக்கிய தலைவர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

கோத்தபாய அரச தலைவராகப் பொறுப்பேற்றதுமே முதன் முதலில் வாழ்த்துத் தெரிவித்ததோடு பதவியேற்ற அன்றே இலங்கைக்கு வந்து மோடியின் அழைப்பை நேரில் கையளித்தார் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர்.

தன்னுடைய காலடியில் இருக்கும் இலங்கையுடனான நெருக்கம் தனக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் புதிய ஆட்சியாளர்களுடானதனது உறவை வளர்ப்பதில் புதுடில்லி வெளிப்படையாகவே ஒருவித அவசரத்தைக் காண்பித்ததற்குக் காரணம் உண்டு.

ராஜபக்சக்கள் சீனாவுக்கு நெருக்கமானவர்கள் என்கிற மனப்பதிவு புதுடில்லியில் ஆழமாகப் பதிந்திருப்பதே அந்தக் காரணம்.

எனவே, கோத்தபாயவினுடைய முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இது இருந்தாலும் மிகவும் சிக்கல் நிறைந்த பயணங்களில் ஒன்று இது.

பூகோளப் போட்டி அரசியலில் பிராந்திய வல்லாதிக்க சக்திகள் இரண்டின் இடையில் மாட்டிக்கொண்டுள்ள இலங்கைக்கு இந்தியாவைக் கையாள்வது மேற்குலகைக் கையாள்வதற்கு ஒப்பானது.

தன்னுடைய அயலுறவுக் கொள்கை எந்தப் பக்கமும் சாராத நடுநிலையானது என்று ஏற்கனவே கோத்தபாய அறிவித்திருக்கிறார். அதேநேரம் சீனாவை மட்டுமே முதலீட்டுக்கு அனுமதிக்காமல் ஏனைய நாடுகளும் சம அளவில் முதலிட முன்வரவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

நடைமுறையில், சீனா அளவிற்கு இலங்கையில் முதலிடும் திறமையும் வசதியும் இந்தியாவிடம் கிடையாது, அதற்கான கவர்ச்சியும் மேற்குலக முதலீட்டாளர்களுக்குக் கிடையாது. எனவே இயல்பில் சீனா மட்டுமே பெரும் முதலீட்டாளராக மீண்டும் எஞ்சும்.

இந்த யதார்த்தத்திற்கு மத்தியில் புதுடில்லியைச் சமாளித்து அதன் கோபத்தைக் கிளறிவிடாமல் அதனைச் சாந்தப்படுத்தவேண்டிய முக்கிய பணி கோத்தபாயவுக்கு இருக்கிறது.

அவர் புதுடில்லி புறப்படுவதற்கு முன்பாகக் கொழும்பில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய இந்திய உயர் ஆணையர் தரண்ஜித் சிங் சந்து, ஒருநாட்டின் தேசியப் பாதுபாப்பு என்பது அதன் எல்லைகளுடன் மட்டும் மட்டுப்பட்டுவிடுவதில்லை, அதனையும் தாண்டியது என்று தெரிவித்திருந்தார்.

இலங்கையை தன்னுடைய பாதுகாப்பு வெளி எல்லையாகப் புதுடில்லி கருதுவதன் வெளிப்பாடு இது. எனவே இந்த வெளி எல்லையில் சீனா துள்ளி விளையாடுவதைப் பார்ப்பது புதுடில்லிக்கு நரக வேதனையே!

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவுக்கு இருக்கும் முக்கிய துருப்புச் சீட்டு தமிழர்களின் இனப் பிரச்சினை. இந்திய வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு வருகையின்போதே தனது ஆட்டத்தில் இந்தத் துருப்புச் சீட்டைப் பயன்படுத்தத் தான் தயங்கப் போவதில்லை என்பதை இந்தியா வெளிப்படுத்தியிருந்தது.

எனவே கோத்தபாயவின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் அவ்வளவு இலகுவானதாகவோ மகிழ்ச்சியானதாகவோ அமையப் போவதில்லை. அதே நேரத்தில் இந்தியாவைத் திறம்படக் கையாளும் தகைமையும் புத்திசாலித்தனமும் தன்னிடம் இருக்கிறது என்பதை இறுதிப் போர்க்காலத்தில் நிரூபித்தவர் அவர். இப்போது அந்த அனுபவம் அவருக்குக் கைகொடுக்கும் என்பதும் திண்ணம்.

ஈழத் தமிழர்களிடம் இருக்கும் ஒரே எதிர்பார்ப்பு, இந்தியா தனது தேவைக்காக மட்டும் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்ளாமல், இந்தப் பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வு கிட்டும் வகையிலும் அது செயற்பட வேண்டும் என்பதே.



# வாழ்வாதாரத்தை விழுங்கி நிற்கும் கோத்தபாய முகாம்

கோத்தபாய கடற்படை முகாம் முல்லைத்தீவு மாவட்டத்தில், கரை துறைப்பற்றுப்பிரதேச செயலாளர் பிரிவில், முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் வட்டுவாகல் ஆகிய கிராம அலுவலர் பிரிவு களுக்குட்பட்ட பகுதிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள பெரும் கடற்படைமுகாமாகும். இந்தகடற்படைமுகாம் அமைக்கப்பட்டுள்ள சுமார் 647ஏக்கர் காணிகள் தமக்குரியவை எனத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக உரிமை கோருகின்றனர்.

முள்ளிவாய்க்கால்கிழக்குமற்றும்வட்டுவாகல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்கின்றதமிழ்மக்களுக்குரிய140ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள், இந்தக் கடற்படை முகாமுக்குள் உள்வாங்கப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மாவட்டத்தின் பிற இடங்களிலும், யாழ்ப்பாணம் போன்ற வெளிமாவட்டங்களிலும் வழ்கின்ற தமிழ் மக்களுக்குரிய காணிகளும் இந்தக்கடற்படைமுகாமுக்காக அபகரிக்கப்பட்டுள்ள என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

**காணிகளை விடுவிக்குமாறு மக்கள் வலியுறுத்தல்**

இறுதிப் போரின்போது தமதுஇடங்களைவிட்டு வெளியேறி, பின்னர் மீள்குடி யமர்ந்தபோது தமது காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டிருப்பதைக் காண முடிந்தது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று பிரதேசசெயலர், மாவட்ட செயலர் உள்ளிட்டவர்களிடம் காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்ததுடன், மாவட்ட மற்றும் பிரதேசமட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டங்களிலும் அந்தக் காணிகளை விடுவித்துத் தர வேண்டும் என்று கோரியிருந்தனர்.

காணிகளை விடுவிக்க வேண்டும் என்று முறையிட்டிருந்தபோதும் தீர்வுகள் எதுவும் கிடைக்காதநிலையில், தமது காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். அப்போதும் அந்த மக்களுக்குத் தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை.

**காணிகளை அபகரிக்க கடற்படை நடவடிக்கை**

மக்கள் தொடர்ச்சியாகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி வந்த நிலையில், மக்களின் அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு மாறாக, சட்டரீதியாக கையகப்படுத்துவதற்கு அரசு முயற்சித்தது.

2017ஆம்ஆண்டுஓகஸ்ட்மாதம்04ஆம் திகதி அன்று, அரசின் அதிகாரத்துடன் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின், 2030/44 ஆம் இலக்க அரசிதழில் (அதி விசேட வர்த்தமானி) கடற்படையினர் அபகரித்து வைத்திருக்கின்ற மக்களின் காணிகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் என்னவெனில், காணி எடுத்தற் சட்டம்




(அத்தியாயம் 460), 5ஆம் பிரிவின் கீழான பிரகடனத்தின் அடிப்படையில், அந்தக்காணிகள் ஒருபகிரங்க தேவைக்கு வேண்டியதாக இருப்பதால், காணி எடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்தக் காணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அரசிதழின் அடிப்படையில், கடற்படையினர் காணி எடுத்தற் சட்டத்தின் துணையுடன், மக்களின் காணிகளை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சட்டத்தின் அடிப்படையில், காணிகள் அளவீடு செய்து எடுத்துக்கொள்ளப்படவுள்ளன என்று கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளரால், 12.09.2017ஆம் திகதிகடிதம்மூலம்மக்களுக்குஅறிவித்தல் வழங்கப்பட்டது.

**மக்கள் எதிர்ப்பு**

அரசிதழின் பிரகாரம் 26.10.2017 அன்று அந்தக் காணிகளை அளவீடு செய்து கையகப்படுத்துவதற்கு கடற்படையினர் திட்டமிட்டிருந்தனர். அன்று தமதுகாணிகளைஅளவீடுசெய்வதற்கு நிலஅளவைத்திணைக்களத்தினர்வருகின்றனர் என்று அறிந்த மக்கள், வட்டுவாகல் பாலத்துக்கு முன்பாக சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும்மேலாகச்சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள்போராட்டத்தைஅடுத்து, மாவட்ட செயலகத்திலிருந்து வந்த பிரதிநிதி ஒருவர் அளவீட்டு நடவடிக்கைகள் பிற்போடப் பட்டுள்ளன என்று தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றிருந்தனர்.

**மீண்டும் முயற்சி**
**மக்கள் பெரும் போராட்டம்**

அதன்பின்னர் 22.02.2018 அன்று மீண்டும் காணிகளை அளவீடு செய்வதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன. தகவலறிந்த காணிகளுக்குரிவர்கள், கோத்தபாய கடற்படை முகாமின் வாயிலின் முன்பாக ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த காணிகளுக்கு உரித்துடைய மக்களுக்கும், அங்கு வந்த நில அளவைத் திணைக்களத்தினருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. நில அளவீடுகள் எதுவும் செய்யக்கூடாதெனவும், நிலஅளவைத்திணைக்களத்தினர் அங்கிருந்து செல்ல வேண்டும் என்றும் காணிக்குரித்துடைய மக்கள் பெரும்எதிர்ப்புஆர்ப்பாட்டததில்ஈடுபட்டனர். அதையடுத்துத்தமதுமுயற்சிகளை நிலஅளவைத்திணைக்களத்தின் இடைநிறுத்தினர்.

தொடர்ந்தும்சாலைமறியல்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோசம் எழுப்பினர். முல்லைத்தீவுமாவட்டமேலதிகச்செயலர்அங்குவந்து, மக்களுடன் பேச்சு நடத்தினார்.

அடுத்துவரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வரையில், நில அளவீடுகள்எதுவும்அந்தப்பகுதியில்செய்யக் கூடாது என மேலதிக மாவட்டச் செயலரை ஆர்ப்பாட்டக்காரர்கள்கோரியதற்கமைய, அவரால் எழுத்து மூலம் ஒரு கடிதம் ஒன்று மக்களிடம் கையளிக்கப் பட்டது.

**ரவிகரன், சிவாஜி மீது வழக்குப் பதிவு**

தமிழ்மக்களின்காணிகளை, கடற்படை முகாம் அமைப்பதற்காக அளவீடுசெய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமை தொடர்பில் விசாரணை செய்ய, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரை 28.02.2018 அன்று முல்லைத்தீவு பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்திருந்தனர்.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியிருந்தார். அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு பொலிஸார், அவரைக்கைதுசெய்துமுல்லைத்தீவுநீதவான்நீதிமன்றில்முன்னிலைப் படுத்தியதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்எம்.கே. சிவாஜிலிங்கம்முன்பிணை கோரிவழக்கை ஒத்திவைத்துப்பின்னர் நீதிமன்றில்சட்டத்தரணிஊடாகமுன்னிலையாகி பிணையில் வெளிவந்தார். இந்த வழக்கு விசாரணைகள், ஒரு வருடம் கடந்த நிலையிலும், தற்போதும் இடம்பெற்றுவருகின்றது.

**வாழ்வாதாரத்தை**
**முடக்கிய அபகரிப்பு**

கடற்படையினர்அபகரித்துவைத்துள்ள பகுதிகளுக்குள், தமது நெற் செய்கைக்குரிய விவசாய நிலங்கள் மற்றும் தோட்டச் செய்கைக்குரிய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள், மீன்பிடிக்குரிய கரவலைப்பாடுகள், படகு இறங்குதுறை, அன்றாடம் மீனவர்கள் வீச்சுத் தொழிலில் ஈடுபடும் பகுதிகள் என்பன உள்ளடங்குகின்றன.

அதனால்தமதுஅன்றாடவாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதில், தாம் பெருத்தசிரமங்களுக்குமுகம்கொடுக்க வேண்டியுள்ளதுஎன்றும், தமதுவாழ்வாதாரம் வெகுவாக முடக்கப்பட்டுள்ளது என்றும் மக்கள் கூறுகின்றனர்.

**மீனவர்களின் வழ்வாதாரம் பாதிப்பு**

கோட்டாபாய கடற்படை முகாம், அரிச்சல் வீதி எனப்படுகின்ற ஒரு பிரதான பாதையையும்ஆக்கிரமித்துவைத்திருக்கின்றது என்றும், அந்த வீதி முன்னர் கடற்றொழிலுக்குச்செல்லப்பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும் மக்கள் கூறுகின்றனர்.




அரிச்சல் பாதையும் மூடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால், கரவலைப்பாடுகள் மற்றும் படகு இறங்குதுறை என்பவற்றை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நந்திகடலின், வடக்காறு என்னும் பகுதியில்மீன்பிடியில்ஈடுபட்டுதமதுஅன்றாட வாழ்வாதாரத்தைக்கொண்டுசெல்லும் மீனவர்களும் அதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்எனவும்தெரிவிக்கின்றனர். தமது வழ்வாதாரம் பெரும் அளவில் முடக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அரிச்சல்வீதி, படகு இறங்கு துறை என்பவற்றின் விடுவிப்புத் தொடர்பில் மாவட்டச்செயலகத்தினருக்கு தொடர்ந்தும் தெரியப்படுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கடற்படையினரோடும் பேச்சு நடத்தப்பட்டு வந்தது என்று தெரிவிக்கப்பட்டபோதும், இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**கால்நடை வளர்ப்பாளர்களின்**
**வாழ்வாதாரம் பாதிப்பு**

வட்டுவாகல், முள்ளிவாய்க்கல் மற்றும் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான 500க்கும் மேற்பட்டகால்நடைகள்கடற்படையினர் அபகரித்து வைத்திருக்கின்ற பகுதிகளுக்குள் உள்ளன.



அந்தக்கால்நடைகளைவெளியேற்றித் தரும்படி மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றஒருகூட்டத்தில்மக்கள்கோரிக்கை விடுத்தனர். அவைவெளியேற்றித்தரப்படும் என்று கூறப்பட்டபோதிலும் இதுவரையில் அந்தக் கால்நடைகள் வெளியேற்றித் தரப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினர் அபகரித்துவைத்திருக்கின்ற பகுதிக்குள் தாம் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த கால்நடைகளை அந்தப் பகுதிக்குள் இருந்துவெளியேற்றித்தந்தால், அவற்றைக்கொண்டுதமதுஅன்றாடவாழ்வாதாரத்தை நகர்த்திச் செல்லமுடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**விவசாயிகளின்**
**வழ்வாதாரம் பாதிப்பு**

தாம் பூர்வீகமாக நெற்பயிற்செய்கை மேற்கொண்டுவருகின்றதமதுவாழ்வாதாரவயல்நிலங்கள்பலவும்கோத்தபாய கடற்படைமுகாமுக்குள்அபகரிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தாம் நெற்பயிற்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையில், தமது வாழ்வாதாரம்பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

தமது அன்றாட வாழ்வாதாரத்தையே கொண்டுசெல்வதில் பலத்த இடர்பாடுகளுக்குமுகங்கொடுக்கவேண்டியுள்ளது என்று விவசாய மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

மக்களின்காணிகளைகடற்படையினர் அபகரித்துவைத்திருப்பதென்பது, பெருமளவில் மக்களினுடைய வாழ்வாதாரத்தைஆக்கிரமித்திரப்பதானசெயற்பாடாகவே காணப்படுகின்றது.

**தமிழர் அடையாளங்களை**
**அழிக்கும் கடற்படை**

கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுடைய பூர்வீக பகுதிகள் போரின் போது அழிவுக்குள்ளாகி, காடுகளாகவும் காட்சி தருகின்றன.

மக்கள் வாழ்ந்த பகுதிகளில், அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான தடயங்களை இல்லாமல்செய்வதற்காக்கடற்படையினர் தடையங்களை அழித்து வருகின்றனர்என்றுமக்கள்குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்தமூன்றுவருடங்களுக்குமுன்னர் விடுவிக்கப்படவேண்டிய தமிழ் மக்களுடைய காணியிலே, பதினைந்து அடி விட்டத்துக்கும் அதிகமான விட்டம் கொண்டகிணறுஒன்றுஅமைக்கப்பட்டிருந்தது. இந்தக் கிணறு சுனாமி இடர் ஏற்பட்ட காலத்தில், மக்களின் பாவனைக்காக அமைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கிணற்றை கனகரக வாகனங்கள் கொண்டு இடித்தழித்துள்ளனர். அந்தக்கிணறுஇருந்தஇடம்தற்போதும் சற்றுக்குழியாககாட்சிதருகிறது. அதைப் போன்று வீடுகளும் இடித்தழிக்கப்பட்டு மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான அடையளங்கள் அகற்றப்படுகின்றன.

மக்கள் இருந்தார்கள் என்பதற்கான தடயங்களைஇல்லாமல்செய்து, கட்டமைப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதனூடாக நிரந்தரமாக தமது நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாட்டை கடற்படையினர் மேற்கொள்கின்றனர் என்று மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

**காணி விடுவிப்பு**
**இதுவரை இல்லை**

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் சுமார்57ஏக்கர்வரையிலானகாணிகள் முதற்கட்டமாக விடுவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும், இதுவரைஅவ்வாறுகாணிகள்விடுவிக்கப்படவில்லை. இந்த வருட ஆரம்பத்தில் மாவட்ட செயலகத்தாலும், காணி உத்தியோகத்தராலும் காணி விடுவிப்புச் செய்யப்படும் எனத்தமக்குத்தெரிவிக்கப்பட்டதுஎன்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

**விரைவில் விடுவிக்குமாறு**
**மக்கள் கோரிக்கை**

வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் சிறுகடல் மற்றும் பெருங்கடல் தொழில், விவசாயம் என்பவற்றையே பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்றனர்.

தமது பிள்ளைகள், அடுத்து வருகின்ற சந்ததியினர் வசிப்பதற்கு காணிகள் இல்லை என்றும் அந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதிர்வரும்பொதுத்தேர்தலுக்கு முன்னராவதுதமதுகுடியிருப்புமற்றும்வாழ்வாதாரக்காணிகளை விடுத்து வாழ்வாதார முன்னேற்றத்துக்கு வழி செய்ய வேண்டும் என்று அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 12 குடியிருப்பாளர்களுக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம்

தென்மராட்சி,நவ.29

**டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் தண்ணீர் ஏந்து பொருள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில், 12 குடியிருப்பாளர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.**

உடுப்பிட்டிப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உடுப்பிட்டி இமையாணன்பகுதிகளில்நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது, டெங்கு நுளம்பு உற்பத்தி யாகும் நீர் ஏந்து பொருள்களில் டெங்கு குடம்பிகள் இனம் காணப்பட்டன.

அதனையடுத்து குடியிருப்பாளர்களுக்கு எதிராகப் பொது சுகாதார பரிசோதகர் சி.தவசிறோஜன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்ட போது குடியிருப்பாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவானால் தண்டம் விதிக்கப்பட்டது. (சு-9)

## சிவபூமி முதியோர் இல்லத்தின் ஆண்டு விழாவும் கட்டடத் திறப்பும்

யாழ்ப்பாணம்,நவ.29

சுழிபுரம் தொல்புரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சரவணப் பொய்கை புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழாவும் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

கட்டடத் திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவ நிபுணர் வசந்தமாலிகா கருணாகரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ச. பாலச்சந்திரன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், மதிப்புறு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் பிறேமினி பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர். (சு)

## பாதீடு வரைவு மக்கள் பார்வைக்கு

கொடிகாமம்,நவ.29

துணுக்காய் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு வரைபு கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பொது மக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் கமநல சேவைகள் திணைக்ள்ளம், துணுக்காய் நூல் நிலையம், மல்லாவி நூல் நிலையம், ஐயன்குளம் நூல் நிலையம் ஆகிய இடங்களில் பாதீடு வரைவு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பொது மக்கள் அது தொடர்பில் தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் துணுக்காய் பிரதேச சபையில் சமர்ப்பிக்க முடியும் என்று தவிசாளர் அ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (சு-159)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காரைநகர்,நவ 29

காரைநகர் மணிவாசகர் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக ச்சபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை இடம்பெறும். காரைநகர் ஈழத்துச் சிதம்ப ரத்தில் அமைந்துள்ள மணிவாசகர் சபை மணி மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு சபையின் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் கூட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-250)

## மன்னார் மாவட்டத்தில் டெங்குத் தொற்றுத் தீவிரம்

### மக்களுக்கு விழிப்புணர்வு துண்டறிக்கைகள்

மன்னார்,நவ.29

மன்னார் மாவட்டத்தில் டெங்குத் தொற்றுத் தீவிரமடைந்துள்ளதால், காய்ச்சல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அரச மருத்துவமனைகள் அல்லது தகுதி வாய்ந்த மருத்து அதிகாரி ஒருவரிடம் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் டெங்குத் தொற்றுத் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிர்ப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வெளியிட்டுள்ள துண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிராமங்களில் டெங்குத் தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவி வருகின்றது. எனவே வீடுகள், நிறுவனங்கள், பொது இடங்களை டெங்கு நுளம்பு பெருகாத வண்ணம் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக நீர் சேமித்து வைக்கும் தொட்டி, மலசல கூடப் பாவனைக்கு நீர் சேமித்து வைக்கும் தொட்டி அல்லது வாளிகள், தயிர்ச்சட்டிகள், யோக்கட் கப், சிரட்டைகள், இளநீர் கோம்பைகள், மூடியில்லாப் போத்தல்கள், சொப்பின் பைகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ரெஜிபோம் பெட்டிகள், ரயர்கள், தகரப்பேணிகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் உங்கள் வீட்டில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே குறித்த பொருள்களை அகற்றியும், குளிர் சாதனப் பெட்டியின் பின் பகுதியில் நீர் தேங்கும் தட்டையும், ஏ.சி யின் தண்ணீர் தேங்கும் தட்டையும் வாரத்துக்கு இரு முறை சுத்தம் செய்ய வேண்டும், தண்ணீர் சேகரிக்கும் பாத்திரம் மற்றும் நில மட்டத்துக்கு கீழ் உள்ள நீர்த் தாங்கி களில் நுளம்பு உள்ளே செல்லாத வகையில் மூடியால் மூடி வைக்க வேண்டும்.

அகற்ற முடியாத தண்ணீர் தேங்கும் பகுதிகளில் கப்பீஸ் போன்ற மீன்களை வளர்ப்பதன் மூலம் டெங்கு நுளம்பைக்கட்டுப்படுத்த முடியும்.

பாவனை அற்ற தண்ணீர்த்தொட்டிகளை இடித்து அல்லது அப்புறப்படுத்தியும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை இல்லாமல் செய்து டெங்குத் தொற்றில் இருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் சமூகத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் நேரங்களான காலையிலும்,மாலையிலும் 5 மணி முதல் 8 மணி வரையுமான காலப்பகுதியில் நுளம்பு கடித்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். காய்ச்சல் ஏற்படின் மருத்துவ ஆலோசனைகளைப் புறக்கணிக்க வேண்டாம் என்பதுடன், காய்ச்சல் காலங்களில் வலி நிவாரண மாத்திரைகள், அஸ்பிரின் போன்ற மாத்திரைகளை உபயோகிக்க வேண்டாம். என்றுள்ளது. (சு-56)

## நீரிழிவு தின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்,நவ.29

பன்னாட்டு நீரிழிவு தின நிகழ்வுகள் கோப்பாய் கல்வியல் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனை நீரிழிவுசிகிச்சைப்பொறுப்பதிகாரி எம்.அரவிந்தன், மற்றும் நரம்பியல் நிபுணர் கே.அஜந்தாவும், நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல் ஆகியோர் உரையாற்றினர். (ஐ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை மானிப்பாய் கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தலைவர்.செ.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் சியாமளா சண்முகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஐ-63)

## வலிகாமம் கிழக்கில் டெங்கைக் கட்டுப்படுத்த சிறப்பு நடவடிக்கைகள்

### சுகாதாரத் தொழிலாளர்களின் விடுமுறைகள் நிறுத்தப்பட்டன

யாழ்ப்பாணம்,நவ.29

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் டெங்கு பரவும் அபாயம் உள்ளதையடுத்து, கழிவகற்றும் பொறிமுறையைத் துரிதமாக மேற்கொள்வதற்காக, பிரதேச சபையின் கழிவு அகற்றுதலுடன் தொடர்புடைய பணியாளர்கள் அனைவரதும் விடுமுறைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. அதனால் பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சகல தரப்புக்களின் ஒத்துழைப்புடனேயே டெங்கு பரவுதலைக் கட்டுப்படுத்த முடியும். பரந்த நிலப்பரப்பையும் அதிகளவான மக்களையும் கொண்ட பிரதேச சபையில் கழிவு அகற்றுவதில் பல்வேறுபட்ட இடர்பாடுகள் உள்ளன. ஆளணிப்பற்றாக்குறை, வாகனப்பற்றாக்குறை என்று பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.நிரந்தர நியமனம் செய்யப்படவேண்டிய தொழிலாளர்களுக்கான நேர்முகத்தேர்வுகளை நடத்தி விட்டு அவர்களது நியமனம் தொடர்பான அரச நிர்வாக நடைமுறைகளுக்காகக் காத்திருக்கின்றோம். இவ்வாறான நிலையில் வெளிவாரிப்பணியாளர்களையே நாம் அதிகளவில் சுத்திகரிப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. வெளிவாரிப் பணியாளர்களை விடுமுறைகள் ரீதியாகக் கட்டுப்படுத்த முடியாத நிலமை உள்ளது. எது எவ்வாறிருந்த போதும் நாம் தற்போதைய அவசர சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சுத்திகரிப்புடன் தொடர்புடைய சகலரினதும் விடுமுறைகளை நிறுத்தம் செய்துள்ளோம். பிரதேச சபைகள் கழிவகற்றும் பொறிமுறையில் எதிர்கொள்ளும் சாவால்களின் அடிப்படையில் பரந்த காணிகளை கொண்டிருப்போர் சுயமாகவே கழிகளை உரிய வகையில் சுற்றுச்சுழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அப்புறப்படுத்தி ஒத்துழைக்க முடியும். கழிவு அகற்றுதலில் பிரதேச சபைகள் உணவுக்கழிவுளை அகற்றுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளன. சிலர் தமது தோட்ங்களில்வெட்ப்படும்வாழைகளைக் கூட தெருவில் போட்டு விட்டு பிரதேச சபைகள் அவற்றை அகற்ற வேண்டும் என்று நினைக்கின்றனர். கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றி மக்களும் அதிகளவில் பொறுப்படையவர்களாக உள்ளனர். கழிவுகளை வீதிகளில் வீசுவோர், உரிய பொறிமுறையின்றி கழிவகற்றலில் செயற்படுவோருக்கு எதிராக பொது நன்மையைக் கருத்தில் கொண்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும். என்றார். (சு)

## யாழ்.மாவட்ட சாரணர் திரளணி

யாழ்ப்பாணம், நவ.29
யாழ்ப்பாண மாவட்ட சாரணர் சங்கத்தால் சாரணர் திரளணி ஒன்று எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17,18,19 ஆம் திகதிகளில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
இதில் நெடுந்தீவு முதற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட சாரணிய எல்லைக்குட்பட்ட 31 பாடசாலைகளில் இருந்து நாற்பதுக்கு மேற்பட்ட குருளைச் சாரண, சாரண, திரிசாரண குழுக்கள் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இதில் சிறப்பம்சமாக பாடசாலைக் குழுக்களுக்கிடையே சாரணியச் செயற்பாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு நடப்பு ஆண்டின் சிறந்த குழு தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கேடயமும் வழங்கப்படவுள்ளது.
நிகழ்வில் 18ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை குருளையர் தினம் இடம் பெறவுள்ளது. இதில் குருளையருக்கான போட்டிகளும் நடை பெறும்.
இது தொடர்பாக குழுச் சாரண ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும், குருளைச்சாரண ஆசிரியர்களுக்கான கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கும் இல6கோபால்ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் அனைத்துப் பாடசாலை குழுச் சாரணத் தலைவர்களையும் சமூகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் இ.தவகோபால் அறிவித்துள்ளார். (ஐ)

## சஞ்சிகை வெளியீடு

கனலி மாணவர் சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகக் கலையரங்கத்தில் எதிர்வரும் 02 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகுதிவாய்ந்த அதிகாரி மூத்த பேராசிரியர் க. கந்தசாமி, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# நவம்பரில் மட்டும் 1,710 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், நவ.29
இலங்கையிலேயே டெங்குத் தாக்கம் கூடிய மாவட்டங்களில் மூன்றாவது மாவட்டமாக யாழ்ப்பாணம் இனங்காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வரை ஆயிரத்து 710 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதங்களை விட, நவம்பர் மாதம் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.
மழைக் காலமான நவம்பர் மாதம் இலங்கையில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளது. டெங்குத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கொழும்பு மாவட்டம் முதலிடத்திலுள்ளது. அங்கு மூவாயிரத்து 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டம் இரண்டாவது நிலையில் உள்ளது அங்கு ஆயிரத்து 783 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்றாவது மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளது. டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதாரத் துறையினர் பெரும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தனர்.
வீடு வீடாகச் சென்று டெங்குத் தரிசிப்புக்களைமேற்கொண்டனர். டெங்கு பரவும்வகையில் ஆபத்தானசூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைளை மேற்கொண்டனர். எனினும் உயிர்க் கொல்லி நோயான டெங்குக் காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் குழந்தையைப் பிரசவித்த பெண், பாடசாலை மாணவி, மற்றும் சிறுவன் டெங்குத் தொற்றால் அண்மையில் உயிரிழந்தனர். டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை முன்னெடுத்த அரசு, சூழலைச் சுத்தப்படும் முயற்சியை அதிகாரிகளைக் கொண்டு முன்னெடுத்தது. படையினர், பொலிஸார், அரச அதிகாரிகள் எனப் பலரும் அண்மையில் இந்த வேலைத் திட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (க-21)

## தாயும், மகனும் விபத்தில் காயம்

சாவகச்சேரி,நவ.29
வாகன விபத்தில் தாயும், மகனும் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
இந்த விபத்து சாவகச்சேரி நுணாவில் ஏ/9 முதன்மை வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.
கொழும்பிலிருந்து வந்த சொகுசு பேருந்துடன் உந்துருளி மோதி விபத்து நடந்துள்ளது.
உந்துருளியில் பயணித்த தாயும், மகனும் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாய் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த இருவரே காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)



## ஒளிவிழாவும் பரிசளிப்பும்

தென்மராட்சி,நவ.29
யாழ்ப்பாணம் சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன.
அதிபர் சைலினி பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக கிருபா சாரதிய பயிற்சி நிறுவனத் தலைவர் அ.கிருபாகரன், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தலைவர் கா. பீ. ஜெயவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
மாணவர்களின் கலைநிகழ்வுகளும், பரிசில்கள் வழங்கலும் இடம்பெற்றன. (ஐ-9)

## சாவகச்சேரி நகரில் இன்று துப்புரவு

சாவகச்சேரி,நவ.29
அரசு தலைவரின் "நகரைச் சுத்தமாக வைத்திருப்போம்" என்னும் திட்டத்துக்கு அமைவாக, சாவகச்சேரி நகரப்பகுதியில் இன்று துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
சாவகச்சேரிப் பொலிஸார், சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து இன்று காலை 7 மணி தொடக்கம் காலை 9 மணி வரை துப்புரவுப் பணிகள் இடம்பெறும்.
இதில் வணிகர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## யாழ்.இந்துக் கல்லூரியில் நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம்,நவ.29
யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் மற்றும் கரிகணன் அச்சகத்தார் இணைந்து நடத்தும் நாவலர் நினைவரங்கம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் நினைவரங்கில், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொள்வர். கல்லூரியில் உள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, மங்கல இசையரங்கம் இடம்பெறும். தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தொடக்கவுரை ஆற்றுவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச.முகுந்தன் நாவலர் கருத்தியல் குறித்த பலபக்க விமர்சனங்களை முன்னிறுத்திய உரையாடல் என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார். நாவலர் தினத்தை முன்னிட்டு, யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே அன்று காலை நடத்துப்படும் போட்டிக்கான பரிசளிப்பும் நிகழ்வு இடம் பெறும். பரிசுகளை தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்கி மதிப்பளிப்பார்.
சிறப்பு நிகழ்வாக இன்றைய இளையோர் நாவலர் பாதையில் பயணிக்கின்றனர் பயணிக்கவில்லை என்ற பொருளில் பட்டிமண்டபம் இடம்பெறும். (க)

## நாடகக்குழுவினர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29
தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் நாடகப்போட்டியில் முதலிடம் பெற்ற ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் நாடகக்குழுவினரை மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல்கல்லூரியில்இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியின்பீடாதிபதிசுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் உயிர்ப்பழி எனும் அந்த நாடகம் மேடையேற்றப்படும். நாடகக்குழுவினரும்மதிப்பளிக்கப்படவுள்ளனர்.
அதேவேளைஅன்றைய தினம்பிற்பகல்3மணிக்கு கல்வியியல் கல்லூரிக்குப்புதிதாகத்தெரிவுசெய்யப்பட்டபுதுமுகமாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறும்.
கல்வியல் கல்லூரியின் பீடாதிபதிசு.பரமானந்தம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில்முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்ச.கிருபாகரன் கலந்துகொள்வர்.(சு-104)

## சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், நவ.29
தெல்லிப்பழை சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தின் அதிபர் ந. குணரத்தினத்தின் சேவைநலன் பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பாடசாலையின் பிரதி அதிபர் க.கனகவாசன் தலைமையில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். (க-104)

## பாதீடு மக்கள் பார்வைக்கு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடுபொதுமக்கள்பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் 9 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும்என்றுசபைத்தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகம், புலோப்பளைஉப அலுவலகம், புலோப்பளை பொது நூலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம், முள்ளிப்பற்று பொது நூலகம், முகமாலை உப அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச் செயலகம்ஆகியவற்றில்பாதீடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பாதீடுதொடர்பாகபொது மக்கள் தங்கள் அபிப்பிராயங்கள் மற்றும் ஆட்சேபணைகளைதெரிவிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கலைஞர்களுடன் கலந்துரையாடல்

சமகாலக் கட்டடக் கலை மற்றும், வடிமமைப்புக்கான ஆவணக் காப்பகத்தின் 71 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 199, கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள காப்பகத்தில் இடம்பெறும்.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓவியர்கள், மற்றும் ஒளிப்படக் கலைஞர்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.

யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் இளம் ஓவியர்களான நிலானி ஜோசப், தவராசா தயேந்திரன் மற்றும் இளம் ஒளிப்படக்கலைஞரான தர்மபாலன் திலக்சன் ஆகிய மூன்று கலைஞர்களுடன், அவர்களது கலைப்பயில்வு, கலை உருவாக்கம் மற்றும்சவால்கள்தொடர்பாக சப்னா இக்பால் மற்றும் பிரிந்தா குலசிங்கம் ஆகியோர் நிகழ்வில் கலந்துரையாடவுள்ளனர்.

நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன் பெறுமாறு இலங்கை ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் ஸ்ரிபன் கனகலிங்கம் அறிவித்துள்ளார். (க-21)

# தண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு

### தாங்கிகளைப் பிரதேச செயலகம் பெற்றுத்தரவேண்டும் என்றும் கோரிக்கை

*மன்னார், நவ. 29*

மன்னார்முசலி கார்மேல்நகர் மக்களின்குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு ஆறு மாதங்களில்நிரந்தரத்தீர்வு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தண்ணீர் தாங்கிகளைபிரதேசசெயலகத்தினர்சனசமூக நிலையங்களில் பெற்றுத் தரவேண்டும் என்று முசலி பிரதேசசபைத் தவிசாளர் சுபிஹான் தெரிவித்தார்.




முசலி சின்ன புள்ளச்சி பொற்கேணிகார்மேல்நகர் கிராமத்தில்சுமார் 60க்கும் மேற்பட்டகுடும்பங்கள்பல வருடங்களாக குடி தண்ணீர்ப் பிரச்சி னையால் அவதிப்பட்டு வருகின்றன. இது பற்றி பிரதேச சபைக்குத்தெரியப்படுத்தப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பகுதி மக்களுடன் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்போதே விரைவில் குடிதண்ணீர்ப் பிரச்சினை சீர்செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் ஆழ்துளைக் கிணறு மூலமாக வேறு இடங்களுக்கு குடி தண்ணீர் செல்கிறது. ஆனால் இந்தக் கிராமத்து மக்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினைஉள்ளமைபற்றிநினைக்கையில் மனவருத்தமாகவுள்ளது.

இதனை முன்னைய ஆட்சியாளர்கள் செய்திருக்க வேண்டும். அது நடக்கவில்லை. எமதுசபைஎவ்வளவோமுயற்சி எடுத்தது. சில அதிகாரிகளின் அசமந்தப்போக்கால் பல லட்சம் ரூபா திறைசேரிக்குத் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுவிட்டது. என்றார்.

கூட்டத்தில்முசலிபிரதேசசபையின்உறுப்பினர்தஸ்னீமா, சிலாவத்துறைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையின் தொழிநுட்ப அலுவலர்கள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர், கார்மேல் நகர் மாதர் சங்கத்தினர் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (த-213)



## கொழும்புத்துறையில் தண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.29

கொழும்புத்துறை மேற்குப் பகுதிக்கு நிலத்தடி குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகத்துக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விநாயகர் ஆலயத்தின் தண்ணீர் கிணற்றில் இருந்து குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இதற்கென யோகர் சுவாமி சமாதிக் கோவிலுக்கு முன்பாகக் குடி தண்ணீர் விநியோகக் குழாய்களை, யாழ். மாநகர சபை அமைத்துள்ளது.

மாநகரப்பிரதி முதல்வர்து.ஈசன்புதிதாகநிர்மாணிக்கப்பட்டநிலத்தடிகுழாய்விநியோகத்தைஆரம்பித்துவைத்தார். (க-17)

# 3 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்

நாவாந்துறைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புவாரத்தைமுன்னிட்டுமேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது 23 குடியிருப்புக்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகர் தலைமையில் டெங்கு ஒழிப்புமற்றும்அதுதொடர்பானவிழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஜே84,86,87,88ஆகியகிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இடம்பெற்றது.

யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினர், பிரதேச செயலகத்தினர், பொது அமைப்பினர் மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது பிரதேசத்தில் 297 வரையிலான வீடுகள் சோதனையிடப்பட்டன. இவற்றில் போதிய சுகாதார வசதிகள் இன்றி காணப்பட்ட 23 வரையிலான குடியிருப்புக்களை உடன் துப்புரவு செய்யுமாறு கோரி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டன. அதனைவிடமூன்றுகுடியிருப்புக்களில் நுளம்பு குடம்பிகள் காணப்பட்டனஎனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)



## பாசையூரில் கடற்கரையில் 2 கிலோ வெடிமருந்து மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாணம் பாசையூர் அந்தோனியார் தேவாலயத்துக்குஅருகில்உள்ள கடற்கரைப் பகுதியிலிருந்து ஒரு தொகுதி வெடி மருந்துகள்நேற்றுமீட்கப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பின் போது இரண்டு கிலோ வெடி மருந்துகள் மீட்கப்பட்டன என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

குறித்த வெடிமருந்துகள் தடை செய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைக்காக கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (க-21)

## ஒளிவிழா நிகழ்வும் திறன் வகுப்பறை திறப்பும்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாணம்அல்லைப்பிட்டிறோ.க.த.கவித்தியாலயத்தின்ஒளிவிழாவும், திறன்வகுப்பறை திறப்பும் இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில்காலை8மணிக்குஇடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் வி.என்.பத்மநாதன் தலைமையில்நடைபெறவுள்ளநிகழ்வில்முதன்மை விருந்தினராகயாழ்ப்பாணம்மாவட்டச்செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக மண்டைதீவு பங்குத்தந்தை அல்லைப்பிட்டி தீவகமறைக்கோட்ட முதல்வர் எம்.டேவிட் அடிகளார், தீவகவலயம்வலயக்கல்விப்பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## மாற்றுத்திறனாளிகளிடையே வினாடி வினாப் போட்டி

வவுனியா,நவ.29

மாற்றுத்திறனாளிகளின் தினத்தை முன்னிட்டுவவுனியாமாவட்டத்திலுள்ள அரச மற்றும்அரசார்பற்றநிறுவனங்களுக்கிடையிலான பொது அறிவு வினாடிவினாப்போட்டி நேற்றுநடத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற பொது அறிவுவினாடிவினாப் போட்டியில்15க்குமேற்பட்ட அரச மற்றும் அரசார்பற்றநிறுவனங்கள் பங்குபற்றின.

போட்டிகளின் முதன்மை நடுவராக வவுனியா மாவட்ட சமூக சேவைஅலுவலர்எஸ். எஸ்.வாசன் மற்றும் நடுவர்களாக அபிவிருத்தி அலுவலர்கள் ஜனாத்தனி, கோமலா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-ரி4)

## இடமாற்றம்

சாவகச்சேரி,நவ.29

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவரும் சாவகச்சேரி இணக்க சபையின் அமர்வுகள் இடமாற்றப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதாரண பரீட்சைகள் காரணமாக டிசம்பர் முதலாம் மற்றும் எட்டாம் திகதிகளில் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அமர்வுகள் இடம் பெறும்.

டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் வழமைபோல் சாவ கச்சேரி டிறிபேக் கல்லூரியில் அமர்வு இடம்பெறும் என்று தவிசாளர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார். (க-9)

# வவுனியா நகரில் அழகு மர நடுகை



வவுனியா, நவ. 29

வவுனியா நகர மணிக்கூட்டுக்கோபுர பகுதியில் வீதியின் நடுவே அழகு மரங்கள் நடும் பணி நேற்று நடைபெற்றது. நகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் நகர சபையுடன் வர்த்தக சங்கத்தினரும் இணைந்து மர நடுகையில் ஈடுபட்டனர். முதற்கட்டமாக வீதியின் நடுவே ஐம்பது மரங்கள் நடுகை நடைபெற்றது.

நிகழ்வில் நகரசபைத் தவிசாளர், நகரசபைச் செயலர், நகரசபை உறுப்பினர், வர்த்தக சங்கத்தலைவர், வர்த்தக சங்கச் செயலர், நிர்வாக சபை உறுப்பினர்கள், மூத்த பொலிஸ் அத்தியட்சகர், போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எனப் பலர் கலந்துகொண்டனர். (த)

# ஆளுநரின் அலுவலக வாகனம் தனியாருக்குச் சென்றது எப்படி

## தவராசா கேள்வியெழுப்புகின்றார்

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாண ஆளுநர் செயலக வாகனம் ஆளுநர் இல்லாத நிலையில் யாருடைய அனுமதியின் பெயரில் தனியாரின் கைக்குச் சென்றது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்புகின்றார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் பயன்பாட்டில் இருக்கும் வாகனம் ஆளுநர் எவருமே அற்ற நிலையில் முன்னாள் ஆளுநர் ஒருவரின் தனிப்பட்ட பணியாளர் கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளார். சகல மாகாணத்தின் ஆளுநர்களும் 20ஆம் திகதி தொடக்கம் அது பதவில் இல்லை. அவ்வாறு ஆளுநர்கள் பதவி துறந்தால் அவர்களின் தனிப்பட்ட ஊழியர்கள் பணி இழந்து சாதாரண குடிமகனாகவே இருக்கலாம். அவ்வாறிருக்கையில், ஆளுநர் செயலகத்திலிருந்து ஒரு வாகனத்தை கொழும்புக்கு ஒருவர் எடுத்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு எடுத்துச சென்றமை முற்றிலும் முரணானசெயல். தனி மனிதனிடம் அரச செயலகத்துக்குச் சொந்தமான வாகனத்தைக் கையளித்தமை செயலரின் நிர்வாகத் திறன் இன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

எனவே மாகாண கணக்காய்வுத் திணைக்களம் உடன் கவனத்தில்கொள்ள வேண்டும். அதே நேரம் குறித்த விடயம் தொடர்பில் ஆளுநரின் செயலர் முழுமையான விளக்கம் வழங்கவேண்டும். என்றார்.

இது தொடர்பில் ஆளுநரின் செயலர் எஸ்.சத்தியசீலனிடம் கேட்டபோது, ஆளுநர் செயலகத்தின் வாகனத்தை கொண்டு சென்றது உண்மை. ஆனால் அது தனியாள் அல்ல. தற்போதைய வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரே அந்த வாகனத்தைக் கொண்டுசென்றார். அவர் தனது பதவிக் காலத்தில் குறித்த வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுள்ளார். என்றார். (த-105)



அரச தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் சுற்றுச் சூழலை சுத்தப்படுத்தும் பணியில் பொலிஸ் திணைக்களம் ஈடுபட்டு வருகிறது. அதற்கமைவாக முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தொழில் திணைக்கள மாணவர்கள் இணைந்து சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் பணியில் நேற்று ஈடுபட்டனர். முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரை சுத்தப்படுத்தப்பட்டது. (க-ரி3)

# கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும்

மன்னார், நவ.29

நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட முள்ளிமோட்டை குறிஞ்சி நகர் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றன. நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் தி.பரஞ்சோதி, நானாட்டான் சபையின் உறுப்பினர் ஜொனி, பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அலுவலர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-213)

# சாதனையாளர் மதிப்பளிப்பு



கொடிகாமம், நவ.29

கொடிகாமம் கச்சாய் வீதியில் அமைந்துள்ள வின் அக்கடமியின் தரம் 5 புலமைப் பரிசில் சாதனையாளர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்து ள்ள நட்சத்திர மஹால் மண்டபத்தில் ஆசிரியர் த.மகிழ்ராஜன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தி னராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தி னர்களாக தென்மராட்சி வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) சோ.திருக்குமரன், திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் க மங்களேஸ்வரன், திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். குறித்த கல்வி நிறுவனத்தில் 62 மாணவர்கள் கல்வி கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 23 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் 191 புள்ளிகளைப் பெற்று சிவசுப்பிரமணியம் ரிவானிகா தென்மராட்சி வலயத்தில் முதலாமிடத்தை பெற்றுள்ளார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. போக்கட்டி அ.த.க.பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் வாழ்த்துரையினை வழங்கினார். "பொலித்தீன் பாவனையை அகற்றுவோம் வளம்மிகு நாடாக மாற்றுவோம்" எனும் வில்லுப் பாட்டும் இடம் பெற்றது. (ஐ-159)

# பரிசளிப்பு நிகழ்வு



கொடிகாமம், நவ.29

யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர்க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன். மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை அதிபர் திருமதி தர்சினி வசந்தமாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் அவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-159)



மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (க-56)

# யாழ்ப்பாணம் வானூர்தி நிலையத்தை மிளகாய் களஞ்சியமாக மாற்றோம்

## புதிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ. 29

நெல்மூடைகளைக் களஞ்சியப்படுத்த அம்பாந்தோட்டை மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்தைப் பயன்படுத்திய மைத்திரி ரணில் அரசைப் போன்று யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை மிளகாய் களஞ்சியசாலையாகத் தற்போதைய அரசு பயன்படுத்தாது என்று ஏற்றுமதி தொழிற்துறை, முதலீட்டு அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் அவர் நேற்றுக் காலை சந்திப்பு நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு என்ற வகையில் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை விரைவுபடுத்தவும் அதற்கு சமனாக, மத்தள, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு வானூர்தி நிலையங்களை அபிவிருத்தி செய்யவும் அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரின் கவனம் திரும்பியுள்ளது. அதற்காக எதிர்வரும் வாரத்தில் பேச்சு நடத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் முடிவுறுத்தி மக்களுக்கு சேவை வழங்கவும் அதேபோல ஆரம்பிக்க வேண்டிய திட்டங்களை விரைவில் ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கின்றோம்.


அதேவேளை, பெரிய நிதி செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டுள்ள மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்தை கடந்த அரசு நெற்களஞ்சியசாலையாக மாற்றியதனால் மக்கள் பணமே வீண்விரயமாகியது. அந்த வானூர்தி நிலையத்தை அதன் பின்னர் திருத்துவதற்கும் பெரிய நிதி செலவாகியது. நாட்டினுள் பல களஞ்சியசாலைகள் இருந்தபோதிலும் மகிந்த ராஜபக்ச என்கிற பெயருக்கு பங்கம் ஏற்படுத்துவதற்காக கடந்த அரசு இதனை செய்தது.

யாழ்ப்பாணம் பலாலி வானூர்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இன்னும் அதற்கான சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

இருப்பினும் யாழ்ப்பாணம் வானூர்தி நிலையத்தில் நாங்கள் மிளகாய்களை களஞ்சியப்படுத்த எதிர்பார்க்கவில்லை.

வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்து அதற்குச் சமனாக மட்டக்களப்பு வானூர்தி நிலையத்தையும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கின்றோம்- என்றார். (ஒ.5)

### தானியங்கி ஊசி உட்செலுத்தியை உருவாக்கினார் வவுனியா மாணவி



வவுனியா, நவ.29

குருதிப் பரிசோதனை மேற்கொள்வதற்கான தானியங்கி முறையிலான ஊசி உட்செலுத்தியை (Auto needle injector) தயாரித்து வவுனியா மாணவி ஒருவர் மாகாண மட்ட ரோபோ ஆக்கப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இன்று இடம்பெறவுள்ள தேசிய மட்ட போட்டியிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி மாணவியான புஸ்பதேவன் ரோகிதா என்ற மாணவியே இவ்வாறு முதலிடம் பெற்றுள்ளார்.

ரோகிதா உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்கிறார். தந்தை இறுதிபோரின் போது உயிரிழந்த நிலையில் தாய், மற்றும் ஆசிரியர்களின் முயற்சியுடன் இதனை உருவாக்கி முதலிடம் பெற்றுள்ளார் என்று ரோகிதா குறிப்பிட்டுள்ளார்.

"மருத்துவ துறைசார்ந்த ஆர்வம் எனக்கு அதிகம் இருந்தது. அதுவே இந்தக் கருவியை அமைப்பதற்கு தூண்டுதலாக அமைந்திருந்தது. பாடசாலையின் அதிபர் கமலேஸ்வரியின் வழிகாட்டலில் தொழில் நுட்பப் பிரிவு ஆசிரியர்களான திருமதி மாலன்பன், ரவித்தா, சயித் பிரசாந், சத்விதன் ஆகியோரின் வழிகாட்டலில் இதனை நான் தயாரித்திருந்தேன். பாடசாலையின் அபிவிருத்தி சங்கமும் எனக்கு உறுதுணையாக இருந்தது, அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துகொள்கின்றேன்" என்று மாணவியான ரோகிதா தெரிவித்தார்.

"எமது பாடசாலை பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

அந்த வகையில் இந்த மாணவி ரோபோ ஆக்கப்போட்டியிலே வெற்றியீட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தானாகவே முன்வந்து குறித்த ஊசி உட்செலுத்தியை தயாரித்துள்ளார், மாகாண மட்டத்திலே பல முன்னணி பாடசாலைகள் இப்போட்டி நிகழ்வில் பங்கு பற்றியிருந்த நிலையில் எமது பாடசாலை முதலிடம் பெற்றுள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. மாணவி ஏனைய மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விழங்குகிறார்" என்று பாடசாலையின் அதிபர் கமலேஸ்வரி தெரிவித்தார். (ஐ-110)

### பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, நவ.29

யாழ்ப்பாணம் மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை வித்தியாலய முதன்மை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-9)

★★★★

கொடிகாமம், நவ.29

யாழ்ப்பாணம் நாவற்காடு வரணி கரம்பை அ.மி.த.க பாடசாலை பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை வித்தியாலய அரங்கில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச. அகிலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த கிருபாகரன், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் க. அருந்தவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

### ஆக்கத்திறன், டெங்கு அற்ற சூழல் போட்டி; கரைச்சிப் பாடசாலைகளுக்கு முதலிடம்

கிளிநொச்சி, நவ. 29

பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கழிவுப் பொருள் ஆக்கத்திறன் போட்டியில் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தைச் சேர்ந்த பாடசாலைகள் முதலிடம் பெற்று மாகாணநிலைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அந்தப் பாடசாலைகள் டெங்குபரவும்சூழல் அற்ற பாடசாலைகளாகவும் இனங்காணப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியக பிரிவுக்குட்பட்ட பளை, பூநகரி, கண்டாவளை கரைச்சி ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பணியகப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலைகளின். மாணவர்களுக்கிடையே இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி இந்து கலவன் பாடசாலை கழிவுப் பொருள்களைக்கொண்டு ஆக்கப்பொருள்களை உருவாக்கியமைக்காக முதலிடத்தைப் பெற்றது. கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம், வட்டக்கச்சி மேற்கு பாடசாலை ஆகியவை டெங்கு அற்ற சூழலைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டு முதலிடத்தைப் பெற்றன.

இந்தப் பாடசாலைகள் மாவட்ட நிலைப்போட்டிகளில் பங்குபற்றி முதலிடங்களைப் பெற்று மாகாண நிலைப்போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

### பயன்தரு மரங்களில் புதிய வகை நோய்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாண மாவட்டத்தில் மா, பலா, வேம்பு ஆகிய மரங்களில் புதிய வகை நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.

மரங்களைத் தாக்கும் இந்த நோயின் தாக்கம் மரத்தின் உச்சியில் இருந்து ஆரம்பித்து மரத்தைப் படிப்படியாக அழிக்கும் நிலைமைக்குத் தள்ளும்.

மரத்தின் இலைகள் சிறிய தாகக் காணப்படுதல், மரக்கொப்புகளில் பழுப்பு நிறம் தெரிதல், பழங்கள் காய்ப்பது குறைதல் போன்ற அறிகுறிகள் இந்த நோய் தாக்கத்தின் அறிகுறியாக கண்டறியப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இந்த நோய்த் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கண்டறிவதற்கு விவசாய பிரிவின் அதிகாரிகள் தற்போது களத்துக்குச் சென்று ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

### விழிப்புணர்வு செயலமர்வு

கொழும்புத்துறை, நவ.29

சுகாதார நகரமாக்கும் செயற்றிட்டத்துக்கமைவாக விழிப்புணர்வுச் செயலமர்வு கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப நலத்துறைப்பிரிவின் ஏற்பாட்டில் கல்வியியல் கல்லூரி அதிபர் சு. பரமானந்தம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் மருத்துவர் குமானந்தன் அறிமுக உரையை வழங்கினார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சுகாதாரக் கல்வி மருத்துவ அதிகாரி மருத்துவர் சுகாதார நகர செயற்றிட்டம் தொடர்பாக விரிவுரை யாற்றினார்.

ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து யாழ்ப்பாண நகரில் உள்ள 10 பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (135)

### சி.ஐ.டியினருக்கு வெளிநாட்டுத் தடை

# மீண்டும் வெள்ளை வானை நினைவுபடுத்துகிறதா அரசு?

### கேள்வி எழுப்புகிறார் முன்னாள் ராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க

கொழும்பு, நவ. 29

குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர் பட்டியலை வெளிப்படுத்தி அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறாமல் தடுத்திருப்பது அடிப்படை உரிமை மீறும் செயலாகும். நாட்டின் பாதுகாப்பு கடமையில் இருக்கும் அவர்கள் தொடர்பில் அரசு பொறுப்புடன் செயற்பட்டிருக்கவேண்டும். அரசின் இந்த நடவடிக்கை மக்களுக்கு வெள்ளை மூடுந்து ஞாபக மூட்டும் செயலாகும் என்று முன்னாள் இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய மக்கள் அமைப்பு பணிமனையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் திணைக்களத் தில் சேவை செய்யும் அதிகாரிகள் சிலர் நாட்டைவிட்டு வெளியேறாமல் அவர்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது பிரச்சினைக்குரிய விடயமாக இன்று பார்க்கப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு இந்த நிலைக்கும் நானும் ஆளாகி இருந்தேன். நான் இராணுவத்தில் இருந்து வெளியேறிய நிலையில் சிவில் உறுப்பினராகவே நாட்டைவிட்டுச் சென்றேன். என்றாலும் அதன் பாதிப்பு தொடர்பில் என்னால் நன்கு உணர்ந்துகொள்ளலாம். இலங்கை பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது குடும்பம் சகிதம் நாட்டைவிட்டு சென்றுள்ளதை அறிகின்றேன். அதேபோன்று இரகசிய பொலிஸ் பிரிவு அதிகாரிகள் சிலர் நாட்டை விட்டு வெளியேறாமல் தடுப்பதற்கு அல்லது அவர்கள் உரிய அனுமதியுடன் செல்லவேண்டும் என்பதற்காக அவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இது எந்த நாட்டிலும் இடம்பெறக்கூடாத விடயமாகவே நான் காண்கின்றேன். நாட்டு மக்கள் யாராக இருந்தாலும் அவர் எந்த நாட்டுக்கும் செல்வதற்கும் உரிமை இருக்கின்றது. என்றாலும் கடமையில் இருக்கும் நிலையில் செல்வதாக இருந்தால் அந்தத் திணைக்களத் தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

எந்த அரசாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பு கடமையை மேற்கொள்ளும் நிறுவனம் மற்றும் அந்த அதிகாரிகள் தொடர் பில் இதனையும் விட பொறுப்புடன் செயற்பட்டிருக்க வேண்டும். தற்போது இடம்பெற்றிருக்கும் ஒரு சில சம்பவங்கள் மீண்டும்வெள்ளை மூடுந்தை ஞாபகப்படுத்தி இருக்கின்றது- என்றார்.

(ஒ.5)

## ஒளி விழாவும் பிரியாவிடையும்

கிளிநொச்சி,நவ.29

கிளிநொச்சி, குமுழமுனை கதிரவன் பேதுரு முன்பள்ளிகளின் ஒளி விழாவும், பிரியாவிடை நிகழ்வும் முன்பள்ளி வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக குமுழமுனை பங்குத்தந்தை அருட்பணி சுமன் அடிகளார்,சிறப்பு விருந்தினராக குமுழமுனை கிராம அலுவலகர் செல்வி மரிய சுபாஷினி, மதிப்புறு விருந்தினராக கிளிநொச்சி குமுழமுனை அரசினர் தமிழ் கலைவன் பாடசாலை அதிபர் ம. ரகு தீபன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(ஐ-222)



## நுணாவில் கொல்லங்கிராய் வீதியை சீரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி, நவ.29

தென்மராட்சி, தெற்கு பிரதேச மக்களின் முதன்மை வீதியாக காணப்படும் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீதியைச் சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுணாவில் மேற்கு ஏ 9 முதன்மை வீதியில் ஆரம்பித்து வயல்களின் ஊடாக தென்மராட்சி தெற்கு மறவன் புலவு சந்தி வரை சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமானது.

வீதியின் இருபுறமும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் வேளையில் வீதியைப் பயன்படுத்தமுடியாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

அத்துடன் வீதியின் இருபுறமும் சம்புப் புற்களும் பற்றைகளுமாக காணப்படுவதால் மக்கள் அங்குள்ள ஒற்றையடிப் பாதையூடாகவே பயணிக்கின்றனர்.

நெல் வயல்களில் வெள்ளம் காணப்படுவதால் விஷப்பாம்புகள் பற்றைகளுக்குள் மறைந்திருந்து வீதியில் செல்வோரைக் கடிக்கும் வாய்ப்புள்ளது என்று மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

"தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த மாணவர்கள், அரச அலுவலர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மிகவும் அவசியமென கருதி முதல் கட்டமாக வீதியில் காணப்படும் பற்றைகள் துப்புரவு செய்யப்படவேண்டும். இந்த மக்களின் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு வீதியை சீரமைத்து தரவேண்டும். இதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்" என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ - 9)

## வீதி விபத்தில் மூவர் காயம்

மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சகோதரர்கள் இருவர் காயமடைந்தனர். மகிழுர்தியின் சாரதியை சம்பவ இடத்தில் நின்றவர்கள் தாக்கியதில் சாரதியும் காயமடைந்தார்.

மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த 26 வயது 18 வயதுச் சகோதரர்கள் உந்துருளியில் வேலைக்குச் சென்று விட்டு திரும்புகையில் அவ்வழியே வந்த மகிழுர்தி மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ வேளையில் அவ்விடத்தில் நின்ற வர்கள் மகிழுந்து சாரதியை தாக்கியதாகவும் 'இதில் சாரதியான சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைச் சேர்ந்த 21வயது இளைஞன் காயமடைந்தார்.

(ஐ-9)

## மாவீரர் நாள் துண்டறிக்கை விநியோகித்த இருவர் கைது

கொழும்பு, நவ. 29

மாவீரர் தினத்தை கடைப்பிடிக்குமாறு கோரி துண்ட றிக்கைகளை விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர்கள் இருவர் பொகவந்தலாவை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை டின்சின் நகரத்தில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் துண்டறிக்கைகளை பிரதி யெடுத்து இவர்கள் விநியோகம் செய்ததாகவும், அவ்வாறான துண்டறிக்கைகள். பலவற்றை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை நீதி மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## கோத்தாவின் பெயரை பயன்படுத்தி மோசடியாம்

கொழும்பு, நவ. 29

மோசடியில் ஈடுபட்டுவரும் சில தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தமக்கு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரிவித்து, மக்களை ஏமாற்றி தவறாக சலுகைகளை பெற்றுக்கொள்ள முயற்சித்து வருவதாக சாட்சிகளுடன் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்வேறு பதவிகள், நியமனங்கள், கேள்விகோரல்கள் போன்றவற்றை பெற்றுக்கொடுக்க உதவ முடியும் என்று அவர்கள் மக்களுக்கு தெரிவித்து வருகின்றனர். இவர்களில் சிலர் அரச தலைவருக்கு தங்களால் அழுத்தம் கொடுக்க முடியுமென்றும் தெரிவித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

எப்போதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப செயற்படுவதே அரச தலைவர் ராஜபக்சவின் உறுதியான கொள்கையாகும்.

நடைமுறைகளுக்கு புறம்பாக பதவிகள், நிய மனங்கள், கேள்வி கோரல்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக அரச தலைவர் பெயரை பயன்படுத்திக்கொள்ள எவருக்கும் முடியாது.

எனவே இத்தகைய மோசடிக்காரர்களை நம்பி ஏமாற வேண்டாமென அரச தலைவர் பணியகம் மக்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றது.

அரச தலைவரின் பெயரைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி சலுகைகளை பெற்றுக்கொள்ள முயற்சிப்போருக்கு எதிராக சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் -என்றுள்ளது. (ஒ.5)

## பசில் ராஜபக்ச வெளிநாடு செல்வதற்கான தடை நீக்கம்

கொழும்பு, நவ. 29

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடை, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான நிதியை முறைக்கேடாகப் பயன்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தில் அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

பசில் ராஜபக்ச சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, பிரதிவாதி மருத்துவ சிகிச்சைகளுக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, டிசெம்பர் 5ஆம் திகதி முதல் மார்ச் 7ஆம் திகதிவரையான காலப்பகுதியில் பசில் ராஜபக்ச வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், இந்த வழக்கு அடுத்த வருடம் மார்ச் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஒ.5)

## கொழும்பில் 11 பேர் கடத்தல்

# அரச தரப்பு சாட்சியாகும் மூன்று சந்தேக நபர்கள்!

கொழும்பு, நவ. 29

**வெ**ள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 பேர் தொடர்பான வழக்கின் மூன்று சந்தேக நபர்கள் அரச தரப்பு சாட்சியாக முன்னிலையாவதற்கான தங்களது விருப்பத்தை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 2008ஆம் மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பு-தெகிவளை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகியபகுதிகளில்வெள்ளைவானில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 5தமிழ்மாணவர்கள் உள்பட 11பேரது வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த வழக்கில் 10ஆவது சந்தேக நபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வெளிநாடு தப்பிச் சென்று மீண்டும் நாடு திரும்பிய போது கைது செய்யப்பட்ட கடற்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரி லெப்டினன் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கூறி கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கமாண்டர் டி.கே.பி.தசநாயக்க உள்பட 15 சந்தேக நபர்களும் மன்றில் வரிசையாக முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணையை நெறிப்படுத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா, தனது உயிருக்கு அச்சுறுத்தல் எனக்கூறி, சுவிஸ்க்கு தப்பிச்சென்ற நிலையில், பொலிஸ் பரிசோதகர் அனில் என்ற அதிகாரி தலைமையில் இரண்டு அதிகாரிகள் மன்றில் முன்னிலையாகினார்கள். வழக்கு மீதான விசாரணையின்போது, இந்த வழக்கை விசாரணை செய்த விதம் குறித்து சில கருத்துக்களை முன்வைத்த இரகசிய பொலிஸார், மறுவிசாரணைக்கு உத்தரவிடும்படி கோரிக்கை முன்வைத்தனர்.

இருந்த போதிலும் இந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதிவான் ரங்க திஸாநாயக்க, விசாரணைகள் முற்றுப்பெற்றிருப்பதாக ஏற்கனவே மன்றில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையை சுட்டிக்காட்டினார். எனினும் பிற்பகலில் வழக்கை விசாரணை செய்யும்படி இரகசிய பொலிஸார் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, வழக்கு பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் விசாரணை மாலை 3.30 அளவில் ஆரம்பமாகியது.

இதன்போது முன்னிலையாகிய இரகசிய பொலிஸார், இந்த வழக்கு தொடர்பில் தெரிவுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமை தலைமை நீதியரசர் இன்னும் நியமிக்காததால் அதுவரை வழக்கை ஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

அதேபோல, இந்த வழக்கில் மூன்று சந்தேக நபர்களுக்கு முன்வைக்கப்பட்ட பொது மன்னிப்பு நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், அதற்கமைய அவர்கள் அரச தரப்பு சாட்சியாக முன்னிலையாவதற்கு விருப்பத்தை வெளியிட்டிருப்பதாகவும் மன்றில் குறிப்பிட்டனர்.

இவற்றைக் கவனத்திற்கொண்ட நீதவான் ரங்க திசாநாயக்க, லெப்டினன் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சியை எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதோடு ஏனைய 15 சந்தேக நபர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம்திகதி முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டார். (ஒ,5)

# புதிய அமைச்சுக்களுக்கு செயலர்கள் நியமனம்

20 புதிய அமைச்சுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள செயலர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது.

சுற்றுலா மற்றும் வானூர்தி சேவைகள் அமைச்சின் செயலராக திருமதி எஸ்.எம்.மொஹமட், வீதி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் செயலராக ஆர்.டப்ளியு.ஆர் பேமசிறி, நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலராக ஜே.ஜே.ரத்னசிறி, பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சின் செயலராக ரவீந்ர ஹேவாவிதாரன, கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சின் செயலராக ஜே.ஏ.ரஞ்சித், உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் செயலராக டி.எம்.ஏ.ஆர்.பி.திசாநாயக்க, பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சின் செயலராக எச்.எம்.காமினி செனெவிரத்ன, தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சின் செயலராக டப்ளியு.ஏ.சூலானந்த பெரேரா, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் செயலராக திருமதி வசந்தா பெரேரா, துறைமுக மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சின் செயலராக எம்.எம்.பி.கே.மாயாதுன்னே, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் எஸ்.ஹெட்டியாரச்சி,

அயலுறவுத்துறை அமைச்சின் செயலராக ஆர்.பி.ஆரியசிங்க, மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் செயலராக திருமதி. ஏ.எஸ்.எம்.எஸ்.மஹானாம, சுற்றாடல் மற்றும் வன உயிரிகள் வள அமைச்சின் செயலராக ஜே.எம்.சி.ஜயந்தி விஜேதுங்க, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலராக ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க, கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சின் செயலராக எம்.பி.டி.யு.கே.மாபாபத்திரன, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் செயலராகதிருமதி ஆர்.எம்.ஐ.ரத்னாயக்க, சுகாதாரமற்றும்சுதேசமருத்துவசேவைகள் அமைச்சின் செயலராக திருமதி பி.எஸ்.எம்.சார்ல்ஸ், சிறிய, நடுத்தர அளவிலான வர்த்தகமற்றும்தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலராக என்.பி.மொண்டிரணதுங்க, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் செயலராக கலாநிதி பிரியத் பந்து விக்ரம ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (ஒ,5)

## மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

மன்னார்,நவ.29

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் நகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி உதவியுடன், மன்னார் வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதில் மன்னார் வலயக் கல்வி திணைக்கள அதிகாரிகள், நகர சபை அதிகாரிகள், மன்னார் நகர சபை உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.(க-56)

# இந்தியாவின் நண்பர்கள் உண்மையில் தமிழர்களே

*ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு*

மட்டக்களப்பு, நவ. 29

பிராந்திய அரசியலுறவு தொடர்பில் இந்தியா தனது நண்பர்கள் யார் என்பதை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். இந்தியாவின் உண்மையான நண்பர்கள் தமிழர்களே.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி கட்சியின் ஊடகப் பிரிவுப் பொறுப்பாளர் க.துளசி அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமது இனம் வாழ்வுரிமை இழந்து தமது நாட்டுக்குள்ளேயே ஏதிலிகள் ஆக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு அகிம்சை முறையிலும் அரசியல் ஊடாகவும் தீர்வுகள் எட்டப்படா நிலையில் தமது சந்ததியாவது இலங்கை தீவில் தங்களது பூர்வீக நிலங்களில் ஆட்சி உரித்துடன் வாழ்வதற்கு தமது இளமை காலங்களை துறந்து உறவுகளை பிரிந்து தமது இன்னுயிரை அர்பணிக்க புறப்பட்ட அற்புதமானவர்கள்தான் எமது மாவீரர்கள்.

அவர்களின் தியாகங்களையும் மரண்புகளையும் நினைவில் கொள்ளும் புனித நாள் விடுதலைப் போராட்டம் பேறாளிகளின் அதிஉச்ச தியாகங்களாலும் மக்களின் பேராதரவாலும் போராட்டம் வலுப்பெற்றிருந்தது. 2009இல் பிராந்திய நலன் சார்ந்து எமது விடுதலைப்போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு பெரும் மனித பேரவலத்துடன் முள்ளிவாய்க்காலில் முடித்து வைக்கப்பட்டது.

எதிர்கால தாயக அரசியல் பரப்பில் புதிய முனைப்புகள் புதிய சிந்தனைகள் புதிய முகங்கள் தொடர்பில் எமது மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இலங்கையின் எதிர்கால ஆட்சி உரிமைகளில் தமிழர்களின் நலன் சார்ந்து தமிழர் தரப்பு பங்காற்ற முயற்சிக்கவேண்டும். புலம்பெயர் உறவுகளே இனிவரும் காலங்களில் வாழ்வாதார உதவிகளோடு நின்றுவிடாமல் நீங்கள் கற்றுணர்ந்த உங்களின் தொழில் புலமையையும் பெருமளவிலான முதலீடுகளையும் வடக்கு கிழக்கில் ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

பொருளாதார ரீதியாக நலிவுற்றுள்ள எமது இனம் மீட்சிபெறவழிவகுக்கும். அதேபோன்று முதலீடுகளுக்கான பாதுகாப்பை எமது அரசியல் தலைமைகள் உருவாக்க வேண்டும்.

தாயகத்திலும் பன்னாடுகளிலும் வாழ்கின்ற இந்தத் தேசத்துக்கு தமது வாழ்நாளை அர்ப்பணித்த போராளிகள், தேசப்பற்றாளர்கள் விடுதலைப் புலிகள் சார்ந்த கட்டமைப்புக்களை இணைத்துக்கொண்டு பெரும் பங்களிப்போடு எமது மக்களுக்காக காத்திரமானதும் உண்மையானதுமான அரசியல் பயணத்தை முன்னெடுக்க இந்தப் புனித நாளில் திடசங்கற்பம் பூணுகின்றோம் - என்றுள்ளது. (து-46)

# ஆறு பேர் கொண்ட குழு கோத்தாவால் நியமனம்

அரசநியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களுக்குத் திறமையும்தகைமையும்கொண்டவர்களைநியமிப்பது தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் பணிப்புரையின் பேரில் அரச தலைவர் பணியகம் ஆறு தொழில் வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

முன்னாள் அமைச்சரவையின் செயலரும் அரசதுறை பற்றியவிரிவான அனுபவங்களைக்கொண்டவருமான மூத்த அரச அதிகாரி சுமித் அபேசிங்கவின் தலைமையிலான இந்தக்குழுவில் பிரசன்னரத்நாயக்க, கலாநிதி நாலக்ககொடஹேவா, டயன்கோமஸ், கலாநிதிபிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் ஜகத் வெல்லவத்த ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தகைமை வாய்ந்த தொழில் வல்லுநர்கள் தொடர்பான பரிந்துரையை அடுத்த மாதம் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இந்தக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22)

# வெள்ளைவானில் கடத்தப்பட்டார் சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி

## நிசாந்த சில்வாவுக்கு தஞ்சம் வழங்கியதையடுத்து இந்த நிலமை

கொழும்பு, நவ. 29

சுவிஸ்லாந்துக்கு தப்பிச்சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரி நிசாந்த சில்வாவுக்கும் அவரது குடும்பத்துக்கும் நுழைவிசைவு (விஸா) வழங்கியதை அடுத்து கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் நுழைவிசைவு வழங்கும் பிரிவில் முக்கிய பொறுப்பில் பணியாற்றும் இலங்கையரான பெண் அதிகாரி ஒருவர் பணி முடிந்து வீடு திரும்புகையில் வெள்ளைவானில் கடத்தப்பட்டுள்ளார் என்று நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

வெள்ளை வானுக்குள் வைத்தே அந்த அதிகாரி 2 தொடக்கம் 3 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்படிருக்கின் றார்.

அவரது அலைபேசியில் இருந்த விடயங் கள் அனைத்தும் கடத்தியோரால் பலவந் தமாக உருவப்பட்டுள்ளன. வேறு யார், யார் எல்லாம் அரசியல் தஞ்சத்துக்கான நுழைவிசைவுக்கு தூதரகத்தை நாடியுள் ளனர் என்பதிலிருந்து பல விடயங்கள் குறித்து அச்சுறுத்தி விசா ரிக் கப்பட்ட பின்னர், அவரை வீதியோரத்தில் நெட்டித் தள்ளிவிட்டு வெள்ளைவான் பறந்து விட்டதாகத் தகவல் வெளியாகி யுள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னர்தான் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப் படாதவர்கள் என்ற பேரில் எழுநூறு புல னாய்வாளர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் கட்டுநாயக்க வானூர்தி நிலைய குடியகல்வு, குடிவரவுப் பிரிவுக்கு அனுப் பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சுவிஸ் தூதரக ஊழியருக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தை அடுத்து கொழும்புக்கான சுவிஸ் தூதர் இலங்கை யின் புதிய அயலுறவுத்துறை அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவை நேற்றுமுன் தினம் சந்தித்தார்.

இதேசமயம், சுவிஸ் தலைநகர் பேர்னில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தூது வர் சுவிஸ் அயலுறவுத்துறை அமைச் சுக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டு இந்த விடயம் குறித்து அவரிடம் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரி கின்றது.

தமது தூதரகப் பணியாளர் வெள்ளை வானில் கடத்தப்பட்டு, அச்சுறுத்தி விசா ரிக்கப்பட்டு, அவரிடமிருந்த தகவல்கள் பல வந்தமாக உருவப்பட்டுள்ளமையை சுவிஸ் அரசு சிறிய விடயமாகக் கருத வில்லை என்று அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

### தூதரகப் பணியாளர்

## கடத்தப்பட்டமையை கண்டிக்கின்றோம்

### சுவிஸ் அயலுறவுத்துறை அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

இலங்கையில் உள்ள சுவிஸ்லாந்துதூதரகத்தின் உள்ளூர்பணியாளர் ஒரு வர் கடத்தப்பட்டு அச்சு றுத்தப்பட்டுள்ளார். இந் தச் சம்பவத்தைக் கண் டித்துள்ள சுவிஸ் அரசு முழுமையான விசா ரணை நடத்த வேண்டும் என்று கோரியுள்ளது.

சுவிஸ் தூதரகத்துடன் தொடர்புடைய தகவல் களை வெளிப்படுத்தக் கோரியே, பெண் பணியா ளர் ஒருவர், அடையாளம் தெரியாத நபர்களால் தற்காலிகமாகக் கடத்தி செல்லப்பட்டு அச்சுறுத் தப்பட்டுள்ளார் என்று சுவிஸ் அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள் ளது. மிக மோசமான ஏற் றுக் கொள்ள முடியாத தாக்குதல் என்று இதனை சுவிஸ் அயலுறவுத்துறை அமைச்சு குறிப்பிட்டுள் ளது. சுவிஸ்லாந்து உட னடியாக இந்த சம்பவம் குறித்து இலங்கை அதி காரிகளிடம் தெரிவித்துள் ளதுடன், சம்பவம் நடந்த சூழ்நிலைகள் குறித்து உடனடியாக முழுமை யான விசாரணையை நடத்தக் கோருகிறது, என்று சுவிஸ் அயலுற வுத்துறை அமைச்சின் பேச்சாளர் பியரே அலய்ன் எல்சிங்கர் தெரி வித்துள்ளார்.

பேர்னில் உள்ள இலங் கைத் தூதுவர் சுவிஸ் அயலுறவுத்துறை அமைச்சுக்கு அழைக்கப் பட்டு இந்த விடயம் குறித்து கண்டனம் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## சுவிஸ் தூதரகப் பணியாளருக்கு அச்சுறுத்தல்: அரசுக்கு தெரியாதாம்

சுவிஸ் தூதரக பணியாளர் தடுத்து வைக் கப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சம்பவம் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று அரசு தெரிவித்துள்ளது.

சுவிஸ் தூதரகப் பணியாளர் வெள்ளை வானில் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப் பட்டு அச்சுறுத்தப்பட்டதாக சுவிஸ் அய லுறவுத்துறை அமைச்சு கூறியிருந்தது.

இதுகுறித்து அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் செய்தியாளர் சந் திப்பில், அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன்விடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து தங்களுக்குத் தெரியவில்லை என்றும், பதில் பொலிஸ் மா அதிபர் இந்த விவகாரம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என் றும் அவர் பதிலளித்துள்ளார். (ஒ,5)



## உணர்வெழுச்சியுடன் மாவீரர் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,நவ.29

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் துயி லும் இல்லங்கள் மற்றும் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத் தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ சேனாதிராசா தலைமையில் நிகழ் வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், மாகா ணசபை முன்னாள் உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு தேராவில் துயிலும் இல் லத்தில் மாலை 6 மணிக்கு மணியொலி எழுப்பட்டதையடுத்து, அகவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது. பொதுச் சுடரை மாவீர்ர்களின் தந்தையொருவர் ஏற்றி னார். தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலிக்க விடப்பட்டதையடுத்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத் தப்பட்டன.

முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயி லுமில்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து, சம நேரத்தில் ஏனைய மாவீரர்களின் பெற்றோர்களா லும், சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத் தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து, மாவீரர்களின் நினைவாக, மாவீரர்க ளின் உறவினர்களுக்கு தென்னங்கன் றுகள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் சிவப்பு மஞ்சள் கொடி களாலும், மின்குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. .பொதுச்சு டரை இரண்டு மாவீரரின் தாயார் ஏற்றி வைக்க சம நேரத்தில் அனைத்து மாவீரர்களுக்குமான சுடர்கள் ஏற்றப்பட் டன. கொட்டும் மழைக்கும் அப்பால் ஏற்றப்பட்ட சுடர்கள் சுடர்விட்டு பிரகாச மாக ஒளிர்ந்தது.

முல்லைத்தீவு களிக்காடு மாவீரர் துயி லும் இல்லத்தில் மாவீரர்தின நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர்களை நினைவுகூர்ந்து திருகோ ணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தி னர். காணாமல் ஆக்கப்பட்ட உறவு களை தேடி அலையும் சங்கத்தின் ஏற் பாட்டில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடி முன் மாரியில் அமைந்துள்ள மாவீரர் துயி லும் இல்லம் , மற்றும்கண்டலடி ஆகிய வற்றிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. மாவீரர்களின் பெற்றோர்கள், முன்னாள் போராளிகள், உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பலர் கலந்து கொண்டு ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

(க-70,222,160,110,105,246,35)

# இரண்டு நாடுகளாகப் பிரிவதற்கு பன்னாடுகள் இடம் தரவேண்டும்

## சிவமோகன் எம்.பி. கோருகின்றார்

முல்லைத்தீவு, நவ. 29

*13ஆவது திருத்தத்துக்கும் மேலாக எம்மை நாமே ஆழ வேண்டும் இல்லையேல் இரண்டாகப் பிரிந்து இரண்டு நாடுகள் என்ற பாதையை நோக்கிப் பயணிப்பதற்கு பன்னாடுகள் இடம்தரவேண்டும். ஏன் என்றால் பன்னாடுகள்தான் சமாதானப் பேச்சு என்ற போர்வையில் ஈழ விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்கால் வரைகொண்டுவந்து முடிவுறுத்தியவர்கள். எனவே உங்களுக்கு (பன்னாடுக்கு) இந்தப் பொறுப்பு இருக்கின்றது என்று கொள்ளலாம்.*



இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டானில் வானூர்தித் தாக்குதலில் உயிரிழந்த 12 பேரின் 29ஆம்ஆண்டுநினைவேந்தல் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது. மாவீரர் தினத்தன்று மக்கள் தங்கள் உறவுகளை நினைவேந்தல் செய்வதற்காகச் சென்றபோது சிறிலங்கா வானூர்திப் படையினர் தாக்குதல் நடத்தி அவர்களைக் கொன்றனர். 1990 ஆம் ஆண்டு இது இடம்பெற்றது. ஒரு நாடு தன்னுடைய நாட்டு மக்களுக்கு எதிராகவே வானூர்திகளைப் பாவித்து தாக்குதல் நடத்திய வரலாறு இது. அதில் நினைவுரை யாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டுக்காக உயிரிழந்தவர்களை நினைவேந்தல் செய்வதற்கு உரிய உரித்து தமிழ் மக்களுக்கு இல்லையா? சிங்களதேசம் சிங்கள படையினரை வைத்துக்கொண்டு தமிழர்களுக்கு எதிராக தன்னுடைய அடக்குமுறையை அவிழ்த்து விட்டது. அதற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் திரண்டு எழுந்து படையினருக்கு எதிராகப் பேராடினார்கள். ஒருநாட்டில் இரண்டு இராணுவம் போராடியது என்பது வரலாறு. இதனை மறந்துவிடுங்கள் என்று கோரிக்கொண்டிருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. இதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் எமது தமிழினமும் இல்லை என்பது தான் இன்றைய வரலாறு.

எதற்காகப் போர் நடைபெற்றது என்பதை நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டும். மீண்டும் இந்த விடயங்கள் நடைபெறமால் இருக்க உறுதிப்படுத்த வேண்டும். பொறுப்புக்கூறலை நீங்கள் செய்துகொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பது பகிரங்கமான உண்மை. இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு இந்த மக்களுக்காகப் பன்னாடுகள் அனைத்தும் சேர்ந்து ஐ.நா. சபையின் ஊடாக தீர்வுக்கு வரவேண்டும். ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேரவை ஒரு விவாதம் நடத்தும் அமைப்பாகத்தான் இருக்கின்றது என்பது கவலைக்குரிய விடயம். பாதுகாப்புச் சபைக்கு இந்த விடயத்தை முன்னி லைப்படுத்தி பன்னாட்டு விசாரணை நடத்தி தமிழர்களின் நியாயமான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க பன்னாடுகளும் ஐ.நா. சபையும் முன்வர வேண்டும். மாவீரர்தின நாளில்கூட இந்த அரசால் பல்வேறு வகையான அடக்குமுறைகள் எம்மீது திணிக்கப்படு கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான் தமிழர்களின் பிரதிநிதிகள். அதிலிருந்து மக்கள் பிரிந்து விடக் கூடாது- என்றார். (த-ரி3)

# அமெ. உடன்பாட்டில் கையெழுத்திடோம்

## கூறுகிறார் வீரவன்ச



கொழும்பு, நவ. 29

இலங்கை அரசு அமெரிக்காவுடன் எம்சிசி உடன்பாட்டில் கையெழுத்திடாது என்று, அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இடைக்கால அரசின் புதிய அமைச்சராக கடந்ததிங்கட்கிழமை கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார். 'அமெரிக்காவுடன் எம்.சி.சி. உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு எமது அரசு எதிர்பார்க்கவில்லை. இந்தபிரச்சினையில் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ- 5)

# இரவு நேரங்களில் அதிகளவு மழை!



கொழும்பு, நவ. 29

நாட்டில் வட கிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை நிலைமை படிப்படியாக நாடு முழுவதும் பரவலடைந்துள்ளது. இதனால் இரவு நேரங்களில் அதிகரித்த மழைக்குச் சாத்தியம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட் டுள்ளதாவது:

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, பதுளை, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 தொடக்கம் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மிற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்- என்றுள்ளது. (ம)





தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் ஆதரவாளர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து நன்றி தெரிவித்தார். (ஐ-173)

# விஜேதுங்க - குணரத்ன சந்தித்துப் பேச்சு

கொழும்பு, நவ. 29

கடலோர பாதுகாப்புப்படை பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் சமந்த விஜேதுங்க, பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கடலோர பாதுகாப்புபடை பணிப்பாளர் நாயகம் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோருக்கிடையே சினேக பூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது கடலோர பாதுகாப்புபடை பணிப்பாளர் நாயகம் புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு செயலருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்த நிகழ்வை நினைவு கூறும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



மாவீரர் நாள் விவகாரம்

# மொறட்டுவவில் தமிழ் மாணவர்களுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, நவ. 29
ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் தமிழ் மாணவர்களை இலக்கு வைத்து அச்சுறுத்தும் நடவடிக்கைகளை பெரும்பான்மை மாணவர்கள் நேற்றுப் புதன்கிழமை முன்னெடுத்துள்ளனர். இரண்டு தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

மாவீரர் நாள் தொடர்பில் உணர்வுடனான பதிவை ஒன்றை 'வட்ஸ்அப் குரூப்பில்' பதிந்ததையடுத்து தமிழ் மாணவர்களை அழைத்து அச்சுறுத்திய பெரும்பான்மையின மாணவர்கள், வட்ஸ்அப் பதிவு மற்றும் முகநூல் பதிவுகளை நீக்குமாறு மிரட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மூடுவதாக அறிவித்து சிங்களமாணவர்கள் நுழைவதற்கு தடைவிதித்துவிட்டு மாவீரர் தினம் கொண்டாடுகிறீர்களா? என்றும் அவர்கள் மிரட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு நடைபெற்றுள்ளது.

பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மூத்த மாணவர்கள் சிலர், தமிழ் மாணவர்களை தமது அறைக்குள் விட்டு பாதுகாத்ததுடன், அடாவடியில் ஈடுபட்ட பெருபான்மையின மாணவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். அதனால் தங்குமிடத்துக்கு வெளியே சென்ற பெரும்பான்மை மாணவர்கள் இராணுவச் சிப்பாய் ஒருவரின் படத்தை வைத்து பிறந்த நாள் கொண்டாடியதுடன் பெரும் சத்தத்துடன் சிங்களப் பாடல்களை ஒலிக்கவிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ.5)

## மீண்டும் எழுகின்றனர் நந்திக்கடல் மீனவர்கள்

முல்லைத்தீவு, நவ. 29
முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் பகுதியை அண்டியுள்ள மீனவர்கள், நந்திக்கடலில் மீண்டும் மீன்பிடி நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மாதங்களில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக நத்திக்கடல் பகுதியில் நீர் வற்றியிருந்தது. இதனால் நந்திக்கடலையே வாழ்வாதாரமாக நம்பியிருந்த சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருந்தது. அந்த மீனவர்கள் கூலித் தொழில் உள்ளிட்ட தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு பெரும் சிரமத்தின் மத்தியில் தமது வாழ்வாதாரத்தை ஈடுசெய்து வந்தனர்.

தற்போது நாடு முழுவதும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் மழை கொட்டித்தீர்த்துள்ளது. இந்த அடைமழை காரணமாக நந்திக்கடலின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. கடலின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் மீனவர்கள் மீண்டும் தமது மீன்பிடித் தொழிலை ஆரம்பித்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

நந்திக்கடலின் நீர்மட்டம் மேலும் உயர்வடைந்து பெருங்கடலுடன் சங்கமிக்கும் வரை அதிகளவிலான மீனவர்களால் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் மீனவர்களால் தெரிவிக்கப்படுகிறது. (ம-21)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 29
மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலையின் பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பிரான்பற்றில் அமைந்துள்ள மார்க்கண்டுசுவாமி சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமாதான நீதிவான் சண்முகராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்த ரசிவம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக விவசாய சம்மேளனத்தலைவர் ச.இரத்தின சிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29
இந்த வருடம் இடம்பெற்ற தேசியமட்ட தமிழ்த்தின நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் புள்ளியமூர்த்தி கணேசராசாவின் 'உயிர் பழி' இலக்கிய நாடகம் முதலிடம் பிடித்தது. ஆற்றுகையாளர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அத்துடன் குறித்த நாடகம் ஆற்றுகைப்படுத்தப்படவுள்ளது. பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம)

## தமிழ் அரசியல் கைதிகள் 94 பேரையும் விடுவிக்கவும்

*அரச தலைவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கடிதம்*

யாழ்ப்பாணம்,நவ.29
நீண்ட காலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் 94 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டங்களில் ஏதோ ஒரு வகையில் துணை புரிந்தனர் என்ற அடிப்படையில் அவசர காலச் சட்டத்தின் கீழ், தற்போதும் தடுத்து வைத்திருக்கும் 94 அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு சிறையில் வாடும் கைதிகளில் பலருக்கு வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் பலருக்கு தீர்ப்பிடப்பட்டுள்ளது. சிறையில் வாடும் குறித்த தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பில் தேவைப்படின் நேரில் சந்தித்துக் கலந்துரையாடவும் தயாராகவுள்ளேன்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக தாங்கள் இருந்த காலத்தில் இவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், இவர்களின் விடயமும் தாங்கள் அறிவீர்கள் எனவும் நம்புகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க-105)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐ.தே.க. நிலைப்பாடு என்ன?

*சபாநாயகர் கடிதம்*

கொழும்பு, நவ. 29
எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்குமாறு கோரி 57 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் தமக்கு கிடைத்துள்ளதாகவும் அது குறித்து கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை கூடி ஆராய்ந்து தெரிவிக்குமாறும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரியுள்ளார். அந்த முடிவுகளின் அடிப்படையில் அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதனை தம்மால் அறிவிக்க முடியுமென சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ஒ.5)

## நிசாந்தவை நாடு கடத்த முடியாது

*சுவிஸ் அரசு தெரிவித்ததாக சிங்கள ஊடகம் தகவல்*

கொழும்பு, நவ. 29
குற்ற விசாரணை திணைக்களத்தின் உயர் அதிகாரியான நிசாந்த சில்வாவை இலங்கைக்கு நாடு கடத்த முடியாதென சுவிஸ் அரசு தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுவிஸ் சட்டத்துக்கு அமைவாக அவரையும் அவரது குடும்பத்தினரையும் மீண்டும் இலங்கைக்கு அனுப்ப மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நிசாந்த சில்வாவுக்கு எதிராக இன்டர்போல் பிடியாணை இல்லாமையால் அவருக்கு எதிராக செயற்படுவதற்கு சுவிஸ் பொலிஸாருக்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இதேவேளை, மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் நிசாந்த சில்வாவை சந்தித்து லசந்த விக்ரமதுங்க, வசீம் தாஜுடீன், கீத் நோயார், எக்னெலிகொட, உபாலி தென்னகோன் வழக்குகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளனர்.

நிசாந்த சில்வா சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைய சுவிஸ் அதிகாரிகள், அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அரசியல் தஞ்சம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளனர். (ஒ.5)

## ஒளிவிழா நிகழ்வு

மன்னார்,நவ.29
மன்னார் கீரி பிரதேசத்தில் உள்ள சுடரொளி முன்பள்ளி சிறார்களின் ஒளி விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சமூகசேவையாளர் பெருமாள் சிவகுமாரன் சிறார்களுக்கு புத்தகப் பை உட்பட கற்றல் உபகரணங்களை அன்பளிப்பு செய்திருந்தார். மேலும் நிகழ்வில் கீரி மாதர் சங்கத்தினர், பனை தென்னை கூட்டுறவுச் சங்கத்தினர் உட்பட பலர் கல ந்து கொண்டனர். (ஜ-213)



## மருதங்கேணிச் சந்தையிலிருந்து இராணுவம் வெளியேற தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 29
மருதங்கேணிச் சந்தையிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என பருத்தித்துறைப் பிரதேச சபையில் நேற்றுத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு பின்னர் வீதித் தடை அமைத்து மருதங்கேணியில் சோதனையிடும் இராணுவமே மருதங்கேணிப் பொதுச்சந்தையில் தங்கியிருந்தது. இதனால் ஏற்பட்ட அச்சமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டே இராணுவம் வெளியேறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர் ஆ.சுரே ஸ்குமார் சிறப்புப் பிரேரணையாக மாவீர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு கோரிக்கை விடுத்ததை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு இரண்டு நிமிடங்கள் அக வணக்கம் செலுத்தப்பட்டே அமர்வு தொடர்ந்து இடம்பெற்றது. தொடர் ந்து பிரதேச சபையின் பாதீடு ஆரயப்பட்டது.

தொடர்ந்து கரையோர பாதுகாப்பின் கீழ் கடற்கரையில் எந்தவொரு மீனவரும் வாடி அமைத்தோ அல்லது வீடமைத்தோ வசிக்கவோ தொழில் செய்யவோ முடியாத நிலை காணப்படுவதாகவும் இது யாழ்ப்பாணத்துக்கு பொருந்தாது என்றும் இதனை நீக்குவதற்கு புதிய மீன்பிடி அமைச்சரை கோருவது என்கின்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ம-160)

# வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்துக்கு எதிரான வழக்கு இன்று

வவுனியா, நவ. 29

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராகத் தொல்பொருள் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கு வவுனியா நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

நெடுங்கேணி வெடுக்குநாறிமலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து ஆலயத்தில் பொதுமக்கள் வழிபடுவதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பொதுமக்களின் முயற்சியால் வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. எனினும் ஆலய வளாகத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு தொல்பொருள் திணைக்க ளத்தினராலும் பொலிஸாராலும் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் வெடுக்குநாறி மலையில் பக்தர்கள் ஏறுவதற்கு வசதியாக இரும்பினால் அமைக்கபட்ட ஏணிப்படி ஒன்று அந்தப் பகுதி மக்களால் அண்மையில் பொருத்தப்படது. குறித்த ஏணிப்படி பொருத்தியமைக்கு எதிராக தொல்பொருள் திணைக்களத்தால் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒக்டோபர் மாதம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஆலய நிர்வாகத்தினரை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வருகை தருமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் தற்போது குறித்த விடயம் தொடர்பாக வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வர ஆலயத்தின் நிர்வாகம், மற்றும் பூசகருக்கு எதிராக தொல் பொருட்திணைக்களத்தால் வவுனியா நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கே இன்று விசாரிக்கப்படவுள்ளது. (ம-110)

# வவுனியா மாவட்டத்தில் 25 பேருக்கு எய்ட்ஸ்

*வவுனியா, நவ. 29*

*வவுனியாவில் கடந்த16 வருட காலப்பகுதியில் 25பேர் எய்ட்ஸ் நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட பாலியல்நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புவேலைத்திட்ட பொறுப்பு மருத்துவ அதிகாரி கு.சந்திரகுமார் தெரிவித்தார்.*

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக எய்ட்ஸ் தினம் மார்கழி மாதம் முதலாம் திகதி உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வவுனியாவிலும் பாலியல்நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவினரால் இந்தத் தினம் நினைவு கூரப்படவிருக்கின்றது.

"சமூகங்கள் நிலைமையை மாற்றலாம்". என்ற தொனிப்பொருளில் இந்த முறை உலக எய்ட்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படவிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை 3ஆயிரத்து 507 எய்ட்ஸ் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 2ஆயிரத்து 391 ஆண்களும், ஆயிரத்து116 பெண்களும் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் 2003ஆம்ஆண்டிலிருந்து இன்றுவரை 25 எய்ட்ஸ்நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் ஒரு நோயாளி இனங்காணப்பட்டுள்ளார். அவர்களில் 12பேர் மாத்திரமே உயிருடன் இருக்கின்றனர். அவர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கிவருகின்றோம்.

கடந்த மாதமளவில் வவுனியாவில் எய்ட்ஸ் நோயாளி ஒருவர் சாவடைந்துள்ளார். அவருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு நீண்டகாலத்துக்குப் பின்னர் கண்டறியப்பட்டதால் அவர் நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டு சாவடைந்துள்ளார்.

எய்ட்ஸ் நோய் பரவுவதற்கான மூன்று காரணங்களில் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒருவருடன் பாலியல் ரீதியாகத் தொடர்புகொள்ளல், நோய்த்தொற்றுள்ள ஒருவரின் குருதியை இன்னுமொருவருக்குச் செலுத்துதல், தொற்றுள்ள தாய் ஒருவருக்கு பிறக்கின்ற பிள்ளை ஆகியோருக்கு இந்த நோய் பரவுகிறது.

எனினும் தாய் குழந்தை பெறுவதன் மூலமாக பிள்ளைகளுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதை இலங்கையில் முற்றாகத் தடுத்துள்ளோம். கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்களுடைய இணக்கத்துடன் எச்.ஐ.வி. பரிசோதனைகள் மேற்கொள்வதால் அது சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நோய்த்தொற்று ஏற்படுவதற்கு முதன்மைக் காரணமாக விபச்சாரம் காணப்படுகின்றது. வேறு மாவட்டங்களிலிருந்தும் விபச்சார தொழிலாளர்கள் இங்கு வருகை தருகின்றனர். எனவே எய்ட்ஸ் நோய் தொடர்பாக இளைஞர்கள், இராணுவத்தினர், பொலிஸார், மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு தெளிவுபடுத்தல்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

சாதாரணமாக நோயைக் குருதியில் இனம் காண்பதற்கு மூன்று மாதங்கள் தேவையாகவிருந்தது. தற்போது புதிய முறைகள் மூலமாக பத்து நாள்களிலிருந்து, ஒருமாத காலத்துக்குள் இனம் காணமுடியும். அந்தக் காலப்பகுதி எமக்கு மிகவும் கடினமானதாகவும், சவால் நிறைந்ததாகவும் இருக்கிறது. ஏனெனில் அந்தக் காலத்துக்குள் மீண்டும் பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபடுவதால் பலருக்கு நோய்த்தொற்றும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது.

எச்.ஐ.வி. வைரஸ் ஒருவருக்குத் தொற்றினால் அது எய்ட்ஸ் நோயாக மாறுவதற்கு 8 தொடக்கம் 10 வருடங்கள் எடுக்கின்றன. நோய்த்தொற்று ஏற்பட்டவர் சாதாரண ஒரு மனிதரைப் போலவே இருப்பார். அவருடைய முகத்தை வைத்து நோயைக் கண்டுபிடிக்க இயலாது. குருதியைப் பரிசோதனை செய்வதன் மூலமாகவே கண்டுபிடிக்கமுடியும். ஒரு தரமாவது பரிசோதனை மேற்கொண்டால் குறித்த நோய் மற்றவர்களுக்குத் தொற்றாமல் தடுக்கலாம். வவுனியா மருத்துவமனையில் நோயாளர்களாக அனுமதிக்கப்படும் சிலருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. தாமாகவும் சிலர் வருகைதந்து பரிசோதனை மேற்கொள்கின்றனர்.

எனினும் அது குறைவாகக் காணப்படுகின்றது. எனவே வவுனியா மருத்துவமனையில் அமைந்துள்ள பாலியல்நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவில் பொதுமக்கள் தாமாக முன்வந்து பரிசோதனைகளைமேற்கொள்ளமுடியும். இங்கு பரிசோதனைகள் மேற்கொள்பவர்களின் இரகசியங்கள் பாதுகாக்கப்படும் - என்றார். (து-110)

# குப்பை கொட்டுவதை கண்காணிக்க சிசிரிவி

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாணம் கலட்டி நரியன்குண்டு சந்தியில் குப்பை கொட்டுவதைக் கண்காணிக்க மறைகாணிகள் அண்மையில் பொருத்தப்பட்டன.

இந்தப் பகுதியில் இரவு நேரங்களில் வாகனங்களில் வருவோர் குப்பைகளை கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனால் வீதியில் பயணிப்போர் பெரும் சுகாதார சீர்கேட்டை எதிர்நோக்கினர்.

இதனையடுத்து அப் பகுதி மக்கள் நிதி திரட்டி குப்பை போடுபவர்களைக் கண்காணித்து பொலிஸார் மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள மறைகாணிகளைப் பொருத்தியுள்ளனர். (ஐ-9)



# முல்லைத்தீவிலும் துப்புரவுப் பணிகள்

முல்லைத்தீவு,நவ.29

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் சுற்றுச் சூழலை சுத்தப்படுத்தும் பணியில் பொலிஸ் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

அதற்கமைவாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரில் பொலிஸார், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர், பிரதேச சபையினர், சுகாதாரப் பணியாளர்கள், பொது மக்கள் இணைந்து சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் பணியில் கடந்த செவ்வாய்க்கிழன்ம ஈடுபட்டனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான சுத்தப்படுத்தும் நடவடிக்கை புதுக்குடியிருப்பு நகர் வரை சென்று புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் இருமருங்கிலும் உள்ள குப்பைகள் அகற்றப்பட்டன. குப்பைகள் பிரதேச சபையின் உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)



# மன்னார் மாவட்டத்தில் மறைக்கல்வி பரீட்சை


மன்னார்,நவ.29

வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார் நிர்வாகமாவட்டங்களிலுள்ள, மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க மாணவர்களுக்கான வருடாந்த மறைக்கல்விப் பரீட்சை நேற்று இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி, திருவி வியம், கல்விப்பணியகத்தால் அதன் இயக்குனர் அருட்பணி கி.அந்தோனிதாஸ் டலிமா அடிகளாரின் தலைமையில் பரீட்சைகள் இடம்பெற்றன.

பரீட்சையில் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள 46 பங்குகளிலிருந்தும், 186 பாடசாலைகளில் 12 ஆயிரத்து 700 கத்தோலிக்க மாணவர்கள் தோற்றியுள்ளனர்.

பரீட்சைத்தாள்களின் திருத்த வேலைகள் எதிர்வரும் சனிக்கிழமை மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மன்னார் மறைமாவட்ட மறைக் கல்வி நடுநிலையத்தில் கத்தோலிக்க மற்றும் மறைவாழ்வுப் பணியாளர்களால் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(சு-60)



கரவெட்டி பிரதேச செயலக ஊழியர்களால் டெங்கு ஒழிப்புக்கான துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் கரவெட்டி பிரதேச செயலக சுற்றாடலில் நடைபெற்றது. (சு-422)

## போர்க்...

இந்தியாவின் அழைப்பை ஏற்று நேற்று புதுடெல்லி பயணமானார் அரசதலைவர் கோத்தபாய ராஜபக்ச. கோத்தபாயவின் இந்தப் பயணத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைகோ, பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கோத்தபாயவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே கடுமையான கருத்துக்களையும் கண்டனங்களையும் முன்வைத்துள்ளார் வைகோ.

இது தொடர்பில் வைகோ விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'இலங்கை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச, முன்பு பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்தபோது ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்த போர்க்குற்றவாளி ஆவார். அப்போது அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்தார். அவர்தான் இனப்படுகொலைக்கு உத்தரவு பிறப்பித்தார்.

2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி, இந்தியத் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்ற விழாவுக்கு, மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதை எதிர்த்து மதிமுகவினர் இதே நாடாளுமன்ற வீதியில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானோம். ஈழத்தமிழர் படுகொலை குறித்துத் துளி அளவும் கவலை இன்றி, இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்குச் சென்று கோத்தபாய ராஜபக்சவை, இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். இது ஈழத்தமிழர்களின் நெஞ்சங்களில் எரிகின்ற தீயில், மேலும் பெட்ரோல் ஊற்றுகின்ற செயல். ஐ.நா சபை அளித்துள்ள ஆய்வு அறிக்கையின்படி, 2009ஆம் ஆண்டு மட்டும் ஒரு லட்சத்து 37 ஆயிரம் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தாய்மார்களும் சகோதரிகளும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகளையும் விட்டு வைக்கவில்லை. மருத்துவமனைகள் மீது இலங்கை வான்படை குண்டுகளை வீசியது. தரைப்படை பீரங்கித் தாக்குதல் நடத்தியது. படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்தவர்கள் கொல்லப்பட்டார்கள். பள்ளிக் கட்டிடங்களை இடித்துத் தகர்த்தார்கள். •

அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தலில், ஈழத் தமிழர்கள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றனர். எனவே, நான் சிங்கள மக்களின் ஆதரவால்தான் வெற்றி பெற்றேன் என்று கோத்தபாய ராஜபக்ச அறிவித்தார். பதவி ஏற்றவுடன் முதல் வேலையாக அவர் பிறப்பித்த உத்தரவில், ஈழத் தமிழர்கள் வசிக்கின்ற தெருக்களில் இலங்கை ராணுவம் துப்பாக்கி ஏந்தி வலம் வர வேண்டும் என அறிவித்துள்ளார். ஏற்கெனவே ஈழத் தமிழர்கள் வசிக்கின்ற பகுதிகள், சிங்கள ராணுவத்தின் சித்திரவதைக் கூடமாக, கொலைக்களமாக ஆக்கப்பட்டு இருக்கின்றது. 2008ஆம் ஆண்டு, சண்டே லீடர் என்ற ஆங்கில நாளிதழின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதை அனைவரும் அறிவர்.

தான் இறப்பதற்கு முன்பு அவர் எழுதிய தலையங்கத்தில், மகிந்த ராஜபக்சவால் நான் கொல்லப்படுவேன் என்று எழுதியிருந்தார். கோத்தபாய ராஜபக்ச நிகழ்த்திய படுகொலைகள் குறித்து விசாரிப்பதற்காக நிசாந்த சில்வா என்ற அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அந்தப் பொறுப்பில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். எனவே அவர் காவல்துறை ஆணையத்தையும் நீதிமன்றத்தையும் அணுகி அதே பொறுப்பில் நீடித்தார்.

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, நிசாந்த சில்வா அவரது மனைவி மூன்று பெண் மகள்கள் இலங்கையை விட்டு வெளியேறி விட்டனர். இப்போது அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. இலங்கையில் உள்ள சுவிற்சர்லாந்து நாட்டுத் தூதரகத்தின் ஒரு பெண் அதிகாரி, கோத்தபய ராஜபக்சவின் வெள்ளை வான் குண்டர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

ஈழத்தமிழர்கள் இனப் படுகொலையின் போது இந்த வெள்ளை வான் ஒரு கொலைக்கருவியாகச் செயல்பட்டது. அந்தப் பெண் அதிகாரி எங்கோ ஓரிடத்தில் விசாரிக்கப்படுவதாக நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் எழுதி இருக்கின்றது. உலகப் புகழ்பெற்ற றொயிட்டர்ஸ் செய்தி நிறுவனம், தங்களுடைய செய்தியாளர்களை இலங்கையில் இருந்து திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது. கோத்தபாய ராஜபக்சவின் மிரட்டலால், தினப்புயல், தமிழர் தளம் ஆகிய இரண்டு தமிழ் செய்தித்தாள்கள் நிறுத்தப்பட்டுவிட்டன.

அது மட்டுமல்ல. லைட் ஹவுஸ் என்ற, சிங்கள, ஆங்கிலம், தமிழ் செய்தித்தாள்களை வெளியிடுகின்ற, இலங்கையின் பெரிய செய்தி நிறுவனம், தமிழ் செய்தித்தாள்களை நிறுத்துவதாக அறிவித்துவிட்டது. இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றார்கள். கடந்த 30 ஆண்டுகளில் 580 தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுடைய படகுகளைப் பறிமுதல் செய்து, பிடிபட்ட மீனவர்களை இலங்கைச் சிறைகளில் அடைத்துள்ளனர்.

ஆனால், இலங்கை அரசுடன் இந்திய அரசு கொஞ்சிக் குலாவுகின்றது. இது தமிழர்களுக்கு எதிரான அநீதி ஆகும். இப்போது இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்கள் மிரட்டலுக்கும் அச்சத்திற்கும் வேதனைக்கும் ஆளாகி இருக்கின்றனர். அவர்களுடைய துயரத்தை உலகுக்கு எடுத்து உரைக்கவும், கோத்தபாய ராஜபக்சவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்த இந்திய அரசைக் கண்டிக்கவும் நாங்கள் இந்தக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கின்றோம்.

எங்களுடைய முதன்மையான கோரிக்கை ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த குற்றவாளிகளை, பன்னாட்டு நீதிமன்றத்தின் குற்றக் கூண்டில் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்பதே. 90 ஆயிரம் ஈழத் தமிழ்ப் பெண்கள் இப்போது தங்கள் கணவர்களை இழந்து கண்ணீர் சிந்துகின்றனர். காணாமல் போன பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

எனவே ஐநா சபை, மனித உரிமைகள் ஆணையம், தமிழ் ஈழம் அமைப்பதற்காக, ஈழத் தமிழர்கள் இடையே ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் அனைவரும், அந்தப் பொது வாக்கெடுப்பில் வாக்களிக்க வகை செய்ய வேண்டும்- என்றுள்ளது. (ம)

## புதுடில்லியை...

வி.கே.சிங் வரவேற்றார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்டின் பெர்னாண்டோ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து உள்ளிட்டோர் இங்கு வருகை தந்திருந்தனர். வரவேற்பு நிகழ்வு பல்வேறு கலாசார அம்சங்களுடன் நடைபெற்றது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் அழைப்பையேற்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு இரண்டு நாள் அரசமுறை விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அரச தலைவரின் இந்தப் பயணத்தின்போது இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்தை சந்திக்கவுள்ளதுடன், இந்தியத் தலைமை அமைச்சர் இருதரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார்.

அரச தலைவரின் செயலர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் ரவிநாத் ஆரியசிங்க, திறைசேரி செயலர் சஜித் ஆட்டிகல, அரசதலைவரின் ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் அரச தலைவரின் தனிப்பட்ட செயலர் சுகீஸ்வர பண்டார ஆகியோரும் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளனர். (ம-22)

## முன்னணி...

னணி மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களால் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் அமர்வு முதல்வர் இ. ஆனல்ட் தலைமையில் சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. சபையில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்தபோதும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, அதற்கு ஆதரவாக 16 பேரும் எதிராக 21 பேரும் வாக்களித்தனர். அதனால் மேலதிகமாக 5 வாக்குகளால் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. அதேநேரம் சபையின் 7 உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாண மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீடு 28ஆம் திகதி (நேற்று) வாக்கெடுப்புக்கு வரும் என்று கடந்த 21ஆம் திகதியே தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருந்தும் சகல கட்சியில் இருந்தும் பலர் பிரசன்னமாகவில்லை. மாநகர சபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருவரும் ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலா ஒவ்வோர் உறுப்பினர்களும் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை. இதேநேரம் கூட்டமைப்பின் மற்றோர் உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் ஓர் உறுப்பினரும் வாக்கெடுப்பு நிறைவடைந்த நிலையில் சபைக்கு வந்திருந்தனர். (த-ரி1,105)

## திருத்தங்கள்...

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வரைவு கடந்த 21ஆம் திகதி சபையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. இதைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் பொது மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. மாநகர சபை உறுப்பினர்களின் அபிப்பிராயங்களும் கோரப்பட்டிருந்தன. எனினும் எந்தவொரு அபிப்பிராயங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபை உறுப்பினர்களால்கூட எந்தவொரு அபிப்பிராயமும் சமர்ப்பிக்கவில்லை. அதே தினத்தில், வரவு செலவுத்திட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களுக்கான திருத்தங்கள் தொடர்பான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படாமல் கட்சி சார்பான எதிர்ப்புக்களே பதிவு செய்யப்பட்டிருந்தன.

உறுப்பினர் வ.பார்த்தீபன் இந்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்திருந்தாரேயொழிய 2020ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் தொடர்பில் எதுவித கருத்தையும் முன்வைக்கவில்லை. நிதிப் பற்றாக்குறையால் வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்படுதல் நாட்டின் சகல மட்ட வரவு செலவுத்திட்டங்களிலும் காணப்படுகின்றது.

உறுப்பினர் வை.கிருபாகரன் 2018ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் காணப்பட்ட நிலுவை வருமானங்கள் தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். எனினும் இவ்வாண்டில் அறவிடப்பட்ட நிலுவை வருமானங்கள் தொடர்பாகவும் அறவிடமுடியாத நிலுவைகள் தொடர்பில் உரிய காரணங்களும் என்னால் தெரிவிக்கப்பட்டிருந்தன.

உறுப்பினர் மு.றெமீடியஸ் ஆதனவரி மூலமான வருமான அதிகரிப்பின் மூலம் பொதுமக்கள் மீது வரிச்சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டபோதும், ஆதனவரி வீத அதிகரிப்பானது கடந்த வருடம் நவம்பர் 17ஆம் திகதிய நிதிக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டு கடந்த வருடம் டிசெம்பர் 7ஆம் திகதிய சபையின் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதே. எனினும் மேற்கூறப்பட்ட கருத்துக்களைக் கருத்தில் கொண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் மாநகர உறுப்பினர்களின் அபிப்பிராயங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. 28ஆம் திகதி (நேற்று) வரவு செலவுத்திட்ட வரைவை மீளச் சமர்ப்பிப்பதாக தெரிவிக்கப்பட்டு சபை அமர்வு ஒத்தி வைக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

அதன்படி 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வரைவு நேற்று மீளச் சமர்ப்பிக்கப்பட்ட போதும் வரவு செலவுத் திட்டம் தொடர்பாக உறுப்பினர்கள் எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்காமல் வரவு-செலவுத்திட்டத்தைத் தோற்கடித்தனர். வரவு செலவுத்திட்ட வரைவை இறுதியாக்குதல் தொடர்பில் பல்வேறு படிமுறைகளினூடாக உறுப்பினர்களின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டன. எனினும், அவை சமர்ப்பிக்கப்படாமல் வெறுமனே எதிர்ப்புக்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன. இதனால் வரவு செலவுத்திட்டம் தொடர்பாக உறுப்பினர்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை தீர்மானிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரிவு 215 ஏ இற்கமைய என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வரைவு 14 நாள்களின் பின்னர் செயல்வலுப்பெறும்- என்றார். (ம-105)

## வடக்கு...

வடக்கில் மட்டும் மூன்று லட்சத்து 98 ஆயிரத்து 810 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. அதனைவிட கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற இடங்களில் 85 ஆயிரத்தி 150 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. இவற்றின் முளைத்திறன்பற்றி மே மாதத்தில் நடுகை செய்யப்பட்ட இடங்களுக்குச் சென்று ஆய்வு நடத்தப்படும் என்றும் பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது. (ம-17)



ஹொங்கொங் விவகாரம்

## தீர்மானத்தில் கையெழுத்திட்டார் டொனால்ட் ட்ரம்ப்

வோஷிங்டன்,நவ.29

ஹொங்கொங் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டார். ஹொங்கொங் விவகாரத்தில் எந்த நாடும் தலையிட வேண்டாம் என்று சீனா எச்சரிக்கை விடுத்துவரும் நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ஹொங்கொங் விவகாரத்தில் போராட்டக்காரர்களுக் கான ஆதரவை அமெரிக்கா தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாகக் ஹொங்கொங் போராட்டக்கா ரர்கள் மீது தாக்குதல் நடத்திய அந்த நாட்டுப் பொலிஸா ருக்குக் கண்ணீர் புகை குண்டுகள், இறப்பர் குண்டுகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தது அமெரிக்க நாடாளு மன்றம். அந்தத் தீர்மானத்திலேயே ட்ரம்ப் தற்போது க்கையெழுத்திட்டுள்ளார்.





## மானின் வயிற்றில் 7 கிலோ பிளாஸ்ரிக்!

பாங்கொங்,நவ.29

சாவடைந்த காட்டு மான் ஒன்றின் வயிற்றிலிருந்து 7 கிலோ பிளாஸ்ரிக் கழிவுகள் கண்டெடுக்கப்பட்டன. தாய்லாந்தின் வடக்கு பகுதியில் உள்ள குன் சதான் என்கிற தேசியப் பூங்காவில் இருந்த அந்த ஆண் மானின் வயிற்றிலிருந்து பிளாஸ்ரிக் பைகள் உள்ளிட்ட பல பொருள்கள் எடுக்கப்பட்டன.

இந்தப் பிளாஸ்ரிக் பொருள்கள் மானின் உணவுக் குழாயை அடைத்திருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த மான் சாவடைவதற்கு முன்பாக நீண்டகாலமாக பிளாஸ்ரிக்கை உண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. தாய்லாந்தில் இளம் கடல் பசு ஒன்று பிளாஸ்ரிக்கை உண்டதால் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் மூளைச்சலவை செய்யப்படுகின்றனர்

### சீன அரசின் செயல் அம்பலம்?

பீஜிங்,நவ.29

சேவை முறையிலான கல்வி மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றுகூறிச் சீனாவின் மேற்குப் பகுதியில் உள்ள சின்ஜியாங் மாகாணத்தில் உள்ள முகாம்களில் முஸ்லிம் மக்களை அடைத்து வைத்துக் கண்காணித்தபடி சீன அரசு அவர்களை மூளைச்சலவை செய்கிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



உயர் பாதுகாப்புக் கண்கா ணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படு கின்ற குறித்த சிறை முகாம் களில் ஆயிரக்கணக்கான அடைத்து வைத்திருக்கின்ற சீனா எப்படித் திட்டமிட்டு அவர்களை மூளைச் சலவை செய்கிறது என்பதை. வெளி யில் கசிந்துள்ள ஆவணங் கள் அம்பலப்படுத்தியுள்ள தாக அந்தச்செய்தியில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. அங் குள்ள முகாம்களில் முஸ் லிம்கள் எவ்வாறு அடைத்து வைக்கப்பட்டு, கருத்துத் திணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு தண் டிக்கப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகின்ற ஆவணங்கள் வெளி யாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை இந்த ஆவணங்கள் பொய்யானவை என்று பிரிட்ட னுக் கான சீனத் தூதர் கூறியுள்ளார்.

**முஸ்லிம்கள் அடைப்பு**

சின்ஜியாங்மாகாணத்தில்பரவலாகக் கடந்தமூன்றுஆண்டுகளாகஅமைக் கப்பட்டு வரும் முகாம்கள், பயங்கர வாதத்தை ஒடுக்கும் நோக்கில், தன்னார்வத்தின் அடிப்படையில் மறுகற்பித்தல் தேவைகளுக்காக, உருவாக்கப்படுகின்றன என்று சீனா கூறுகிறது. சுமார் பத்து லட்சம் பேர் பெரும்பாலும் முஸ்லிம் வீகர் சமூகத்தவர்கள் விசாரணை ஏதுமின்றி இந்த முகாம்களில் அடைத்து வைக் கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.



கடந்த காலங்களில் வறட்சி நீடித்து வந்த ஆபிரிக்க நாடான சோமாலியாவில் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் மெகாடிசு நகர் வெள்ளக்காடானது.

## வர்த்தகப்போர்தொடர்பான பேச்சுக்கு அமெ. ஆயத்தம்!

வோஷிங்டன்,நவ.29

சீனாவுடனான வர்த்தக உறவுகள் தொடர்பான இறுதிப் பேச்சுகள் விரை வில் இடம்பெறவுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித் தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளைமா ளிகை ஊடகங்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்ததாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதன்படி இரண்டு நாடுகளின் பிரதிநிதி களும அலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சுகளில் ஈடுபட முடிவு செய் துள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்கா விதித்துள்ள வரி சீனப் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் கடந்த 16 மாதங்களாக அமெரிக்காவின் இந்த வரி விதிப்புக் காரணமாகச் சீனாவிலுள்ள அநேகமான தொழிற்சாலைகள் பெரும் நஷ்டமடைந்துள்ளன என சீனாவின் வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித் தது.


இந்த நிலையிலேயே அது சார்ந்த பேச சுத் தொடர்பாக ட்ரம்ப் சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளார் என்று தெரிவிக் கப்படுகிறது.

## மீட்பு பணியில் நாய்கள்

திரானா,நவ.29

அல்பேனியாவில் அண் மையில் ஏற்பட்ட நிலந டுக்கம் அங்கு பெரும் பாதிப்பை அங்கு ஏற்ப டுத்தியுள்ளது. சாவுகள் அதிகரித்துள்ளநிலை யில் பலர் காணாமல் போயுள்ளனர். இந்த நிலையில் அங்குள்ள இடிபாடுகளில் சிக்கி யுள் ளவர்களை மீட்பதற்காக அதற்கெனப் பிரத்தி யோகமாகப் பயிற்றுவிக் கப்பட்ட நாய்கள் பயன்ப டுத்தப்படுகின்றன. இந்த நில நடுக்கம் காரணமா கச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது. 600க்கும் மேற்பட்டவர் கள் காயமடைந்ததாக வும், 20 பேரைக் காண வில்லை என்றும் அல் பேனியாவின் உள்துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.





ஈராக்கில் நடந்து வரும் போராட்டங்களின்போது ஈராக் பொலிஸாரைக் குறிவைத்துப் போராட்டக்காரர்கள் பட்டாசுகளை வீசித்தாக்குதல் நடத்துவருகின்றனர். இந்த நிலையில் பொலிஸார் மீது வீசப்பட்ட பட்டாசு ஒன்று வெடித்துச் சிதறும் காட்சி இது.

# ஈராக் போராட்டத்தில் வன்முறை

## தூதரகம் எரிப்பு; பொலிஸாருக்குக் காயம்

தெஹ்ரான்,நவ.29

ஈராக்கில் உள்ள ஈரானின் தூதரக அலுவலகத்தின் முன் ஏற்பட்ட வன்முறையில் ஈரானின் தூதரகம் தீவைப்புக்கு உள்ளாகியது. இதில் 47 பொலிஸார் காயமடைந்தனர்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:

ஈராக்கின் தென் பகுதியில் இருக்கும் நஜவ்ப் நகரில் உள்ள ஈரானின் தூதரக அலுவலகத்துக்கு முன்பாகப் புதன்கிழமை இரவு வன்முறை வெடித்தது. இதில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் போராட்டக்காரர்கள் ஈரான் தூதரக அலுவலகக் கட்டடத்துக்குத் தீ வைத்தனர். இதைத் தொடர்ந்து கட்டடத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணி



நடந்து வருகிறது. இந்த வன்முறையில் 47 வரையான பொலிஸார் காயமடைந்தனர்.

**ஈராக் போராட்டம்**

ஈராக்கில் ஊழல், வேலையின்மை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அந்த நாட்டின் தலைமை அமைச்சர் அப்துல் மஹ்திக்கு எதிராக 3 வாரங்களுக்கும் மேலாகப் போராட்டம் தொடர்ந்து வருகிறது. அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவரகளில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள். ஈராக்கில் நடக்கும் வன்முறை காரணமாக, ஒவ்வொரு நாளும் போராட்டக்காரர்கள் சாவடைவது தொடர்கதையாகி வருகிறது. ஈராக்கில் நடந்து வரும் போராட்டத்தில் இதுவரை 319 பேர் சாவடைந்துள்ளனர்.

# கோட்சே குறித்த கருத்தால் இந்தியாவில் பதவி நீக்கம்

புதுடெல்லி,நவ.29

இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடியவர் என்று அறியப்படும் மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றவரான கோட்சேவை தேச பக்தர் என்று கூறியதை அடுத்து மக்களவை பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஆலோசனை குழுவிலிருந்து ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். குறித்த குழுவில் அண்மையில் நியமிக்கப்பட்ட பிரக்யா தாக்கூர் என்பவரே இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டார். மக்களவையில் கடந்த புதன்கிழமை நடந்த விவாதத்தின் போது பேசிய தி.மு.க மக்களவை உறுப்பினர் ஆ. ராசா, 'நாதுராம் கோட்சே அவர் கொண்டிருந்த சித்தாந்தத்தின் காரணமாக மகாத்மா காந்தியின் மீது காழ்ப்புணர்ச்சியில் இருந்தார். அதனால்



தான் அவரைக் கொல்வதற்கு முடிவெடுத்தார்' என்று குறிப்பிட்டார். அப்போது குறுக்கிட்ட பிரக்யா சிங் தாக்கூர், 'தேசபக்தரை நீங்கள் உதாரணமாகக் குறிப்பி டக்கூடாது' என்றார்.

அவருடைய பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது. மக்களவையில் பிரக்யா தாக்கூரின் கருத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்த நிலையிலேயே பிரக்யா தாக்கூர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

# தமிழகத்துக்கு மழை எச்சரிக்கை!

புதுடெல்லி,நவ.29

இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் அடுத்த மூன்று நாள்களுக்கு பெரும்பாலான இடங்களில் தொடர் மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. கடலோர, வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேலடுக்குச் சுழற்சியின் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நவம்பர் 30, டிசம்பர் 1, 2 ஆகிய திகதிகளில் மழையும் கடலோர மாவட்டங்களிலும் அதனை ஒட்டிய உள் மாவட்டங்களில் கடும் மழையும் பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் புவியரசன் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்தில் எதிர்வு கூறப்பட்டுள்ள இந்த வானிலை இலங்கையின் வடபகுதியிலும் பிரதிபலிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.



# இன்றைய நாள்

**மேடம்:** சுற்றுப்புற சூழல் தொந்தரவு தரலாம். லட்சியங்களை உணர்ந்து செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நேரத்திற்கு உணவு உண்பதால் உடல் நலம் பாதுகாக்கலாம்..

**இடபம்:** முன்னர் உங்களுக்கு எதிராக செயல்பட்டவர் விலகுகிற நன்னிலை உருவாகும். தொழிலில் உற் பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். ஆதாய பணவரவுகிடைக்கும்

**மிதுனம்:** பகைமை குணம் உள்ளவர் உங்களை அவமதித்து பேசுவார். பெருந்தன்மை குணத்துடன் விலகுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** சிந்தனையில் புதிய மாற்றம் உருவாகும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி பெறலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாகும். சேமிக்கும் அளவில் பண வரவு கிடைக்கும்.

**சிம்மம்:** அவசர பணி உருவாகி சிரமம் தரலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். பணவரவைவிட செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கன்னி:** சிலரது பேச்சு சங்கடம் உருவாக்கும். சொந்த பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். அத்தியாவசிய செலவுக்கு கொஞ்சம் பண கடன் பெறுவீர்கள்.

**துலாம்:** உங்களின் திறமையை வளர்த்து கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். தாராள பண வரவு கிடைக் கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

**விருச்சிகம்:** உங்கள் பேச்சு, செயலில் நிதானம் அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். அள வான பண வரவு உண்டு.

**தனுசு:** புதிய பணிகள் குறுக்கிடலாம். தெய்வ நம்பிக்கையால் உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மகரம்:** உங்களின் கருத்தை குடும்ப உறுப்பினர்கள் ஏற்க தயங்குவர். தொழிலில் உள்ள அனுகூலத்தை பாது காக்கவும். அளவான பண வரவு கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** சிறு பணியும் நேர்த்தியாக அமைந்து அதிக நன்மை பெறுவீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். லாப விகிதம் அதிகரிக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். இனிய நிகழ்வுகளை பேசி மகிழ்வீர்கள். தொழிலில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பண வரவு கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

### தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டில்

# கொழும்புத்துறை இந்து மாணவி சாருகா ஓர் தங்கம், ஓர் வெண்கலம் வென்றார்



யாழ்ப்பாணம், நவ.29

கல்வி அமைச்சால் முதன் முறையாக நடத்தப்பட்ட தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டு போட்டியில் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவி சாருகா கமலநாதன் ஓர் தங்கம், ஓர் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இடம்பெற்ற 18வயதுப் பிரிவினருக்கான நின்று நீளம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், பந்து எறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டதுடன் 75 மீற்றர் ஓட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். (17-23)




# நான் மரியாதையை பெறுவதற்காக ஆடவில்லை

### கிறிஸ் கெய்ல் ஆதங்கம்

மேற்கிந்தியத்தீவுகளின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் தென்னாபிரிக்காவில் நடைபெறும் மான்சி தொடரில் இருந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் மான்சி சுப்பர் லீக்கில் விளையாடினார். முதல் ஆறு போட்டிகளில் விளையாட நடப்பு சம்பியன் ஜோசி ஸ்டார்ஸ் அணி யுடன் ஒப்பந்தம் செய்திருந்தார்.

அந்த அணி 6 போட்டிகளில் விளையாடி ஒன்றில் கூட வெற்றி பெறவில்லை. கடந்த வாரம் நடைபெற்ற 6 ஆவது போட்டியில் கிறிஸ் கெய்ல் அரைச்சதம் அடித்தாலும் அந்த அணி வெற்றி பெறவில்லை.

இதனால் சோகத்துடன் வெளியேறும் கிறிஸ் கெய்ல், நான் சில போட்டிகளில் விளையாடவில்லை என்றால், அணிக்கு சுமை யாகி விடுவேன் என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; நான் இந்த அணியைப் பற்றி மட்டும் பேசவில்லை. கடந்த சில வருடங்களாக விளையாடி வரும் எல்லா அணிகளையும் பற்றி இந்த விடயத்தை பற்றி ஆராய்ந்துள்ளேன். ஒன்றிரண்டு போட்டிகளில் நான் விளையாடவில்லை என்றால், நான் அவர்களுக்கு சுமையாகிவிடுகி றேன்.

நான் மரியாதையை பெறுவதற்க்க செல்லவில்லை. மக்கள் அவர்களுக்காக என்ன செய்தோம் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க மாட்டார்கள். எனக்கு மரியாதை கிடைக்கவில்லை.

நான் அந்த அணியை பற்றி பேசவில்லை. நான் பொதுவாக பேசுகிறேன். ஒரு வீரர், நிர்வாகம், தலைமை நிர்வாகம், சபை உறுப்பினர் என பேசுகிறேன். ஒருமுறை விளையாடவில்லை என்றால், அவர் நன்றாக விளையாடவில்லை என்கிறார்கள். மோசமான வீரர் என்று பேசத் தொடங்கி விடுகிறார்கள். இது போன்ற விடயங்களை நான் எப்போதுமே ஒதுக்கிவிடுவேன்- என்றார்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.சி.சி.சி. கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு மின் ஒளியில் இடம்பெறவுள்ளது. இதில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## கூடைப் பந்தாட்ட தொடர்

யாழ்ப்பாணம், நவ.29

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப்பந்தாட் டத் திடலில் இடம் பெறவுள்ளது. இதில் 2 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை ஆண்களுக்கான போட்டியும், 9 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை பெண்களுக்கான போட்டியும் இடம் பெறவுள்ளது. (23)

## உயரம் பாய்தலில் சுவர்ணாவுக்கு வெள்ளி



யாழ்ப்பாணம், நவ.29

இலங்கை பாடசாலைகள் மெய் வன்மைச் சங்கம் நடத்தும் 50ஆவது கனிஸ்ர பிரிவினருக்கான சேர்.ஜோன் ரப்பட் மெய்வன்மைப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி எஸ்.சுவர்ணா வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி எஸ்.சுவர்ணா 1.42 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (23)'


## தட்டெறிதலில் சுஜிஸ்ரனுக்கு வெள்ளி



யாழ்ப்பாணம், நவ,29

இலங்கை பாடசாலைகள் மெய் வன்மைச் சங்கம் நடத்தும் 50ஆவது கனிஸ்ர பிரிவினருக்கான சேர். ஜோன் ரப்பட் மெய் வன்மைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சுஜிஸ்ரன் 39.80 மீற்றர் தூரம் ஏறிந்து வெள்ளிப்பதக்கத்தைச் சுவீகரித்தார். (23)



# திருமணத்துக்கு முன்பு அனைத்து ஆண்களும் சிங்கம்தான் - டோனி

திருமணத்துக்கு முன்பு வரை அனைத்து ஆண்களும் சிங்கம் தான் எனத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் மகேந்திரசிங் டோனி.

டோனி தனது இல்லற வாழ்க்கை குறித்து மனந் திறந்தார். இதன்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவிக்கையில்;

திருமணத்துக்கு முன்பு வரை அனைத்து ஆண்களும் சிங்கம் தான். நானும் ஏனைய கணவர்களைப் போல ஒருவன் தான். என்னுடைய மனைவி என்ன விரும்புகிறாரோ அதனை செய்ய நான் அனுமதி வழங்கி விடுவேன். ஏனென்றால் என்னுடைய மனைவி மகிழ்ச்சியாக இருந்தால் தான் நான் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

அதேபோல் என் மனைவி கூறும் எல்லா விடயத்துக்கும் சரி என்று சொன்னால் தான் அவர் மகிழ்ச்சியாக இருப்பார். ஆகவே தான் நான் அவர் நினைப்பதை செய்ய விட்டுவிடுவேன். திருமண வாழ்க்கையின் முக்கிய படலமே 50 வயதுக்கு பிறகுதான். ஏனென்றால் நீங்கள் 55 வயதை கடந்து விட்டால் தான் உங்களுக்கு உண்மையாக காதல் வயது வரும். அந்த வயதில்தான் நீங்கள் உங்களுடைய வழக்கமான வாழ்க்கையிலிருந்து விடுபட்டு இந்த விடயங்களை பற்றி யோசிக்க ஆரம்பிப்பீர்கள் - என்றார்.

### தீவுகளுக்கு எதிரான தொடர்:

# ஷிகர் தவானுக்கு காயம் சஞ்சு சாம்சன் இணைப்பு

மேற்கிந்தியத்தீவுகள் தொடருக்கான இந்திய அணியில் இலக்குக் காப்பாளர், துடுப்பாட்ட வீரர் சஞ்சு சாம்சன் இணைக்கப்பட்டுள்ளார்.

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான இந்திய அணியில் ஷிகர் தவான் இடம் பிடித்திருந்தார். தவான் சையத் முஷ்டாக் அலி டிராபியில் டெல்லி அணிக்காக விளையாடினார். மகாராஷ்டிரா அணிக்கெதிரான போட்டியில் விளையாடும் போது காயம் ஏற்பட்டுள்ளது. காயம் குணமடைய அதிக நாட்கள் எடுத்துக் கொள்ளும் என்பதால் அவருக்குப் பதிலாக சஞ்சு சாம்சன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



## மத்தியூஸை தொடர்ந்து சந்திமால்

பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் முன்னாள் தலைவர் தினேஷ் சந்திமால் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போர்ட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி விளையாடவுள்ளது.

இந்தத் தொடருக்கான அணியில் முன்னாள் தலைவர்களான தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் உள்வாங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெஸ்ட் தொடரில் இடம் பெறவுள்ள இலங்கையின் மூத்த வீரர்கள் பலர் இதற்கு முன்னர் பாகிஸ்தானில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தைபே, சிந்து 77 லட்சத்துக்கு ஏலம்

பிரீமியர் பூப்பந்தாட்ட லீக்கின் 5ஆவது பருவ காலம் அடுத்த வருடம் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் 7 அணிகள் கலந்து கொள்கின்றன.

இதில் ஹைதராபாத் ஹென்ட்டர்ஸ் அணி பி.வி.சிந்துவை 77 லட்சத்துக்கு ஏலம் எடுத்து அவரை மீண்டும் தக்க வைத்துக் கொண்டது.

பலத்த போட்டிகளுக்கிடையே உலகின் முதல் நிலை வீராங்கனையான சீனாவின் தைபேவின் டாய் ஸு யிங்கை 77 லட்சத்துக்கு ஏலம் எடுத்தது நடப்பு சம்பியனான பெங்களூரு ராப்டர்ஸ் அணி.

### கொர்ன்வோல் தொடர்ந்து அசத்தல்

# வெற்றியை நோக்கி நகரும் மே.இந்தியத்தீவுகள் அணி

லக்னோவில் நடைபெற்று வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி திணறி வருகிறது. ஆப்கான் அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 3 இலக்குகள் கைவசமிருக்க 19 ஓட்டங்களே முன்னிலையில் உள்ளது.


மேற்கிந்தியத்தீவுகள் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் ஆப்கான் அணி வெற்றி பெற்றது. 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தீவுகள் அணி முதலில் ஆப்கானிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தனர். தனது முதல் இன்னிங்ஸில் ஆப்கான் அணியின் 187 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்குக் தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய மேற்கிந்தீவுகள் அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது.



கம்வெல் 30 ஓட்டங்களுடனும், புறூக்ஸ் 19 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் இணைந்து சிறப்பானதொரு இணைப்பாட்டத்தை அணிக்கு வழங்கினர். கம்வெல் 55 ஓட்டங்களைப் பெற்ற போது அமீர் ஹம்சாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் களமிறங்கிய ஹிட்மயர், சேஸ் அணிக்கு ஏமாற்றமளித்தனர். மறுமுனையில் புறூக்ஸ் தனியொருவராக போராட ஆரம்பித்தார். பின்னர் களமிறங்கிய டௌறிச், புறூக்ஸ் இணை ஓரளவு சிறப்பாக ஆடினர். மறுமுனையில் புறூக்ஸ் சதம் கடந்தார். அவர் 15 நான்கு ஓட்டங்கள், ஓர் ஆறு ஓட்டம் அடங்கலாக 111 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டௌறிச் 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்ப அணி 277 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.



பந்து வீச்சில் அமீர் ஹம்சா 5 இலக்குகளையும், ரசிட்கான் 3 இலக்குகளையும், சகீர்கான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாம் இன்னிங்ஸுக்காக் களமிறங்கிய ஆப்கான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைச் சேர்த்தனர். முதல் இலக்காக சட்ரன் 23 ஓட்டங்களில் கொர்ன்வோலின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த 3 வீரர்களும் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது அடுத்தடுத்து ஆட்டமிழக்க அணி தடுமாற ஆரம்பித்தது. மறுமுனையில் அகமெட் தனியொருவராக ஆட ஆரம்பித்தார். அவர் அரைச் சதம் கடந்து 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அணி நேற்றைய நாள் முடிவில் 7 இலக்குகள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப்பெற்றது. பந்துவீச்சில் கொர்ன்வோல், சேஸ் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

# ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் இரண்டாவது டெஸ்ட் இன்று

ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி அடிலெய்டுவில் இன்று ஆரம்பமாகின்றது.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது.

இரு அணிளுக்கும் இடையேயான மூன்று ரி-20 தொடரை ஆஸ்திரேலியா அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதல் டெஸ்ட் போட்டியை ஆஸ்திரேலியா அணி கைப்பற்றியது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.



இந்த டெஸ்டில் பாகிஸ்தானை மீண்டும் வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி தொடரை வெல்லுமா? முதல் டெஸ்டில் மார்கஸ், வோர்னர் சதம் அடித்து அணிக்கு பலம் சேர்த்தனர். பந்து வீச்சில் ஸ்டார்க், , ஹாசல்வுட், கம்மின்ஸ் ஆகியோர் சிறப்பாக பந்து வீசியிருந்தனர்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்கு பதிலடி கொடுத்து தொடரை சமப்படுத்தும் ஆர்வத்தில் உள்ளது. ஆனால் அந்த அணி துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் சிறிது பலவீனமாகவே காணப்படுகின்றது. பாபர் அசாம், முகமது ரிஸ்வான் ஆகியோர் மட்டுமே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தனர். இந்த டெஸ்டில் வெற்றி பெற்றால் ஆஸ்திரேலியா அணி ஐ.சி.சி. உலக சாம்பியன்ஷிப் பட்டியலில் 176 புள்ளிகளை எட்டும்.

# விசா முடிவடைந்ததால் சயிப் ஹசனுக்கு தண்டம்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சயிப் ஹசன் தன்னுடைய விசா காலம் முடிந்த பின்பும் இந்தியாவில் தங்கி இருந்ததால், அவருக்கு இந்திய அரசால் தண்டம் விதிக்கப்பட்டது. அவர் 21 ஆயிரத்து 600 ரூபா அபராதத்தைச் செலுத்திவிட்டு விமானம் மூலம் பங்களாதேஷக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## ENGLISH CLASS

* உங்கள் வீடுகளிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
* தரம் 06 தொடக்கம் 11 வரை
* பல வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால்

M.Sivathasan ( English - SP Trained, Dip in English, University of Jaffna.)

T.P:- 077 024 0559 (முன்னாள் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

## ஐடியல் அக்கடமி

485, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**தரம் 6 முதல் O/L வரை**

**கல்வியாண்டு - 2020**

ஆரம்பம் 30.11.2019 சனி 3.00 Pm

தமிழ்மொழி மூலம் 6 - 11

ஆங்கில மொழி மூலம் 6, 7, 8

## காணவில்லை

**விபரம் தரவும்**



**பெயர் :- சந்திரமதி அமிர்தசிங்கம்**

**வயது:-** 78

**உயரம் :-** 4' 10"

**நிறம் :-** பொதுநிறம்

**காணாமல் போன அன்று உடை -** மஜந்தா நிற House coat

**காணாமல் போன திகதி :-** 27.11.2019 புதன்கிழமை 4.30 pm

(CS/29572) (11,17)

**தொடர்பு:- 077 766 8486 (மகன்)**

## SLAS Open & Limited

உமாசங்கர்& வளவாளர்கள் மீட்டல் கருத்தரங்கு தொடர் 05

- பொதுஅறிவு → ஸ்ரீதீவன்
- நுண்ணறிவு → உமாசங்கர்
- முகா. உளச்சார்பு → குருபரன்
- விடய ஆய்வு - சிவராசா

01/12/2019 ஞாயிறு 9am- 4.30 pm

"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"

G.K Essay, SL World நூல் பெற்றுக்கொள்ளலாம்.

நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

076 166 1986, 077 741 7143

## SLAS

**விசேட வகுப்புக்கள்**

- மாதிரி வினாத்தாள்கள்
- மாதிரிப்பரீட்சைகள்

சனி (30.11), ஞாயிறு (1.12)

9.30- 3.30 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்

8.30 - 9.30 மாதிரி பரீட்சைகள்

விரும்பியவர்கள் பங்குபற்ற முடியும்

விரிவுரையாளர் தவசேகருடன் துறைசார் வளவாளர்கள்

0766883394

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு

(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் மன் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

## NEC கல்வி நிறுவனம்

(யாழ்நகரின் வர்த்தகப்பிரிவிற்கான No1 கல்வி நிறுவனம்)

ஆனைப்பந்தி | மணிக்கூட்டுக்கோபுர வீதி

**A/L 2020, A/L 2021**

பிரிவுகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணக்கீடு : Mr.K Balakajan

வணிகக்கல்வி : திரு S.K பாலசுபேஷ்

பொருளியல் : திரு. S. ஜெயகுமார். திரு V. ஜெகதீஸ்

தகவல் தொழில் நுட்பம் : T.தேவதர்ஷன்

ஆரம்பம் : - 01/12/2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி

- கடந்தகால பெறுபேறுகள் Rank 01 உட்பட
- விடுமுறை கால நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- நீங்கள் விரும்பிய பாடங்களை கற்பதற்கு அனுமதி உண்டு.

077 469 6695, 077 674 0450, 076 003 2511

## Group & Personal Class

123/2 கோயில் வீதி யாழ்ப்பாணம்

**கல்வியாண்டு - 2020**

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

**தரம் 6 - O/L வரை**

ஆரம்பம் : 02.12.2019

திங்கள் 3.00 PM

(பொஸ்கோவில் இருந்து 100m இராசம்மா திருமண மண்டபமருகில்)

Contact: 077 667 9544, 076 343 2521

## புதிய கல்வியாண்டு - 2020

அனுபவம் வாய்ந்த முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் **30.11.2019** (சனிக்கிழமை)

* தரம் 6,7,8 காலை 7.00 மணி
* தரம் 9,10,11 மாலை 4.00 மணி
* English Medium Gr 6 & Gr 10
* Gr 3-11 வரையான வகுப்புக்கள்

SCIENCE GUIDE CENTRE

116/2, Rasavinthodda Veethy, Nallur.

## SLAS கருத்தரங்கும் மாதிரிப்பரீட்சையும்

30.11.2019 சனி 9AM

P.கமல்தாசன் மற்றும் வளவாளர் 9Am - 2Pm

RC . அமல்ராஜ் - விடய ஆய்வு

S.தினேஸ் - மு. விவேகம்

2.00 Pm மாதிரிப்பரீட்சை

ஆக்கபூர்வமான பகுப்பாய்வு

நாவலர் கல்விநிறுவனம் ஆனைப்பந்தி

077 111 6739, 076 166 1986

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

**தரம்: 3 முதல் O/L வரை**

**கல்வியாண்டு - 2020**

ஆரம்பம் **01.12.2019** ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணி

தொ.பே.: 77 459 8440

## பொருளியற்கல்லூரி

யாழ். கிளை நிறுவனம்

கே. கே. எஸ் வீதி சுன்னாகம்

(M.M மண்டபம் அருகாமை)

**புதிய வகுப்புக்கள்**

தமிழ் மொழி மூலம்

தரம் 9-11 வரை

ஆரம்பம் - 02.12.2019

திங்கள் - 3.00P.m

**English Medium**

(ஆங்கில மொழி மூலம்)

தரம் 6-11 வரை

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்களினால்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 02.12.2019 திங்கள் 3.00 Pm

உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்

மேலதிக விபரங்களிற்கு 077 376 3511

-நிர்வாக இயக்குநர்-

## அறிவாலயம்

தெல்லிப்பழை

**2020**

**புதிய கல்வியாண்டுக்கான வகுப்புக்கள்**

**ஆரம்பம் : 30.11.2019 சனிக்கிழமை காலை 8.00 மணி**

- முன்பள்ளி முதல் தரம் 11 வரை

குறிப்பு :- 2020 தரம் 6 இல் கல்வி கற்க உள்ளோருக்கான ஆங்கில மொழி மூல வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

- தனி மாணவர் ஒழுக்கமும் தேர்ச்சியும்
- வாராந்த மற்றும் மாதாந்த பரீட்சைகள்
- வினாவிடை வகுப்புக்கள்

தொடர்பு : - நிர்வாகம் 077 828 0900

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

கொக்குவில் • மல்லாகம்

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

புதிய கல்வியாண்டு

**2020**

02.12.2019

திங்கட்கிழமை மாலை 3.30 மணி

**குறிப்பு:**

தரம்- 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புக்களும் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்

"அகரம் ஏம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## BARATHY

சித்தன்கேணி

தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

தரம் 6 முதல் 11 வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

01.12.2019 ஞாயிறு 7.30 a.m

**இந்த ஆண்டு முதல்**

**English Medium**

தரம் 6-11 வரை

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்களினால்

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

**Note** : - விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெற உள்ளதால் உங்கள் அனுமதிகளை தாமதியாது உடன் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு 077 376 3511

-நிர்வாக இயக்குநர்-

## மரண அறிவித்தல்

### நகுலாம்பிகை ஜெகதீசன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கிறீன் ஆஸ்பத்திரி லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலாம்பிகை ஜெகதீசன் நேற்று **(28.11.2019)** வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஜெகதீசன் (முன்னாள் தலைவர், அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.ச) அவர்களின் அன்பு மனைவியும் கலைமதி, கலைச்செல்வன், கலைவாணி, கலையரசி, கலைஜெனனி ஆகியோரின் கலைஜெனனி ஆகியோரின் அன்புமிகு தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS29585(26/17)

கிறீன் ஆஸ்பத்திரி லேன், மானிப்பாய்.

தகவல்:- குடும்பத்தினர் 021 225 6044

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.